தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 239

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## ஒன்பதாம் தொகுப்பு

(வைத்தியப் பகுதி)



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலையம்

1986

விலை ரூ 8-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் 239.

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## ஒன்பதாம் தொகுப்பு

**(வைத்தியப் பகுதி)**

*பதிப்பாசிரியர்கள் :*

திரு. புலவர். **வீ. சொக்கலிங்கம்**

தமிழ்ப் பண்டிதர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

&

திரு. **து. முரளி**, தஞ்சாவூர்.

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூல் நிலையம்**

*1986]* *[விலை ரூ 8-00*

முதற்பதிப்பு : 1986

வெளியீடு :-

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்

தஞ்சாவூர்.

பதிப்பகம் :

ஜெமினி அச்சகம்

மேலவீதி தஞ்சாவூ

# வெளியிடுவோர் முன்னுரை

மனிதன் நோயற்று வாழ்ந்தால், அதுவே அவனுக்குப் பெருஞ்செல்வமாகும். ஊழ்வினையினால் நோய்வரின் அவற்றைப் போக்க மருத்துவம் தேவை. அவ்வாறு கண்ட மருத்துவங்கள் ஓலைச் சுவடிகளில் தேங்கி, எமது சரசுவதி மகாலில் உள்ளன. அவைகள் 3, 4, 5, 8 ஆகிய தொகுதிகளாக முன்னரே வெளிவந்துள்ளன.

இந்த ஒன்பதாவது தொகுதியினை, எமது முன்னாள் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்களும், திருவாளர் து. முரளி அவர்களும் இணைந்து செம்மைப்படுத்தியுள்ளார்கள். அன்னார் இருவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகிறது.

இந்த ஒன்பதாம் தொகுதி வெளிவரப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த தஞ்சை, ஜெமினி அச்சகத்தாருக்கும் ஏனையோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிய சுவடிகள், புத்தகங்கள் வைத்திருப்போர், அவற்றை எமது நூலகத்தில் சேர்த்து, தாம் புகழடைவதோடு, மற்றவர்க்கும் அவை பயன்பட உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்
1—7—1986

து. இரா. இராமசாமி, இ. ஆ. ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று வாழ்த்துவர் பெரியோர். இப்பதினாறு வகையான செல்வங்களுள் ஒன்று தான் 'நோயின்மை'. நோயின்றி வாழ்தலே சிறந்த செல்வம். எவ்வளவுதான் படித்திருந்தாலும், செல்வம் பெற்றிருந்தாலும் உடல் நன்னிலை (ஆரோக்கியம்) இல்லையானால், அவன் நல்வாழ்வு வாழ இயலாது. 'உடன் பிறந்தே கொல்லும் நோய்' என்பர் புலவோர்.

நோய் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஊழ்வினை, தீயொழுக்கம், தூய்மையின்மை, தீமை பயப்பவற்றைத் தெரிந்திருந்தும் உண்பது முதலானவற்றால் நோய்கள் வரும். இவற்றைப் போக்கும் வழிகள் பல உள. இவற்றை, நம் முன்னோர்கள் கண்டனர். தம் அனுபவத்தைக் கூறியும், ஏட்டில் எழுதியும் வழி வழி பழக்கியும் வந்தனர். அவ்வாறு பனை ஓலைகளில், ஏட்டுச்சுவடிகளாக எழுதப்பட்ட நூல்கள் ஏராளம். அவற்றுள் பல, நமது சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இடம் பெற்றுள்ளன.

அவற்றுள், இதுவரை 365 சுவடிகள் 730 தலைப்புக்களில் 3, 4, 5, 8 ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1, 2, 6, 7 ஆகியவை இலக்கியங்கள்.

தற்போது, 9-வது தொகுப்பு வெளிவருகின்றது. இதில், சுவடி எண் 366 முதல் 430 வரை (D/எண். 731-903) உள்ள சுவடிகளின் விளக்கங்கள் அடங்கியுள்ளன. சுவடிகளின் உட்பிரிவுகள் (a), (b), (c) எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை அடுத்தும் வைத்தியச் சுவடிகளின் விளக்கங்கள் வெளிவரத் தயாராகி வருகின்றன.

இதனை வெளியிடப் பொருளுதவி செய்த நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எமது மகால் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருவாளர் து. இரா. இராமசாமி, இ.ஆ.ப. அவர்கட்கும், நூல் நிலைய நிருவாக

*அதிகாரி பொறுப்பு, திருவாளர் அ. பஞ்சநாதன், எம்.ஏ.,பி.லிப்.சி. அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த, தஞ்சை, ஜெமினி அச்சகத்தாருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

*இதில்காணும் குற்றம் களைந்து குணம்பொருந்தி வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன். அரிய ஓலைச்சுவடிகளைத் தம்மிடம் வைத்திருப்போர், அவற்றை எம்மிடம் தந்து, தங்கள் பெயரை நிலைநாட்டிப் புகழுடைவதோடு, மற்றவர்கட்கும் அது பயன்படச் செய்வார்கள் என நம்புகிறோம்.*

இங்ஙனம்
**புலவர். வீ. சொக்கலிங்கம்**
தமிழாசிரியன் (ஓய்வு)
சரசுவதிமகால் நூலகம்.
&
து. முரளி

தஞ்சாவூர்
16—7—86

# பொருளடக்கம்

நூற்பெயர் | பக்கம்

## அ


| நூற்பெயர் | பக்கம் |
|---|---|
| அகத்தியர்—16 | 96 |
| அகத்தியர்—80 | 13 |
| அகத்தியர்—500 | 31 |
| அகத்தியர் ஆயுர்வேதம் | 61 |
| அகத்தியர் இந்திரஜால வெண்பா | 107 |
| அகத்தியர் உடல் கரு சூத்திரம்—48 | 116 |
| அகத்தியர் கர்ம காண்டம்—300 | 85 |
| அகத்தியர் கலைக்கியானச் சுருக்கம்—12 | 7 |
| அகத்தியர் கலைக்கியானச் சுருக்கம்—120 | 5 |
| அகத்தியர் கலைக்கியானச் சுருக்கம்—120 | 117 |
| அகத்தியர் கன்மகாண்டம்—300 | 34 |
| அகத்தியர் கன்ம சூத்திரம்—300 | 84 |
| அகத்தியர் கேசரி வித்தை | 109 |
| அகத்தியர் கௌமதி நூல் | 69 |
| அகத்தியர் சாலத்திரட்டு—முதற்காண்டம் | 90 |
| ,, ,, இரண்டாங் காண்டம் | 91 |
| ,, ,, மூன்றாங் காண்டம் | 92 |
| ,, ,, நாலாங் காண்டம் | 93 |
| ,, ,, நாலாங் காண்டம் | 44 |
| அகத்தியர் கால நிகண்டு 200 | 106 |
| அகத்தியர் சுருக்கம் — 12 | 98 |
| அகத்தியர் சூத்திரம் — 36 | 26 |
| ,, ,, — 80 | 24 |
| அகத்தியர் தசவித வழலை | 10 |
| அகத்தியர் தத்துவம் — 308 | 50 |
| அகத்தியர் திராவகம் — 800 | 108 |
| அகத்தியர் தீட்சை விதி — 200 | 24 |
| அகத்தியர் பரிபாஷை—1 முதல் 5 காண்டங்கள் | 115 |
| அகத்தியர் பரிபூரணம் — 400 | 18 |
| அகத்தியர் பலதிரட்டு வாகடம் | 83 |
| அகத்தியர் பாடல் சிவகுளிகை — 8 | 37 |
| அகத்தியர் பிரகரண நூல் | 107 |

அகத்தியர் பின்னூல் — 80 ... ... ... 87
அகத்தியர் பூரண காவியம் — 1000 ... ... ... 111
அகத்தியர் பூரண சூத்திரம் ... ... ... 14
அகத்தியர் ,, ,, — 48 ... ... ... 43
அகத்தியர் ,, ,, — 216 ... ... 114, 22
அகத்தியர் பெருநூல் — 2-ங் காண்டம் ... ... 104, 57
,, ,, 3-ங் காண்டம் ... ... ... 99
,, ,, 4-ங் காண்டம் ... ... ... 99
அகத்தியர் மாய ஊஞ்சல் ... ... ... 54
அகத்தியர் முப்பு — 6 ... ... ... 117
அகத்தியர் முப்பு — 16 ... ... ... 110
அகத்தியர் முப்பு — 50 ... ... ... 115
அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் ... ... 33, 47 ; 80
அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் — 360 ... ... ... 85
அகத்தியர் வகாரம் — 30 ... ... ... 116
அகத்தியர் வல்லாதி — 600 ... ... ... 70
அகத்தியர் வாசி — 10 ... ... ... 55
அகத்தியர் வாதகாவியம் — 3-ங் காண்டம் ... ... ... 94
அகத்தியர் வாத சூத்திரம் — 100 ... ... ... 94
அகத்தியர் வைத்திய பரிபூரணம் — 400 ... ... ... 87
அகத்தியர் வைத்திய பூரணம் — 205 ... ... ... 34
அகத்தியர் ,, ,, — 400 ... ... ... 41
அகத்தியர் வைத்தியம் ... ... ... 82
அகத்தியர் ,, — 150 ... ... 87, 42
அகத்தியர் ,, — 205 ... ... ... 85
அகத்தியர் ,, — 300 ... ... ... 2
அகத்தியர் ,, — 630 ... ... ... 81
அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம் ... ... ... 29
அகத்தீசர் கலைஞான சூத்திரம் — 200 ... ... ... 4
அவ்வையார் இரத்தினச் சுருக்கம் — 18 ... ... ... 75
அனுபவ வைத்தியம் ... ... ... 90
அஷ்ட கர்ம சூத்திரம் — 105 ... ... ... 105

இ

இராமதேவர் — 30 ... ... ... 65
இராமதேவர் அட்டாங்க பட்சணி — 51 ... ... ... 65
இராமதேவர் சிவயோகம் — 200 ... ... ... 53
இராமதேவர் சிவயோகம் — 201 ... ... ... 63

| | |
|---|---|
| இராமதேவர் சுருக்கம் — 50 ... ... ... | 52 |
| இராமதேவர் சூத்திரம்—300-ல் கருந்துளசி ... ... ... | 98 |
| இராமதேவர் தண்டகம்—110 ... ... ... | 64 |
| இராமதேவர் பரிபாஷை ... ... ... | 66 |
| இராமதேவர் பெருநூல்—1000-ல் சொல்லியது ... ... ... | 97 |
| இராமதேவர் வைத்தியம்—10 ... ... ... | 83 |
| இராமதேவர் ,, —81 ... ... ... | 63 |
| இராமதேவர் ஜோஸியம் ... ... ... | 66 |

### எ

| | |
|---|---|
| எண்ணெய் வர்க்க வெண்பா—70 ... ... ... | 113 |
| எல்லசிங்கன் செட்டியார் பாடல்—கல்ப்பம் ... ... ... | 89 |

### க

| | |
|---|---|
| கம்பளிச்சட்டை கைலாசநாதர் நிகண்டு — 1212 ... ... ... | 113 |

### கா

| | |
|---|---|
| காலாங்கி வைத்தியம் ... ... ... | 71 |

### கு

| | |
|---|---|
| குணவாகடம் ... ... ... | 45 |
| கும்பமுனி சாமியார் பாடல் — 12 ... ... ... | 115 |
| கும்பமுனி பெருநூலில் — 50 ... ... ... | 30 |
| குருநாடி ... ... ... | 48 |

### கொ

| | |
|---|---|
| கொங்கணர் கடைக்காண்டம் ... ... ... | 50 |
| கொங்கணர் சூத்திரம் — 10 ... ... ... | 23 |
| கொங்கணர் ஞானம் ... ... ... | 56 |
| கொங்கணர் பாடல் கருக்குளிகை — 8 ... ... ... | 38 |

### ச

| | |
|---|---|
| சட்டைமுனியார் நிகண்டு முதலிய வைத்திய அட்டவணை ... ... ... | 79 |
| சதாசிவம் வாத சூத்திரம் - திறவுகோல் ... ... ... | 73 |
| சரபேந்திரர் விஷ வைத்தியம் ... ... ... | 11 |
| சருவகோடா குளிகை ... ... ... | 70 |
| சவுரியானந்தர் குழம்பு அறிதல் ... ... ... | 76 |

### சு

| | |
|---|---|
| சுந்தரானந்தர் சூத்திரம் ... ... ... | 58 |
| சுந்தரானந்தர் சூத்திரம்—25 ... ... ... | 73 |

சுருபானந்தர்—500-ல் கடைசி பாடல் ... ... ... 76
சுன்னக்கல் — 16 ... ... ... 20

**செ**

செந்தூரம்— கட்டு முறை ... ... ... 78

**த**

தட்சிணாமூர்த்தி—10 ... ... ... 116
தட்சிணாமூர்த்தி கலை ஞானம்—1200 ... ... ... 3
தட்சிணாமூர்த்தி சுருக்கம்—6 ... ... ... 4, 7
தட்சிணாமூர்த்தி சூத்திரம் – கலைஞானம்—60 ... ... ... 6
தட்சிணாமூர்த்தி சௌமிய சாகரம்—
அட்டவணை ... ... ... 28
தட்சிணாமூர்த்தி தந்தீ—8 ... ... ... 110
தட்சிணாமூர்த்தி பூரண பூசாவிதி ... ... ... 20
தட்சிணாமூர்த்தி பெருநூல்—1200 ... ... ... 9
தட்சிணாமூர்த்தியான அகத்தியர்
பூசாபதியான சூத்திரம் ... ... ... 44
தட்சிணாமூர்த்தி வகாரம்—2-ங் காண்டம் ... ... ... 104
தட்சிணாமூர்த்தி வைத்தியம் ... ... ... 111
தன்வந்திரியார் பாடல் ... ... ... 36
தன்வந்திரி வைத்தியம்—1000 ... ... ... 1

**தி**

திருமூலர் கெர்ப்ப வாகடம் ... ... ... 48
திருமூலர் பாடல் — 8 ... ... ... 40
திருமூலர் வாகட ரெத்தினச் சுருக்கம் ... ... ... 78
திருமூலர் வாத சூத்திரம் — 201 ... ... ... 74
திருவள்ளுவர் ஞானவெட்டி 1500-க்குச் சூத்திரம்
நவரத்தின சிந்தாமணி — 800 ... ... ... 88

**தே**

தேரையர் வைத்தியம் — 500 ... ... 69, 103
தேரையர் வைத்தியம் — 1001 ... ... 28, 95

**தை**

தைலவர்க்க வெண்பா — 334 ... ... ... 112

**ந**

நந்தி பாடல் — 8 ... ... ... 40
நவலோக மாரணச் சுருக்கம் — 16 ... ... ... 86

**நா.**

நாடி சாத்திரம் ... ... ... 19

**நோ**

நோய் நிதானம் ... ... ... 57

**ப**

பதஞ்சலி வகார சூத்திரம் — 20 ... ... ... 51
பதார்த்த சிந்தாமணி ... ... ... 62
பால வாகடம் ... ... ... 27

**பி**

பிரம்மமுனி—385 ... ... ... 79
பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம்—370 ... ... ... 14
பிரம்மமுனி வைத்திய சூத்திரம்—390 ... ... ... 102

**பு**

புலத்தியர் சம்பாத சிதாக்கியம்—
18 காண்டங்கள் ... ... ... 100
புலிப்பாணி—300 ... ... ... 32

**போ**

போகர் சூத்திரம்—68 ... ... ... 96
போகர் பூசாவிதி ... ... ... 11
போதரிஷி சூத்திரம்—22 ... ... ... 21
போதரிஷி சூத்திரம் வகாரம் —100 ... ... ... 53

**ம**

மச்சமுனி பாடல்—800 ... ... ... 105
மச்சமுனியார் பாடல்—8 ... ... ... 39
மந்திர சாத்திரம் ... ... ... 49
மலை அகராதி ... ... ... 16

**யா**

யாகோபு—300 ... ... ... 60

**ரோ**

ரோமரிஷி — 500 ... ... 42,67
ரோமரிஷி சூத்திரம் — 16 ... ... ... 72
ரோமரிஷி பாடல் ... ... ... 68
ரோமரிஷி பெருநூல் ... ... ... 12

| | |
|---|---|
| ரோமரிஷி வகார சூத்திரம் — 50 | 52 |
| ரோமரிஷி வைத்திய சூத்திரம் — 100 | 77 |

**வா**

| | |
|---|---|
| வாகடத் திரட்டு | 15 |

**வி**

| | |
|---|---|
| விஷ வைத்தியம் | 17 |

**வை**

| | |
|---|---|
| வைசூரி சாத்திரம் | 103 |
| வைத்திய அட்டவணை | 35, 80, 83 |
| வைத்திய அட்டவணை— உரைநடை | 114 |
| வைத்திய அந்தாதி | 47 |
| வைத்தியக் கும்மி | 46 |
| வைத்தியத் திரட்டு | 8, 17. 25 |
| வைத்திய மலை அகராதி | 59 |
| வைத்திய மலை அகராதி — சரக்குவைப்பு | 59 |
| வைத்தியம் சில்லரைக் கோவை | 70 |

# தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

### 9-வது தொகுப்பு

மருத்துவப் பகுதி

வரிசை எண் : 731. சுவடி எண் : 366 – (a)

## தன்வந்திரி வைத்தியம் 1000

ஏடுகள் : 96. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 37 × 3½ செ.மீ. எழுத்து : தமிழ். இரத்தங்களின் எண்ணிக்கை3000. ஆசிரியர்: தன்வந்திரி. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம் :**

*வாகடங்கள் வகுத்திடும் ...............*
*குணரவே ............ ஞயர பண்டி ............*
*கெளி தன்னுடல் நொயென வ ............*
*மாதர் துரந்தவர் கற்ற ............*
*...............3*

**முடிவு :**

*சந்தண மாதியாக சாத்துசி தளமா மெண்ணே*
*வெந்தித்த (கண்)ணே யத்தாம் விருத்தர்க்கு சத்து மாகா*
*மைய்ந்தரர் சிசுகள் காகா வருகுணந் தேச காலம்*
*சிந்தையா லெண்ணே மூழ்கில் தேகத்தை வளக்கு மென்றே.*
*ஆறியனுயிர் முற்றிற்று.*

*சிவமயமா ஸ்ரீரெங்கநாயகருடைய கிருபையுண்டாக வேணும்*

**குறிப்பு :**

*முதல் ஏடு ஒரு சிறு பகுதியே உளது. 2-14 ஏடுகளின் ஓரங்கள் செல்லரித்துள்ளன. பிற்பகுதி சிரையுள்ளன.*

*இதில் நெஞ்சு கோழைக்கட்டு, சுவாச காசம், பித்த மூர்ச்சை, மேக ரோகத்திற்கும் சித்திரமூல நெய், குய்யத்தில் புண், மலட்டுக்குப் பொது மருந்து, கெர்ப்ப எண்ணெய், கிராணிக்கு மாங்கொட்டை லேகியம், பிளவை, குது*

ஆகாதவள் ; பெருவியாதிக்குக் கர்ப்பம், குஷ்ட்ட புண்ணுக்குப் புகை, சன்னி 13 - க்கும் பேரும் சிகிச்சையும், அகத்தியர் குளம்பு, நவரச சுத்தி, கெர்ப்பிணி களுக்கு பேதிமுறை முதலான பல முறைகள் உள்ளன.

வரிசை எண். 732 சுவடி எண். 366 (b)

## அகத்தியர் வைத்தியம் 500.

ஏடுகள் : 44 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 37×3½ செ. மீ. எழுத்து : தமிழ் கிரந்தங்களின் எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூதலத்தில் தென் பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அஷ்ட்டசித்தி யெட்டும் பெத்த
வாசையினுல் வைத்தியனூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை கடைக்கொட் டானை
புழக்குழியில் விழுந்தானைப் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடங்கி யறிவில்க் கூடுந்
தற்பரமாய் நின்றகண பதியே காப்பாம். 1

**முடிவு :**

மூலத்தி னெழுத்தாலே மவுனங் கொண்டு
முட்டினுல் வடுகனங்கே நிறுத்தஞ் செய்வான்
ஞாலத்தின் குண்டலிக்குள் எடுக்கப் பாரு
ஆசையவள் வைப்பதற்கு வடமாலை சாத்து
(சீலத்தின்) னந்தியுட பூசை பண்ணு
சேகண்டி நாதவெ ... ... ...
காலத்தினை கருவறிந்து பூசை செய்தால்
கைக்குள்ளாம் வ(யித்தி)யமுன் னூறு முத்தே 301

ஹரி : ஓம். அகத்திசுரரருளிச் செய்த வைத்திய சூஷ்திரம் முன்னூறு முற்றும். குருபாதமே கெதி. சரசுபதி முன்னிற்க்க வேணும்.

ரெங்கனுதர் துணை.

**குறிப்பு:**

இதில், காந்த சத்து ஈயம், கற்பூரம் சிலாசித்துப்பற்பம், வெடியுப்புச் செயனீர், அப்பிரகச் சத்து, செந்தூரம், நிமிளை சத்து, செந்தூரம், தாளக வெள்ளையும், அதற்கு அனுபானலேகியமும், உள்ளன.

*ஈளை, இருமல், சுவாச காசத்திற்கு லேகியம், முத்து செந்தூரம் குட்டம் 18-ம் அய ஈய செந்தூரம், நவபாஷாண பதங்கம், துய்யான் செந்தூரம், நவலோக செந்தூரம், 64 சரக்கும் சுத்தி செய்ய முறைகள் முதலானவை உள்ளன.*

---

வரிசை எண் : 733 சுவடி எண் : 367-(a)

## தட்சிணாமூர்த்தி கலைக்கியானம் 1200

ஏடுகள்: 205. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 36×3½ செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 8000. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

*ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து*
*அம்பாள மனோன்மணியை தொழுது பொத்தி*
*சோதியெனுங் கமலமலற்த் தா ………*
*வாதத்திலே ……… காப்பு*
*நீதிபெற வயித்தியத்தில் ரெண்டு லெட்சம்*
*நிலைத்ததொரு சூஷ்த்தியத்தில் கோடா கோடி*
*(வாதி) யென்று பேர்படைத்த பெரியோர்க் கெல்லா*
*மகள்ந்து சந்து கருக்குருவாய் வசனித் தேனே.*

### முடிவு

*பரியான தங்கமடா பறபிறம்மம் ………*
*……… தங்கமென்றால் பூரணமே — தங்கம்*
*நெறியான பூரணத்தே தினமும் நோக்கி*
*நேரர்வான பராபரத்தி ……… செய்ய ………*
*குருகடாட்சம் உண்டாக வேண்டியது.*

### காலம்

*சிவகெங்கை சீமை ……… எழுதினது முற்றும்,*

### குறிப்பு

*சக்தி சிவமறிய, முப்புச் சுண்ணம், ரசவங்கச்சுண்ணம், நரதத்திர்வாங்கல், நாகமணி, குடவன் செம்பு, பாஷாணக்களங்கம், நந்தியுப்பு, 64 சித்து ஞானம், வைப்பு முறைகள், நவக்கிரக பாத்திரம் தங்கவெட்டை, நவச்சாரக் குளம்பு, பஞ்ச சுன்னகுகை, அமுர்தரச கல்பம், காயகல்பம் முதலியன உள்ளன,*

வரிசை எண். 734 சுவடி எண். 367 (b)

## அகத்தீசர்கலைஞான சூத்திரம் 200

ஏடுகள் 30 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 36×3½ செ.மீ எழுத்து : தமிழ் கிரந்தங்களின் எண்ணிக்கை : 1100 ஆசிரியர் : அகத்தியர் முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம் :**

எட்டெட்டா மாதியிலே கலைஞ்ஞான சூஷ்ச்சமென்
றெழுமிரு நான்கில் நாலுமொன்றாய்
விட்டகுறை யுலகமதி லறியாமல் கமல
வெளிகோணக் குருநூலில் மூலஞ் சொல்லி
அட்டபுரி யஷ்ட்டமதி லறைக ளாறு
மைங்காணே முன்னின்ற வண்டியைப் போத்தி
திட்டமுடன் சூஷ்த்திரமா யுரைக்க ஆதி
தேவி பரி பூரணியே முதலாங் காப்பே. க

**முடிவு**

... டென்றகக் ... றியப் பூட்டுஞ் சொன்னேன்
முக்காலுந் திறவுகோல் .........
உப்புக்கட்டு சொல்லிப் போத்தி ......... லத் திறப்பதற்கு
சூஷ்சஞ்சொன்னேன் ...... காஷ்சி பெற ...... றேனே 197.

**குறிப்பு :**

இடையிடைய ஏகேள் முறிந்தும் சிதைந்தும் உள்ளன. இதில் ஞானதுகை பூரண நவந்துருவம் போன்ற குறிப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 735 சுவடி எண்: 367 (c)

## தட்சிணாமூர்த்தி சுருக்கம்-6

ஏடு : 1 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 36 × 3½ செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 40. ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

சித்தரருள் ஆதியிலே பதினெண் பேர்கள்
சிவமறிந்து தேவியுட வாமத்திலுல்

கருத்தாதி சிவனுடையை ... காரணமாயி
சிவமுனியுமான பெருவித்தாதி சாஸ்திரங்கள்
கோடாகோடி விளம்பினேன் விளம்பினேன்
பின்னாலே விரைந்து பாரு
அத்தாதி ஆனவர்க்கு பெயிதும் வெய்தும்
அல்லாவிட்டா லெய்யாது அறிந்து பாரே.

**முடிவு**

வகாரமடா ஆறுக்குள் ஒளிக்க வில்லே
மைந்தனே சமுத்திரத்து உப்பு ஆதி
சிகாரமடா தேவதைகளோ கோடா கோடி
சிகத்திலே யிதைவிட்டால் சாப மாகும்
வகாரமடா யின்னாலில் அண்ட பிண்டம்
பரமகுரு தானறிய வெளியில் வைத்தேன்
நகாரமடா சுந்தரமே யின்னால் போலே
நாட்டார்கள் வர்மத்தின் செய்கை முத்தே.

**குறிப்பு**

இதில் சமுத்திர உப்பு கொண்டே, கட்டுவகை தேர்வும், வேதை செய்யும் குறிப்பும் காணப்படுகின்றன.

* *

வரிசை எண் : 736 சுவடி எண் : 367 (d)

## அகத்தியார் கலைக்கியான சுருக்கம் 120

ஏடுகள் : 20 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 36×3½ செ.மீ எழுத்து : தமிழ் இரந்தங்களின் எண்ணிக்கை : 800 ஆசிரியர் : (அகத்தியர்) முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அகண்டமெனும் பூரணத்தில் அறிவே காப்பு
சோதியென்ற வாலைமனோன் மணியே காப்பு
சொல்லடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதம் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன்நீ காப்பு
சாதியென்னும்ஞ் சிவசத்தி சத்திசிவ
மானந்தமான பருபரத்தின்ப் பொருளும் காப்பு தாமே. க

**முடிவு :**

திறந்ததொரு தமறவாசல்க் குள்ளே நீயும்
செலுத்தடா வாசிதன்னை ரவியால் மைந்தா
பறந்தொரு வாசியதும் பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணில்க் காணும்
கறந்ததொரு பால்போலே அமுந்த முறுங்
கனிவான அமுந்தமழை தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மவுனத்தில் சேறமுத்தே

தெட்சணாமூர்த்தி துணையுண்டு
ஹரி : ஓம் : |19: சுபமஸ்து

**குறிப்பு :**

இதில் சவுக்காரச் சுன்னம், விரங்கட்டு மெழுகு, கெந்தகத்தயிலம், ரசமணி, மறைப்புமை, வெள்ளிமுறை, அங்கோலத்தயிலத்தில் செலஸ்தம்பனம், கல்பம் முதலான முறைகள் காணப்படுகின்றன. வாதம், வைத்தியம் ஆகிய முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

* *

வரிசை எண் : 737 சுவடி எண் : 367(c)

## தட்சிணாமூர்த்தி சூத்திரம் கலைஞானம் 60

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். அளவு: 36×3½ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 300 ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியெண்ட பூரணமா மகண்டத் துள்ளே
ஆத்தாளைத் தொழுதுநின்ற ஐங்கரனைப் போத்தி
சோதியெண்ட அறுநூறு பெருநூல் தன்னை
சூஷ்த்திரந்தான் அறுபதுக்குள் சுறுக்கி வயித்தேன்
சேதியென்ற கறுக்குருவு வெளியதாக
திறந்திட்டேன் கைபாக மருந்தின் பாகம்
வீதியென்ற கெவுனத்தி நோட்டம் போல்
விளைந்தமணி யின்னூல்தான் சொல்லக் கேளே. 1

**முடிவு**

அங்கெண்ட புரியட்ட மிழந்து வாசி
ஆதாற மேல்மூலத் தடக்க மங்கே

பங்கென்ற மனமகத்தி லுங்கார மூன்று
பஞ்சவர்க ளோதிது நின்ற பதியு மங்கே
சங்கென்ற பற்பந்தி கடல்ஆ றேறித்
தவசிருந்த குகைவீடு தலமு மங்கே
வங்கெ

## குறிப்பு

இதில் செயநீர் செய்முறை, கறியுப்புச் சுண்ணம், கெந்தி களங்கம் தாமிரக்களிம்பு வாங்க, நாகவித்தை, மால்தேவி சிவக்க, இரும்பு செம்பு ஆகியவை செய்து வாத்து வைத்தியம் செய்வதும் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 738. சுவடி எண் : 367 (f)

## தட்சிணாமூர்த்தி சுருக்கம் - 6

ஏடு : 1. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 36 × 3½ செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 40. ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றுமுளது.

## குறிப்பு :

இது, 367 - (c) போன்றது. அதைவிடச் சற்று நன்றாக இருக்கிறது.

வரிசை எண் : 739 சுவடி எண் : 367 (g)

## (அகத்தியர்) கலைஞானச் சுருக்கம் -12

ஏடுகள்: 2. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள் அளவு : 36×3½ செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 70. ஆசிரியர் : (அகத்தியர்). முழுமை : முற்றும்.

## தொடக்கம்

சாத்திய பெருநூல் ஞானம் சாத்திய கலைக்கி யானம்
போத்திய பூர ணங்கள் புகழ்பெறும் முப்புச் சுண்ணம்
வருத்திய வாசி வாதம் வாமத்தின் பொருளை எல்லாம்
யேத்தியே யென்னூ லுக்கு யோகமாம் குறுநீ கேளே.

முடிவு

இதுவாம் பரமே யேகமாம் யென்ம்பிள்ளாய்
மதுவாய் நிறைந்த வாதக் கருத்தான
கருவாய்த் திரட்டி வைத்தேன் இந்நூலில்
மதுவாம் பரம ரகசிய முத்தே.

காலம்

நந்தன வருடம், தைய் மாதம் 24 உ சிவகெங்கை மீனுட்சி சுந்தரம் எழுதி முகிந்தது முற்றும்.

குருப்யோ நம :

குறிப்பு

இதில் நாதநீர்ச் செயநீர் செய்முறையும், இதைக் கொண்டு வேதை பார்க்கும் முறையும் பாடலாயுள்ளன.

இதன் பின்னர் "தெட்சணமூர்த்தி குருசிகுமு 6" என்ற தலைப்புள்ள ஏடு ஒன்று பாதியாக முறிந்து உளது.

*****

வரிசை எண் : 740. சுவடி எண் : 368

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 220. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 2–4 வரிகள். அளவு : 28 × 3செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : பலர். முழுமை : முழுமையற்றது.

தொடக்கம் :

பயித்திய சுரத்தின் செய்கை
வன்னிபோற் சுரமே மூர்ச்சை மதியதி சார வாந்தி
பின்னையுப் - புறைப்புத் தாகம் பெருமுகந் தாளு காது
மின்னிடு முகிருங் கண்ணு மேனியும் பேத மாக
பண்ணிடுங் குளுந்தி வேண்டும் பயித்திய சுரமி தாமே. 2

முடிவு :

தாது பார்க்குங் காலம்
தானது பங்கு ளிக்குந் தனதுநல் லாவ ளிக்கும்
வானமாம் பிரட்டா சிக்கும் கத்தராத்திரியிர் பாறக்
தேனன மூன்று நாடி தெளியவே காணு மென்று
கானமா முனிவன் சொன்ஞன் கருதியே கண்டிடாயே. 64

**குறிப்பு :**

*இதில், வாத பித்த சுரத்தின் செய்கை, மூன்று நாடியின் விர்த்தி, லட்சணம் அறிதல், நாக்கு லட்சணம், பீனிசத்தின் செய்கை, 3 தோஷ காமாலையின் செய்கை, வாதம், சன்னி, மேக தோஷங்களின் செய்கைகள் பற்றியும், நாடி விபரம், தாது நிதானம், சாத்திய அசாத்திய முறைகளும் காணப்படுகின்றன. இது ஒரு நோய் நிதானச் சுவடி.*

வரிசை எண். 741 சுவடி எண். 369 (a)

## தட்சிணாமூர்த்தி பெருநூல் 1200

ஏடுகள் : 205 ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது பக்கத்திற்கு : 6–8 வரிகள். அளவு : 40×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 6500. ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி. முழுமை முற்றுமுளது.

**தொடக்கம் :**

ஆயிரத்தி யிருநூறு முன்னூ லர்ய்ந்துமுரக் கண்ட சூஷ்த்திரம்
பாயிரத் தொகுதி யொன்று பாடிய வைத்திய பாகம்
மோயிரக் களிமுன் னூறு முமைக்கர னுரைக்க யீன்ற
தாயெனக் குரைக்க யானுஞ் சாத்திய விதிநூல் தானே. 1

**முடிவு :**

தூண்டாத விளக்கெரியும் மென்று முன்னோர்
சொன்னபடியே வித்தை வயித்திய வாதம்
வேண்டிய பூமாந்தரிகம் நால்வே தத்தால்
விளம்பினேன்:வேதாந்தம் மேவும் மேவும்
ஆண்டவனே விட்டகுறை யுரைத்தார் சொன்ன
ஆனந்தத் திரிகாண்டம் முன்னூர் முத்தே. 1199

தெட்சிணாமூர்த்தி பெருநூல் ஆயிரத்தியிருநூறு முடிந்தது முத்தும். ஹரி ஓம் : சுபமஸ்து.

**குறிப்பு :**

*சுவடியின் பிற்பகுதி நன்ருக இருக்கிறது. இதில், சயத்துக்கு சிவமெழுகு, சருவாங்க மாத்திரை, புண்ணுக்கு குழித்தயிலம், ரசமணி, உப்புக்கட்டு செந்தூரம், தாளககுரு, விஷசுரத்திற்கு கெந்திமாத்திரை, அயம், ரசம். நாகம் இவற்றின் களங்கங்கள், அயச்செம்பு, கெந்திசெம்பு, சீனக்கார குரு போன்ற*

வாத வைத்தியத்திற்கான முறைகள் முதலியன உள்ளன. பிற்பகுதியில் சாலத்திரட்டு, மாந்திரிகம், ஞானசாலம் முதலான குறிப்புக்கள் காணப் படுகின்றன.

இச் சுவடியின் ஆரம்பத்தில் "சத்துக்களை வெட்டை மாற்ற" என்ற தலைப்பில் ஒரு ஏடு பழுதுபட்டிருக்கிறது.

oooooooooooooo

வரிசை எண்: 742 சுவடி எண்: 369(b)

## அகத்தியர் தசவித வாதலே

ஏடுகள்: 6. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள் அளவு: 40×3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 150 ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுற்றது.

**தொடக்கம்**

வாரான பூனிரு பதக்கு வாரி
மாடித்து ரெட்டிலொன்று கல்லுச் சுன்னம்
பேரான கழுதையுட மூத்தி ரத்தில்
பிசைந்து நன்றாய்க் கலக்கிவைத்து மூன்றுநாள்த்தான்
தாரான நாலானுள் தெளுவை வாங்கித்
தயங்காதே கல்லுப்புச் சூடன் ரெண்டு
மாரான வகைக்கி ரெண்டு பலமே தாக்கு
அப்பனே பொடிபண்ணித் தெளிவில் போடே 1

**முடிவு**

தானென்ற நாகத்தைப் பதயாமல் கொல்லும்
சவுரியங்க ளெண்ணுதே சகலமும் உன்கொளும்
வானென்ற சூதமது கட்டிப்போகும்
மாசத்த அயனுகம் ஆடு மாடும்
தேனென்ற சிவகாமி சொன்ன மாற்க்கம்
செப்பரிய ஞுதாக்கள் பேச்சும் வித்தை
பானென்ற செந்தூரம் களங்கு செய்யில்
பரிவாக ஆயிரத்துக் கோடும் பாரு

சிவகாமி அம்மன் துணை.
ஓம் சுபமஸ்து.

**குறிப்பு**

இது ஒரு இரசவாத நூலாகும்.

■■■■■■■■■■■■

வரிசை எண் : 743 சுவடி எண் : 369(c)

## போகர் பூசாவிதி

ஏடுகள் : 13 ஏட்டின் நிலைமை : பழுது பக்கத்திற்கு 6 வரிகள் அளவு : 40×3 செ.மீ எழுத்து : தமிழ் கிரந்தங்களின் எண்ணிக்கை : 350 ஆசிரியர் : போகர் முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

வாலையைத் தியானஞ் செய்து
மவுனத்தின் வழியே நோக்கி
காலையாம் முச்சி அந்தி
கருத்துடன் சுழினை நாடி
வேலைகள் பலவும் விட்டு
விதியினை விரைந்து யேரி
சாலவே நடுவில் நிற்க
சச்சுதா னந்த மாமே.

**முடிவு**

காணப்பா பானத்தின் மருத்துவங்க ளெல்லாம்
காரணத்தின் குருச்சொல்லக் களங்கந் தீற்த்தே
ஞனப்பா வானபிள்ளை யாரென் றுக்கால்
அமுர் தமுண்டு நிலையில் நின்றோள் அவனே சித்தன்
விணப்பா மத்தப்பேர் ஞய்வால் தொட்டு
வெள்ளத்தைக் கடப்பேனென் என்று வெத்தி
பூணப்பா யிந்தனூ லாருங் காணுற்
பொருளருள்சேற் சூஸ்த்திரத்தா னந்தமுத்தே 52

பூசாவிதி எழுதி முகிந்தது முற்றும்.

**குறிப்பு**

வாலையுட பூசாவிதி இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

வரிசை எண் : 744 சுவடி எண் : 370

## (சரபேந்திரர்) விஷ வைத்தியம்

ஏடுகள் : 101. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 4 வரிகள். அளவு : 41×3. செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : வேலாயுத உபாத்தியாயர். முழுமை ; முற்றற்றது.

**தொடக்கம்**

.......................................சூடுமெங்கள்
கயிலாச நாதருட பாதம் போற்றி
துங்கன்சர போசிமகா ராசன் றனுஞ்
சொல்லுமனு மதிப்படிக்கு விடங்கட் கெல்லாம்
யிங்கிதமா மாத்திரையொற் றடங்கு ழம்பு
மேலான நசியமஞ் சனங்க டானுப்
மங்களமாஞ் செய்யுடனிற் பாட யெங்கள்
மதமுகனுங் கலைவாணி பாதங் காப்பாம். க.

**முடிவு**

சுணங்கனுமுன்னைத் துரத்தியே கடித்ததுக் கொருமருந்து
... .. ... ... ... ... ... ... ... ... ... சொல்வேன்
நினைங்கமழ் வேலான் சரபபூபதியு நித மருந்தே.

**குறிப்பு**

இதில் எல்லா விஷக்கடிகளுக்கும் முறிவு செல்லலப்பட்டுள்ளது, இது எமது சுவடி எண் 55 போன்றது. முழுச்சுவடியும் எமது மகால் வெளியீடாக அச்சாகியுளது. விலைக்குக் கிடைக்கும் .

வரிசை எண் : 745 சுவடி எண் : 371 (a)

## ரோமரிஷி பெருநூல்

ஏடுகள் : 90 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 35×3½ செ.மீ எழுத்து : தமிழ் கிரந்தங்களின் எண்ணிக்கை : 3200 ஆசிரியர் : ரோமரிஷி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

மூலமுத லாதார முடிவில் நின்ற
மூர்த்தியெனும் கிணேசனும் பாதங்காப்பு
கோலமென்ற ...........................
................. பாதம் போத்தி
காலமெனும் யிறப் பிறப்புங் கடந்து நின்ற
கருணைதரும் நந்தீசர் பாதம் போத்தி
............... ..............................
அஞ்ஞூற்றை யானுரைக்க அம்பாள் காப்பே. க

**முடிவு :**

வீரப்பா ரேமம னெண்டு பேயரும் ஞட்டி
விசைஎல்லாஞ் சொல்லிவைத்றே னிந்த நூலில்

ஆரப்பா அவனியிலே சொல்லப் போருர்
அப்பனே புசுண்டருட பாதந் தானே. 511

முற்றும்

**காலம்**

பிலபா வருடம் ஆனி மீ 3 உ மங்கள வாரம் யோகாதேசியுங் கூடின சுபதினத்தில் ரோமரிஷி பெருநால் எழுதி நிறைந்தது முற்றும்,

**குறிப்பு**

இதில், சூடசுன்னம், துருசுச்சுன்னம், ரசமணி, காரீயக்கட்டு, பாசாணம், லிங்கக்கட்டுகள், வெடியுப்பு, செயநீர், அறுவகை செயநீர், பூநாகச்சத்து, இந்திரகோபச் செம்பு, சத்திவகை செயநீர், தாளகத்தயிலம், துருசுவைப்பு, பூரவைப்பு, குடோரிவைப்பு முதலியன உள்ளன.

oooooooooooooooooooo

வரிசை எண் : 746 சுவடிஎண் : 371 (b)

## அகத்தியர்-80

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு : 35×3½ செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுற்றது.

**தொடக்கம்**

அறன் கயிலை விட்டுநான் தெஷ்சணத்தில் வந்து
அளவறந்த கோடிசித்தர் முனிவர் ரிஷிகளுமாய்ப்
பறந்ததொரு பொதிகைதனி லிருக்கும் போது
பாடியநூல் வாதமொடு வயித்தியந்தான்
நிறந்தரமாய் வயித்தியத்தி லிரண்டு லெஷ்சம்பாடி
நிருத்தினபின் சூஸ்த்திரமாய் குருக்கிபின்பு ...
றந்நோய்க்கிவ் வகை கற்மந்தீற்க்க
சூஷ்ச மந்திர யெந்திரசெப ஓம்ந்தானே.

**முடிவு**

நூலென்ற சித்தர் ... வேதாந்த முதலாய்
கண்ணிமையாய்ப் பாடிவைத் தோமினிமே...
பாலென்ற தொண்டினிலே பிறந்த நெய்யைப்போல்
பதிந்துபார் நோயெல்லாம் பலவிதமாய்க் காணும்
ஆலென்ற மரந்தனிலே விழுதோடும்போல
அறிந்தறிந்து நூலெல்லரம் ஆராய்ந்து பாரு

காலென்ற கண்ணுக்கிப் பாகுசொன்ன நூல்
கருத்தறிந்தோர்க் கெண்பதுந்தான் கரஷ்சி முற்றே 80

முற்றும். பரிபூரணம்

**காலம்**

விசுவாவசி வருடம் கார்த்திகை மாதம் 6உ புதவாரம் எழுதி நிறைந்தது முத்தும்.

**குறிப்பு**

உவர் மண்ணைத் தசதீட்சை செய்து சிவ உப்பாக்கி, முப்பு என்ற குரு முடித்து, வாதம் வயித்தியம் முதலானதற்குப் பயன்படுத்தும் முறைகள் இதில் சொல்லப்பட்டுள்ளன.

~~~~~~~~

வரிசை எண் : 747 சுவடி எண் : 371(c)

## பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 370

ஏடுகள் : 16 (1-44 ஏடுகள் இல்லை) ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுதான ஏடுகள் பாதிபாதியாக உள்ளன. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 27 × 3½ செ.மீ. எழுத்து : தமிழ். இ. எண்ணிக்கை : —— ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : இல்லை.

**காலம்**

விளம்பி வருடம் மாசி மாதம் 15உ. சோமவாரம் பஞ்சமியும் கூடின சுபதினத்தில் பிறமமுனி நாயன் கருக்கிடை சூஸ்த்திரம் 370ம் எழுதி நிரைந்தது முற்றும். பறிபூரணம் சிவமயம்.

**குறிப்பு :**

இச்சுவடி, பாதியாக முறிந்தும், செல்லரித்தும் உள்ளது. முதற்பகுதி இல்லை. ஒப்புமைக்கு உதவும்.

\*\*\*\*\*\*\*\*\*\*

வரிசை எண்: 748 சுவடி எண்: 371 (d)

## (அகத்தியர்) பூரண சூத்திரம்

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது, ஒடிந்தவை. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 34×3½ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 250. ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: குறைபாடுடையது,
~~~~~~~~

**தொடக்கம்**

முன்னூ லெண்பதுஞ் சொன்னேன் முதலேகாப்பு
மூலத்தில் நின்ற கணபதியைப் போற்றி
பின்னூல் எண்பதுஞ் சொல்ல ஆயிகாப்பு
பாரான என்குருமா முகனே காப்பு
அன்னுளில் யிசனுப தேசஞ் செய்த ......
அகத்தியனு மென்றனக்குப் பேருமாச்சி
பொன்னன வாதத்தில் ............ வசிஷ்டர் காப்பு
பூட்டினது பூரண சூஷ்த்திரத்தானே ...... க

**முடிவு**

விளம்பினுல் சயரோகம் வந்த மாற்க்கம்
விசையான மூலத்தி .........
தளம்பியே கபாலற்றில் முட்டிச் சரடி
தாதுவெல்லாம் கலகலத்து .........

**குறிப்பு**

இதில் சூலை, குன்மம், வாயுவுக்கு சொன்ன அப்பாகம், அளரயாப்புக்கு, வெள்ளைப் பாசாணப் பிரயோகம், வளலேச் சுண்ணம் கொண்டுமுப்பு முடித்தல் போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 749 சுவடி எண் : 372

## வாகடத் திரட்டு

ஏடுகள் : 100. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். அளவு : 27 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

மேகத்துக்கு மருந்து சூரணம்

பரங்கிப்பட்டை பலம் 5, நெல்லிக்காய் சந்தகம் பலம் 5, பசுவின்பால் படி 1. இந்த ஒருபடி பாலில் கெந்தகம் சுத்தி பண்ணவும். திருகுக்கள்ளி கண்டங் கண்டமாக நருக்கி பானையில் போட்டு தண்ணீர் விட்டு, மேல் ஒரு கலயத்தில் கசாயம் ½ படி விட்டு, மஞ்சள் துணி வண்டு கட்டி, பானைக்குள்ளே வச்சு பானையில் வண்டு செய்து

**முடிவு**

வெள்ளுள்ளி பலம் 1, கசகசா பலம் 1, ஏலரிசி பலம் 5, கிராம்பு பலம் 5, கற்பூர சிலாசித்து விராகனிடை 3 ; சர்க்கரை பலம் 5, இதுவெல்லாம்

சேர்த்து தொண்ணூறு நாள் சாப்பிடவும். இதுக்கு பத்தியம் இச்சா பத்தியம் சிவமயம்.

**குறிப்பு**

இதில், 4, 55, 52, 63, 64, 75, 87 ஏடுகள் இல்லை. 86-ம் ஏடுகள் வரை பல மருந்து முறைகள் உள்ளன. 88-90 வரை 3 ஏடுகள் உள்ளன. 94-வது ஏட்டில் "அகத்தியர் சுண்ணம்" என்ற தலைப்பில் விபரம் கூறப்பட்டுளது;

வரிசை எண் : 750 சுவடி எண் : 373

## மலை அகராதி

ஏடுகள் : 25 ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு ; 5 - 6 வரிகள். அளவு : 25×2. செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : இல்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

அருச்சுனம் — அருக்கு மருது
அரிட்டம் — கடுகு ரோகணி மிளகு
அரிணம் — எலுமிச்சை
அருத்திரம் — மரமஞ்சள்
அருத்துருமம் — வெள்வேல்.

**முடிவு :**

கரிச்சான்பூடு — கையாந்தகரை
கரிதிப்பிலி — ஆனைத்திப்பிலி
கரிப்பான் — கையாந்தகரை
கரீரம் — அகத்தி, கருவேல்
கருங்காலி — கருங்காலி, எட்டி
கருங்காலி — கருங்குவளை.

**குறிப்பு :**

இதன்பின் கருப்பொருள் அகராதி ஒரு ஏடு மட்டும் உளது. இதன்பின், வைத்தியம் பல முறை ஏடுகள், 11 ல் சரக்கு சுத்தி முறைகளும் மற்ற 6 ஏடுகளில் கட்டு முதலான மருந்துகளும் உள்ளன.

* * * * * * * * * *

வரிசை எண்: 751 சுவடி எண்: 374

## விஷ வைத்தியம்

ஏடுகள் : 30 ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 26 × 2½ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

### தொடக்கம்

தேள் விஷத்திற்கு மருந்து

தேளது தீண்டிக் கண்ணீர் தேம்பியே வந்த பேர்கள்
......... காயத்தை மெத்தக் கசக்கிக் சாறு
தாளவே விழியிரண்டில் தாக்கிட தட .........
வேளென விஷந்தா னந்த வேளையில் நீங்கும் பாரே.

### முடிவு

மணம் செய்யும், மக்களைப் பெத்து மகிழ்ந்திருக்கும் சிரிக்கிம் சிறைப்படும் செல்வமும் போறென தேர்ந்து கொள்ளே.

### குறிப்பு

*இதில் 1 முதல் 5 ஏடுகளில் தேள், பாம்பு முதலான விஷக்கடிகளுக்கு சிகிச்சையும், 3 ஏடுகளில் மந்திரமும், விஷ மருந்து, தடுப்பு மந்திரம், வெவ்வேறான வைத்தியம் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன.*

வரிசை எண் : 752 சுவடி எண் : 375 (a)

## வைத்தியத்திரட்டு

ஏடுகள் : 94. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு : 5-7 வரிகள். அளவு: 31×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

### தொடக்கம்

வாதசுரம், பித்தசுரத்துக்கு சாஸ்திர பேதி பஸ்பம்

சாஸ்திர பேதி பலம் 1. இந்துப்பு பலம் 1. வெண்ணை வெங்காரம் சுத்தி செய்து பலம் 1. வளையல் உப்பு பலம் 1. ரச செந்தூரம் பலம் 1 இது அஞ்சையும் பக்கிரி சாயப்பு திராவகத்தில் வேப்பிலை அறைத்து அந்த வேப்பிலையில் பிசரி பிழிந்து சாறு வாங்கி மேலே கண்ட சரக்குகளை அறைத்து வில்லை தட்டி காய வைத்து அஞ்செருவில் புடம் போடவும்.

**முடிவு**

பீனிசத்துக்கு

மாதாளம்பூ, அலர்ந்தபூ கொண்டுவந்து அதர்க்குள்ளிருக்கும் கடுகு போலுள்ளதை உலர்த்தி மருந்து பிழியிறபோது அஞ்சுபூ எடுத்துக் கொண்டு அதை பிளிஞ்சு யிளம் பிஞ்சாக ஒன்று கூடப்போட்டு இதுகள் மூன்றையும் முலைப்பால் விட்டு நசுக்கி நாசியில் நசியம் பிளிய ரத்தபீனிசம் வால்பீனிசம்

**குறிப்பு**

இதில் கல்லுப்புச் சுண்ணம், நாகரசபற்பம், பஞ்சகல்பம், அயநாக செந்தூரம், அயவெள்ளை, மெரிய மனுசியாகாமலிருந்தால் என் லேகியம், சோதிரிஷி தயிலம், காளமேக நாராயண செந்தூரம், விஷங்களுக்கு குழம்பு, பரங்கிப்பட்டை சூரணம், தாமிர செந்தூரம், உப்பு வைத்தியமுறை முதலியன உள்ளன.

இதற்குப்பின் 'பஞ்சபட்சி சாஸ்திரம்' என்ற தலைப்பில் ஒரு ஏடு முற்றற்றதாயுள்ளது.

வரிசை எண் : 753 சுவடி எண் : 375(b)

## அகத்திய முனிவர் பரிபூரணம் 400

ஏடுகள் : 22. ஏட்டின் நிலைமை : சற்றே பழுதாயுளது. பக்கத்திற்கு : 4-6. வரிகள். அளவு: 31×3. செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 400. ஆசிரியர். அகத்தியர் : முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி
புகழ்பெரிய வைத்தியபூ ரணத்தைப் பாடக்
காரணமாய் கருவுரு மெங்குந் தானுய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
யாரணமாய் முக்கோண நடுவி னின்ற
அம்பரத்தை அனுதினமும் அறிவாற்போற்றி
வாரணமா முகத்தோனை அனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. க.

**முடிவு**

சாராமற் காயசித்தி செய்து நீயுத்
ச(ம)ர்த்தாக உலகத்தில் சஞ்ச ரித்தால்
வீராண ஆணுவத்தை விட்டு மைந்தா
விருதுபெற்ற சி(வ)னென்றே விலக்க மாக

தாராள மாக நீ சரக்கு வைப்புந்
 தன்மையுள்ள வயித்தியமும் ...... செய்து
பேராதனுப் பூவாலே வாதங் கண்டு
 பேரின்ப நிலையாக்காணப் பெருமை கேளே.

## குறிப்பு

இதில் 9 வது ஏடு இல்லை. 1 முதல் 14 பாடல்களுக்குப் பிறகு பாடலுக்கு எண்ணிக்கை குறிப்பிடவில்லை.

அஷ்டகர்ம பாவை தம்பனம், முப்புவின் பெயர், நாத உப்பின் பெயர், சத்தி உப்பு, வழலை பெயர், வசியத்திற்கு விபூதி, தூரச் செய்தி அறியும் மை போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

---

வரிசை எண்: 754 சுவடி எண்: 375 (c)

## நாடி சாஸ்திரம்

ஏடுகள்: 7. ஏட்டின் நிலைமை: சற்றே பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். அளவு: 31×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 100. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

தசவாய்வின் பெயர்: பிருணன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன் தனஞ்சயன் ...... ஆக பத்து, சபையின்பேர் இடகலை பின் சுழிணையாகில் அலம்புடையும் காந்தாரி.

## முடிவு

ஷை நாடிகள் மூன்றும் தேள் கொடுக்குபோல் நடக்கில் ......ல் ஓடுமாகில் ஒரு மாதத்தில் சாவார். நாடி குறி மெய்க்குறி முதலியவைகளை நாடி விதாந......ம் அறிந்து கொண்டு சொல்லவேணும். சந்நியெழும் போது கண்மூடித் திறக்கும். நாடிகள் மூ..... சுழல்லே வண்டுபோல் பரபர வென்று நில்லாமல் ஓடும். வாதபித்தம் பம்பரம்போல் பின் ......

## குறிப்பு

இதில் நாடி அறியும் விதம் கூறப்பட்டுள்ளது. இதன் பின்னர் வாய்வுக்கு மருந்து முதலான வைத்திய உதிரி ஏடுகள் 6 உள்ளன.

வரிசை எண் : 755 சுவடி எண் : 376 (a)

## சுன்னாக்கல் 16

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : (அகத்தியர்) முழுமை : முற்றும்

**தொடக்கம்**

ஆதியந்த நடுவான சோதி பாத
மனுதினமும் நெஞ்சில்வைத்து அருளேப் போத்தி
சோதிமய மானதொரு துரியம் பாத்து
துரியத்தி லாடுகின்ற சிவனைப் போத்தி
யாதியா நின்றதொரு மாலைப் போத்தி
வருள்பெத்த மயேசனுட வடியைப் போத்தி
சோதியா விந்துவிலே துலங்கு ஞதம்
துரியவெளி யடியெனவே தொழுதிட் டேனே. க

**முடிவு**

தானென்ற பூநீரைச் செயநீர் பண்ணித்
தடையறவே சரக்கெல்லாம் கட்டிக் கொள்ளு
ஊனென்ற உடலைவிட்டு வெளியெப் பாத்து
ஒழுடிந்து போகாமெத உலுத்தா சொன்னேன்
தேனென்ற மனோன்மணியைப் பூறணந்தா ஞக்கும்
சிவனுடுக்கும் பராபரமே கருவ தாமே
தானென்று அகம்பிடித்தால் தலைதெறித்துப் போகும்
நல்லதொரு கல்ச்சுன்னத் துப்பு முஷ்த்தே.
அகஷ்த்தீசர் துணை

**குறிப்பு**

இதில் கல்லுப்புச் சுன்னம் முடித்து, செயநீர் செய்து, சரக்கு கட்டுவது முதலான முறைகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண் : 756 சுவடி எண் : 376(b)

## தட்சிணாமூர்த்தி பூரண பூசாவிதி

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது (ஏடுகள் ஒடிந்துள்ளன). பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: குறைபாடுடையது.

### தொடக்கம்

ஆதார மாறும் அகண்டகுரு பாதம்
வேதாகமத்தின் மார்க்கம் - நாதமுறு
விந்துவே நாதம் விளங்கும்பூ சாவிதியால்
தந்திமுகத் தோன்கருணை காப்பு.

காறணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் னன்றாய்க் கேளு
பூரணமாய் மவுனமல்லோ ஞான வாள்க்கை
புகளான அஷ்ட்டாங்கம் நடன மாடுஞ்

### முடிவு

சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறிகள் ஞட்டி
சுழியிலே ஞட்டமுறத் தொட்டுக் காட்டி
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணை தரும் பூசைவிதி கருவா முத்தே.

தெஷ்ஷணாமூர்த்தி துணை பாதமே கெதி யென்று
நம்புநென் காத்து ரஷ்ஷிக்க வேணும்
வாசி தேவரீர் துணையாக வேண்டியது

குருவே துணை.

### குறிப்பு

இதில் பூசாவிதி, ஞானம், யோகம் போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. சில ஏடுகள் பாதியாக முறிந்துள்ளன.

* * *

வரிசை எண்: 757 சுவடி எண்: 376 (c)

## போதரிஷி சூத்திரம் 22

ஏடுகள்: 5. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7–9 வரிகள். அளவு: 28×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 150 ஆசிரியர்: போத ரிஷி. முழுமை: முற்றும்.

### தொடக்கம் :

சீருலவும் பொதிகைமுனி பாதம் போத்தி
சிவகாமி தாயார்பொற் பாதம் போற்றி
ஏருலவும் நந்திசிவன் பாதம் போற்றி
யின்ப முத்த சித்தருட பாதம் போற்றி

முடிவு :

சிலம்பு கொஞ்சும் பூப்பதத்தாள் சிவகா மித்தாய்
... ... ... ... ... திறத்தி ஞலே.
நிலம்புகளும் சித்தவர்க்கம் பெரியோ ருக்கு
நிசமாகச் சொல்லுகிறேன் நினவாய்க் கேழ்க்க 22

தெஷ்ஷணமூர்த்தீ துணையாக வேண்டியது

**குறிப்பு:**

இதில் முப்பு விபரம், ஆனைக்கல்லு, வெடியுப்புச் செயநீர், தருசு காரங்கட்ட, துருசுச் சுன்னம், போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன.

* ⁂ *

வரிசை எண் : 758 சுவடி எண் : 376 (d)

## அகஸ்தியர் பூரண சூத்திரம் 216

ஏடுகள்: 50. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது பக்கத்திற்கு: 7–9 வரிகள். அளவு: 28×3½. செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

காற்செரி மெய்யன் வெண்மை
...... காணய் பாதம்
யோற்பொறு மும்மை தன்னை
பூறண நூலி லொத்தத்
தாற்செறி கொன்றை சூடி
தாய்சர சோதித் தந்த
நாற்மத வானைப் பிள்ளை
யார்பாதங் காப்ப தாமே

பொதியா செலக்குரு பாதமே துணை.

ஒன்முன பூரணமு மாரு தாற
முரைப்பதற்கு மேலாறுந் தொண்ணூத் தாறும்
பன்முன தீஷ்ஷை பதி னென்று ரெட்டி
பத்துடனே முப்பத்தி ரெண்டு தீஷ்ஷை.

**முடிவு**

நயம்பிறவே யெண்ங்கோண மிட்டுத் திரு
நாட்டுவாய் வஷ்த்துவொடு சுத்தி வய்த்து
நலம் பெறவே பூசைசெய்து வடமாலை சாத்தி
சித்திக்கும் செய்தொழில்கள் திறமாய்த் தானே. 214

சிவமயம் குருவே துணையுண்டாக வேண்டியது.
பூறண கடாட்சம் தறவேண்டியது
தெட்சணாமூற்த்தி சகாயம்.
ஶ்ரீமலிங்கம் பிள்ளை சொவடி, பூறணசூஷ்த்திரம் யெழுதினது.

**குறிப்பு**

*இதில் சவுக்காரத் திறவுகோல், செய்பாகம், தீட்சை பாகம், ஞானம், பூசாவிதிகள் முதலியன காணப்படுகின்றன.*

வரிசை எண் : 759 சுவடி எண் : 376 (e)

## கொங்கணர் சூத்திரம் 10

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 28 × 3½ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 60. ஆசிரியர் : கொங்கணர் முழுமை : முற்றும்.

**தொடக்கம் :**

அருள்வழுத்த அகண்டபரி பூரணமாய் நின்ற
ஆதியந்தம் பருபரத்தை போத்தி
அருமைத்தாய் எனத்துள்ளே சூஷ்த்திரஞ் சொல்வேன்
போகாமல் வாதிகளே செய்து பாறு
அண்டரண்டம் பொன்னாகும் பேசாத
சீஷனென்றால் சொல்லச் சொல்லே க

**முடிவு**

உத்தமனே நிரையதிலே விட்டு
நிகழ்த்திடுவாயித் தொன்னூரு
...... பனம்பூ அதையெடுத்து
தன்னியெழு முக்குப்பனெய்யனக்கல் ... முத்தே. 10

கொங்கணவற் பாதாறவிந்தமே துணை. சிவமயம்.

**குறிப்பு :**

*இதில் சாரத்தை நீற்றி செயநீர் செய்து துருசு குரு முடித்து அதிலே ரசக்கட்டு செய்யும் முறைகள் பாடலாயுள்ளன. பின்னர் உள்ள 2 ஏடுகளும் ஒடிந்தும் மடிந்தும் உள்ளன.*

*****

வரிசை எண்: 760 சுவடி எண்: 376 (f)

## அகத்தியர் தீட்சை விதி 200

ஏடுகள்: 47. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9-12 வரிகள். அளவு: 28 × 3½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்:**

வானைத் தாவிய பொதிகை மகத்தான
    ரிஷியுடைய வாக்கில் நேர்மைப்
பானைத் தாவிய பூசை பரிவான
    சிவயோகிப் பண்ப்போற் கேளீற்
மீனத் தாவிய ருசி விளங்கி நின்ற
    கன்னிமுதல் வில்லு மேஷம்
சேனத் தாவிய துலாத்தின் சென்ம
    ருசிக் கருவைச் செப்புகிறேனே. க

**முடிவு:**

பணி மாறுங் காலத்தே சகல சித்தும் பரிவாகத்த
பணி மாறுங் காலத்தே பணிந்து தெண்டம் பண்ணுவாய் பூசைவிதி...

குருவே துணையுண்டாக வேணும்
சம்பூறணம் 213

**குறிப்பு:**

இடையிடையே பல ஏடுகள் முறிந்துப் பூச்சியரித்தும் உள்ளன. கடைசி ஏடு பாதியாயுள்ளது.

இதில் காயசித்தி, யோகசித்திக்கும் ராசிவிபரம், கல்ப்பம் உண்ணகாலம் பிராணயாம சித்திபெற தீட்சை விதி, பிராணயாம வரிசைக்கு மாத்திரை, கஞ்சாவை மூலமாய்க் கொண்டு முடித்த லேகியத்தை நாள் பார்த்து சாப்பிட்டு பிராணயாமம் செய்து கல்பஞ் செய்யும் முறைகள் முதலியன உள்ளன.

வரிசை எண்: 761 சுவடி எண்: 376(g)

## அகத்தியர் சூத்திரம் 80

ஏடுகள்: 3. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு: 28 × 3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: குறைபாடுடையது.

**குறிப்பு**

*இது 371-(b) போன்றது. இதில் 11 செய்யுட்களே உள்ளன. பின் ஏடுகள் முறிந்துள்ளன.*

வரிசை எண் : 762 சுவடி எண் : 377

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 150. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 19 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 3000. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

(கு)ட்டுணியை முக்கணனைக் குன்றோர்க்கு மூத்தோனை
மொட்டைத் தவசிபெத்த முச்சிலியை — முட்ட
வழியி லிருக்கும் மதவா ரணனைத்
தொழுது கெடுத்தேந் துயர்.

**முடிவு**

மாந்தம் பதினெட்டுக்கும் எண்ணை
ஓரந்தக் கரமெட்டு மொத்தகணம் பதினெட்டுத்
தீரவெண்ணை சொல்லத் தேன்மொழியே — பாரில்
வாசையிலே வல்லாற ......... கோழி யவரையுடன்
பாரில் நரிப்பயத்தன் னிலே.

**குறிப்பு :**

*இதில் செங்கிரந்தியின் குணமும் சிகிச்சைகளும், சகல தோஷங்களின் குணமும் சிகிச்சைகளும், சகல மாந்தம், வலிப்பு சன்னி, சுரம், கணம், கரப்பான் முதலானவைகளின் குணமும் சிகிச்சைகளும் உள்ளன. குழந்தைகளின் பிணிக்கு நோய் நிதானமும் மருந்துகளும் சொல்லப்பட்ட அருமையான நூல். இடையிடையே ஏடுகள் இல்லை.*

வரிசை எண் : 763 சுவடி எண் : 378 (a)

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 145. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 5-7 வரிகள். அளவு : 23×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது

**தொடக்கம்**

தாளிச பத்திரி வடகம்

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி | சித்திரமூலம் | சாதிக்காய் |
| திப்பிலி | லவங்கப்பத்திரி | மாசிக்காய் |
| கண்டத்திப்பிலி | ஏலம் | தானிக்காய் |
| செவியம் | லவுங்கம் | கடுக்காய் |
| | சாதிப்பத்திரி | |

**முடிவு :**

கிராணி மூலத்துக்கு லேகியம்

நெயி சேற் 1½, யிந்துப்பு பலம் ½, சீரகம் பலம் ½, மொளகு வீ 2, வால் மிளகு வீ 2, கிரும்பு வீ 2, சாதிக்காயி வீ 2, சாதிப்பத்திரி வீ 2, கசகசா வீ 1 ஆலங்காய் கொண்டுவந்து முத்தினதாய் எடுத்து ஒரு மாகாணிக்கு நண்ணுய் கழுவிப்போட்டு பொடி பொடியாயி அறிஞ்சு வெங்காயம் ½படி அறிஞ்சு துவைத்து அந்தச் சாத்தில் வேக வச்சு

குறிப்பு

இடையிடையே பல ஏடுகள் இல்லை. இதில் தாளிசபத்திரி வடகம், பீனிசத்துக்கு எண்ணெய், சுரங்களுக்கு மருந்து, மேகத்துக்கு எண்ணெய், கண்ணில் பூச்சிவெட்டுக்கு, அமுக்கிரு கற்பம், மாட்டு விஷத்துக்கு, சுளி கணத்துக்கு, போர்மாந்தத்துக்கு, ரத்த பிரமியம, 18 குட்டத்துக்கு, வாதத்துக்கு, அகத்தியர் குழம்பு, கோடாசுளிகை, மூலிகை சாபநிவர்த்தி, பாஷாண மருந்து களின் சுத்திமுறை, மேகனுதக் குளிகை, ரசபூபதி, 6 வகை கிராணிக்கும் மூலத்துக்கும் மருந்து, மகாநாராயணத்தைலம், இந்திராணித்தைலம், லிங்க மெழுகு, அக்கினிக் குமாரன் முதலானவை காணப்படுகின்றன.

*-------*

வரிசை எண் : 764 சுவடி எண் : 378(b)

## அகத்தியர் சூத்திரம் 36

ஏடுகள் : 18. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு: 4–5 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம்**

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
 பரிவான தாம்பிரத்தைக் குகையில் வைத்து
சேரப்பா பதினூலு பலமே போடு
 சேந்துருகும் போதினிலே மருந்தைக் கேளு

காரப்பா லவணமது பலமு ரெண்டு
    காட்டுநவச் சாரமதில் ரெண்டு போடு
சிரப்பா கல்வத்தில் தூள தாக்கி
    சிறந்ததொரு பொடிமேலே காரமரை போடே.

## முடிவு

ஆமப்பா யிந்தடவே வயித்தியம் பாரு
    அஷ்ட்டதிசை மெச்சுமுன்னே வாழ்ந்து ... லோகம்
நாமப்பா வயித்தியத்தில் மருந்தை எல்லாம்
    நயமாகக் குறுக்கிவைத்தேன் முப்பத் தாரில்
வாமப்பா யிந்தமருந் தெல்லாம் வைத்தால்
    வயித்தியன்பே ருரைக்கயிலே நோய்க ளோடும்
தாமப்பா எட்டுரெண்டு யிருபத் தஞ்சுத்
    தடையறவே யுருவேறச் சித்தி யாமே.

*தேவி சகாயம், அகஸ்த்திகுபரர்ஞுதனர் மூர்த்தி பாடின சூஷ்த்திரம். எழுதினது. முடிந்தது. சீமன் ஞருயண மூர்த்தி துணையலாது வேறில்லை. செகி.*

## குறிப்பு

*இதில் தாமிரத்தை யுருக்கி சாரம், கார லவணங்கள் கூட்டி அதனின் ஊரல் போக்கி, அதனுடன் வங்கம் உப்பு உருக்கி, அதனுடைய களங்கம் போக்கி, அதனை நீற்றி, மேகம், 18 குட்டம், வாய்வு பித்தநோய்கள் முதலானது களுக்குக் கொடுத்தல், தாமிரவெள்ளை, பித்தம் 40, சிலேட்டுமம் 96. தீர நாகவெள்ளை, நாக சுத்தி முறைகள், இறந்தவனுக்கும் தாது உண்டாக சிவபூபதி ஆகியவை உள்ளன.*

வரிசை எண் : 765 சுவடி எண் : 379

## பால வாகடம்

ஏடுகள் : 56. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு 31½ × 4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : குறைபாடுடையது.

## குறிப்பு

*இது எமது சுவடி எண்கள் 44, 227 ஆகியவை போன்றது. இதில் குழந்தைகளின் நோய்கள், மருந்துகள் முதலானவை கூறப்பட்டுள்ளன. இது பொதுக் காண்டம், மகளிலாக் காண்டம், கெற்ப உற்பத்திக் காண்டம், வியாதி உற்பத்திக் காண்டம், வியாதிக் காண்டம், அலகைக் காண்டம் ஆகிய 6 காண்டங்களை உடையது. ஆனால் இச்சுவடியில் முழுமையாக இல்லை. மற்ற செய்திகளை D 74, 366 ஆகிய எண்களில் காண்க.*

வரிசை எண் : 766 சுவடி எண் : 380

## தட்சிணாமூர்த்தி சௌமிய சாகரம் அட்டவணை

ஏடுகள் : 130. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 4-8 வரிகள். 29×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 3500 ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

சோதியெனும் மனோன்மணியைத் தியானஞ் செய்து
சுகமான ... ... ... ...
ஆதியெனும் வல்லபையுங் கணபதியுங் காப்பு
அரிதான பிறமனொடு சரஸ்பதியுங் காப்பு

**முடிவு**

முகங்கண்ட பின்புமுட்டப் பிரகச் சத்தை
அகங்கண்ட நெந்தகச் சத்திடு பின்புதான்
தகங்கண்ட பாஷாண சத்தொடு பரசம் 393
பயங்கண்டு தீர்ந்து பரிவாய்க் களித்திடே.
களிக்கு முறமையை

**குறிப்பு**

இதில் குருசத்துருக்கட்டு, மீத்துருக்கட்டு, வெடியுப்புகட்ட சத்துரு. தங்கத்துக்கு சத்துரு, ரசத்துக்கு சத்துரு, கெந்தி மெழுகு, தங்க ஈயம், தங்கருகு. அக்கினி திராவகம், கெந்தகத் தயிலம், வழலை நீலகண்டர் கட்டுருகு, பஞ்சபூத சரக்கு அறியும் வகை, பாஷாணத்தில் பஞ்சபூதம், ரசகுளிகை, ரசபாஷாண களங்கு முதலானவை உள்ளன.

"சட்டைமுனி நிகண்டு" முதற்காண்டம் "சவுக்காரம் எண்ணெ வாங்க" என்ற தலைப்பில 79 பாடல்கள் உள்ளன. அதில், வெடியுப்பு, சாரங்களின் பெயர் லவணங்களின் பெயர் முதலியன உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண்: 767 சுவடி எண்: 381

## தேரையர் வைத்தியம் 1001

ஏடுகள்: 50. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 24×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1300 ஆசிரியர் : தேரையர். முழுமை: முற்றற்றது.

**முடிவு :**

கண்டு துற்கைக் கணேசனைப் பூசையத்
தண்டு தூபங் குடுத்தடுத் தேபணி
வெண்டு மாஸ்த்தான மெய்க்குளிகை யிதைக்
கொண்டு தற்கமுவ கூறிடிலேத்திடே. 540

குறிப்பு

*இதில் 540 பாடல்கள் மட்டுமே உள்ளன. சொறிகிரந்திக்கு மருந்து, நாய் ஈ காதில் புகுந்ததுக்கு, வச்சிரவல்லி லேகியம் விரைவாதப் பிடிப்புக்கு, மாந்த குளிகை, தாம்பிரபற்பம், நேத்திர வியாதிகளுக்கு, ராஜபிளவைக்கு, தீபாக்கினி, நீர சுருக்குக்கு எண்ணெய், சஞ்சீவி லேகியம், பேதிகட்டமாத்திரை, சகல விஷங்களுக்கும் நசியம், கிராணிக்கு, ஒனுன் லேகியம், பாஷாணபஷ்பம், நாக்குப் பூச்சிக்கியாழம், கால் விக்கத்துக்கு பத்து முறைகள் முதலான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.*

---

வரிசை எண். 768 சுவடி எண். 382 (a)

## அகத்தியர் வைத்திய ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 9 - 10 வரிகள். அளவு : 26×4. செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 240. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பூரணமாய் நிறைந்தகுரு பரைதாள் போற்றி
புகலுகிறேன் வயித்தியரெத்தினச் சுருக்கந் தன்னை
வாரணமா முகத்தானைப் பணிந்து போற்றி
வயிந்தியந்தான் முன்னூத்தி யிருப துக்குள்
காரணமாய்ச் செந்தூரம் பற்பம் லேகியங்
கருவான தயிலமொடு கிற்த மெண்ணை
சூரணமா மாக்கிருணங் கலிக்க மாத்திரை
சுழிவுகுரு ஞடிமுதல்ச் சொன்னேம் பாரே. க

**முடிவு :**

வைத்ததிலே மேலுமந்த உப்பைக் கொட்டி
வாகாக மேல்சட்டி கொண்டு மூடி
தைத்ததிலே சீலைசெய்து அடுப்பிலேத்தித்
தப்பாமல் கமலவன்னி நாலு சாமம்

நைத்ததிலே யாரவிட்டு எடுத்துக் கொண்டு
நலமான செங்கழுநீர்ச் சாத்தி னாலே
பைத்ததிலே ஒருசாம மாட்டிக் கொண்டு
பருவமுட நொச்சிச்சாரி விட்டு ஆட்டே. 49

குறிப்பு :

இதில் நாடிபார்க்கும் முறை, ஆனந்தவயிரவன், சன்னிக்கு வாத ராட்சதன், சுயமாக்கினி, கபாடமாத்திரை போன்ற குறிப்புகள் உள்ளன.

இதன் பின்னர் 5 ஏடுகளில் சலமலம் கட்டினதுக்கும், கல்லடைப்பு, விக்கல், வாந்தி, சயரோகம், பாண்டுரோகம், வண்டுகடி முதலானதற்கு மருந்துகளும், புண்ணுக்கு எண்ணெய், தாம்பிர செந்தூரம், எலும்புருக்கிக்கு, மாந்தக்குளிகை முதலான முறைகளும் உள்ளன.

வரிசை எண் : 769 சுவடி எண்: 382 (b)

## கும்பமுனி பெருநூலில் 50 - ரசாயனம்

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு: 26×4 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 150. ஆசிரியர் : கும்பமுனி (அகத்தியர்). முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதியென்ற குருநாத னருளில் செய்தா
ரானபடி யண்டமெலா மடக்கிப் பாடி
சோதிவடி வானஅருள் கெணபதியுங் கந்தன்
சொற்பெரிய ஞதாக்கள் பாதம் போற்றி
நீதிவடி வானதெய் வானை வள்ளி
நேசம்மற வாதபாத கமலம் போற்றி
வேதியனுற் பாதிமிறு கமலம் போற்றி
வித்தகனே சொல்லுகிறேன் ரசாய னத்தை. க

**முடிவு**

ஆமடா (தலைமு)ழுக வரிசை கேளு
அப்பனே ஆவிநெய் சீயைக் காயும்
வேமடா வாரமொன்று முழுகி நீயும்
விளலாகும் ரோகமெல்லா மண்ட லத்தில்
தா(மட)ா சொல்லிவைத்தோ முனக்கா யப்பா
தனமான ரசாயனத்தான் பெருநூ லப்பா

ஞமடா கவிதையிரு வத்தி மூன்று
நடத்தியதோர் ரசாயனத்தின் முடிவு முற்றே. 23

*ரசாயனம் முற்றும்.*

ஒறுநிதிபோம் நித்திரைதான் பகல்செய் யாதே
உத்தமனே ஞறியற்கள் மண்டலமு மாதா
ஒளிந்துபோம் வியாதியெல்லாம் யின்ன(ம் சொ)ல்வேன்
ஓகோஓ தயிலமடா சூட்சம் சூட்சம்
ஒளிந்துபோம் வறுமையெல்லா மின்ன மொன்று
(புகலுகி)றேன் புலஷ்தியனே உசித மாக
ஒளிந்துபோம் (கு)ளிநரிதான் பிடித்து வந்து
ஒறுசிற (ங்கை...னே வாயில் போடே.

## குறிப்பு

*இதில் மேகம் 21, வாதம், சூலை, மூலம், பவுத்திரம், 8 குன்மம், கிராணி கல்லடைப்பு, நீரடைப்பு முதலியன உள்ளன. தீர ரசாயனம் செய்முறை பாடலாயுள்ளது. பின்னர் நடக்கை விதி ஒரு பாடல் மட்டுமேஉளது.*

* * *

**வரிசை எண்.** 770 சுவடி எண். 382(c)

# அகத்தியர் 500

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 26×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை : 100 ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

## தொடக்கம்

திரிகடுகு, கோஷ்டம், சடாமஞ்சி, பூலாங்கிழங்கு, விலாமிச்சம் வேர், சாம்பிராணி, சதகுப்பை, குங்கிலியம், அதிமதுரம், ஏலம், கிரும்பு, சன்னிநாயகம், சகஸ்திரபேதி, கஸ்தூரி மஞ்சள், தேவதாரம், கருஞ்சீரகம், அமுக்கிலாங்கிழங்கு, குருந்தொட்டி வேர், கோறக்கிழங்கு,

## முடிவு

வல்லாரைச்சாற் படி 1/2, கோவைச்சாறு படி 1/16, கருஞ்சுக்குட்டிச் சார் படி 1/16, ஆவணுச்சார் படி 1/16, சறக்கொன்றைச்சார் படி 1/16, பசுவின் நெய் படி 1/16, பசுவின் பால் 1/16, சாதிக்காய், சாதிப்பத்திரி, திரிபலை, சீனிச்சக்கரை பலம் 3.

கடவுள் துணை.

**குறிப்பு**

கெற்பத்துக்குகிஷாயம், சகலபித்தத்துக்கும், மூலமுளைக்குதயிலம், இஞ்சி லேகியம், குக்குடாதிச் சூரணம், வல்லாரைகிருதம் முதலிய குறிப்புகள் காணப் படுகின்றன.

வரிசை எண். 771 சுவடி எண். 382 (d)

## புலிப்பாணி 300

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். அளவு : 26 × 4 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 120. ஆசிரியர் : புலிப்பாணி. முழுமை : (முற்றும்)

**தொடக்கம் :**

போமேதான் ஓமத்தின் சாந்தி கேளு
பொங்கமுட னேந்துபடி யரிசி தொட்டி
ஆமேதான் பச்சரிசி மேலே கேளு
அடவான திரிகோணம் விந்து போட்டு
தாமேதான் றீங்கார முள்ளே போடு
தயவாக கும்பனுமந்தில் தனி நூல் சுற்றி
தாமேதான் சலமதுதா னிறைய விட்டு
வளமான சொர்ணமொன்று கூடப் போடே. க.

**முடிவு :**

போமேனீ சிதம்பரத்தை யெழுதிக் கட்ட
போகுமடா நோய்ப்பிணியும் பஞ்ச பாவம்
ஆமேனி பிராமணர்க்கு அன்னம் போடு
அபிஷேகம் சங்கரர்க்கு தீபம் ஏற்று
தாமேனீ மயேஸ்வரற்கு பூசை செய்நீ
தயவுடனே நந்திக்குச் சலத்தை வாரு
வாமேனீ அரசுடனே வேம்பு சுற்றி
வயிரவர்க்கு வடமாலை சாத்த நன்றே 16
குருனுதன் துணே. முருகன் துணை.

**குறிப்பு :**

இதில், நோய்க்கும் பேய்க்கும் யோமசாந்தி, முதலிய முறைகள் உள்ளன.

இதன்பின் 9 ஏடுகளில் பச்சை மஞ்சத்தைலம், நாடி பார்க்க விபரம், மேகஊரலுக்கு மலைவேம்புத் தயிலம் பரங்கிப்பட்டை பதங்கம் ஆக்கிராணம் 32. ஆடாதோடை லேகியம் முதலியன உள்ளன.

இதன்பின் "ராமபாணக் குளிகை, அகத்தியர் செந்தூரம் 300" என்ற தலைப்பில் ராமபாணக் குளிகை செய்முறை ஏடு உளது. இதில் 3 பாடல்கள் உள்ளன. 'செந்தூரம் 800' முற்றும் என்றுளது.

+∿∿∿+∿∿∿*

வரிசை எண். 772 சுவடி எண். 382 (e)

## அகத்தியர் ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 26×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 75 ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

### தொடக்கம்

சாரவே சந்தனுதித் தயிலங் கேளு
  சார்பாகப் புலத்தியனே மச்ச கெந்தரு
சேரவே மிலைக்காயின் சந்த னத்தூள்
  செப்புரே னிடையொன்று தூக்கி யேதான்
வாரவே விலாமிச்சை வெட்டிக் கோரை
  வ்கையான சீந்திலொடு சித்தா முட்டி
காரவே பேராமுட்டி பேரு மல்லி
  கறுவான சித்தமல்லி அசுவ மாமே ௧

### முடிவு

தெளிந்துகொண்டால் மாயத்தில் சிக்க வேண்டாம்
  திரேகத்தி லுள்ளனோய் சிதரிப் போகும்
அளிந்ததொரு சொறிசிரங்கு குஷ்ட்ட மோடு
  அப்பனே வுள்வெக்கை மாரிப் போகும்
நளிந்துயிந்தத் தயிலமது மூழ்கும் போது
  நன்றான புகையோடு புளிகசப்புத் தள்ளே
வளிந்திந்த வாய்வென்ற பதார்த்தந் தள்ளு
  வளமாகுஞ் சரீரமெல்லா மருண ளுமே 10

ரத்தினச் சுருக்கம் முற்றும்

### குறிப்பு

இதில் மேகம் 20, கண்ணெரி, கைகாலெரிவு பிரமியம் முதலியன தீர்க்க சந்தனுதித் தயிலம் செய்முறை உளது.

இதன்பின்னர் 25 ஏடுகளில் வெள்ளைக்குக் கபாடமாத்திரை, பஞ்ச தீபாக்கினிலேகியம், சேத்துமம் 96க்கும் ரசாயனம், பெரும்பாட்டுக்கு மருந்து, பஞ்சலவணக்கட்டு, சவுரியார்குளம்பு, மகாபூரணதிலேகியம், கற்பூர நீறு முதலியன உள்ளன.

வரிசை எண் : 773 சுவடி எண் : 382(f)

## அகத்தியர் குன்ம காண்டம் 300

ஏடுகள் : 4 ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு 9-10 வரிகள். அளவு: 26 × 4 செ. மீ. எழுத்து; தமிழ். கி.எண்ணிக்கை: 120 ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

பூரணமாம் மூலமுத லாறு தாரம்
புரியஷ்டந் தசவாய்வு நாடி மூன்று
காரணமா யிடைபின்னுய் சுழிமுனையு மாகி
கலந்துநின்ற வாதபித்த சேஷ்பமாகி
மாரணமாய் சடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரஞ் சித்தத் தாலே
வாரணமாய் நடத்துவித்த கர்மத் தாலே
வந்ததடா நோய்களெல்லாம் மனுஷர்க் காமே. க

**முடிவு :**

ஆமென்ற நீர்முள்ளிக் காமப் பூவும்
அறிந்தமற்றை வித்துடனே கஞ்சா வித்து
ஓமென்ற வகைக்குஒரு பலமாய் வாங்கி
உத்தமனே தூணிநீர்விட் டொன்றுய்க் காச்சி
தாமென்ற கிஷாயமின்னஞ் சொல்வேன் கேளு
சாதிக்காய் யேலமுடன் தகரங் கோஷ்டம்
வாமென்ற வாலுளுவை சீரகம் வெந்தியம்
வாகான சந்தனமுஞ் செஞ்சந்தனமு மாமே. 20

**குறிப்பு :**

இதில், கர்ம நிவர்த்தி, மேகராசாங்சு எண்ணெய் போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

*********

வரிசை எண். 774 சுவடி எண். 382 (g)

## அகத்தியர் வைத்திய பூரணம் 205

ஏடுகள் : 4 + 5 + 17. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 9-10. வரிகள். அளவு : 26×4. செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 120. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

ஆதிமுதற் பூரணமாம் பொருளைப் போற்றி
அம்பிகையி னடிபகலு மல்லும் போற்றி
சோதிமிகுங் காரணசற் குருதாட் போற்றி
சொலற்கரிய நாதாக்கள் துணைத்தாட் போற்றி
வேதன்மகிழ் கலைவாணி சரணம் போற்றி
வேதாந்த விளக்கொளியின் கமலம் போற்றி
நாதமிகு மாருதா ரத்தாட் போற்றி
நளினமிகும் கணபதிபூ ரணத்தாட் போற்றி க.

பிணிக்குறிப்பு

பூரணமாய் மும்மூலம் பொறியிற் கூடாம்

**முடிவு :**

தவளமா நீற்றலான சகஸ்திர பிராணி நீற்றைக்
கவளமாய்த் தேனிலிட்டாற் கண்ணோய் தொண்ணூற் றுரு
முவளமா யோடிப்போகு முசல்சன் ரோகந் தீரும்
பவளமா மிந்தப்பற்பம் பாரிலி லதிகந் தானே.

**குறிப்பு :**

இதில் லோகபற்பம், தாம்பிரச் செந்தூரம், கல்நார், கந்தகபற்பங்கள். ஆமை ஓட்டு நீறு, முதலியன காணப்படுகின்றன. பாடல்களின் எண்ணிக்கை வரிசையாக இல்லை.

இதன்பின் 5 வெற்றேடுகளின் பின் 17 ஏடுகளில் இதன் தொடர்ச்சி உள்ளது. இதில் 105ம் பாடல் முதல் 201-ம் பாடல் முடிய உள்ளன. தைலவகை முற்றும் என்பதன்பின் 'தாளகப்பற்பம்' என்ற தலைப்பில் 48-ம் பாடல் முதல் 50 பாடல் வரை உள்ளன.

வரிசை எண். 775 சுவடி எண். 382 (h)

## வைத்திய அட்டவணை

ஏடுகள் : 28+3 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 26×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை : 1000 ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம் :**

அண்டவாதத்துக்கு, வாத சுரத்துக்கு, கிரந்திக்கு லிங்கம் வீ 4 ரசம் வீ 2. வெங்காரம் வீ 6. வாளம் வீ 12. சித்தாமணக்கு முத்து வீ 4

யிந்தச் சரக்கெல்லாஞ் சுத்தி செய்துக்கொண்டு கல்வத்திலிட்டு அரைத்துப் பின்பு சித்தாமணக்கு முத்துப் போட்டு அரைத்து சிமிளில் வளித்துக் வைத்துக்கொண்டு வயிற்று வலிக்கெல்லாம் பிரண்டைக் கிஷாயத்தில் குடுக்கவும்.

முடிவு :

ரெண்டுபடி நல்லெண்ணெயில் போட்டு மூணுநாள் சூரிய புடம் வைத்து முளுகவும். சீவக்காய் தேய்த்து முளுகவும். அன்று, புளிமோர், கரப்பன் பண்டந்தள்ளவும். யிதற்கு தீரும் வியாதி-கண்புகைச்சல். நீர்ப்பாச்சல், சத்துப்பிறிவு, தலையிடி, மற்ற வியாதிகளெல்லாம் தீரும். முருகன் துணை. கடவுள் துணை. முற்றிற்று. வயித்திய அட்டவணை முற்றும்.

காலம் :

விசு வருஷம் மார்களி மீ 24 த் தேதி வெள்ளிக்கிழமை துவி. 33—39, பூச 26—6, விஷ 38—8, தை 1—16. இந்தச் சுபதினத்தில் யானமலையி லிருக்கும் நஞ்சுண்டலிங்கக் குருக்கள் புத்ரசிகாமணியாகிய சிதம்பரக் குருக்கள் எழுதினது.

குறிப்பு :

இதில், அண்டவாதம், வாத சுரம், கிரந்திக்கு மருந்து, ஈளை இருமலுக்கு லேகியம், பச்சவாதத்துக்கு தயிலம், அரையாப்புக்குக் களிம்பு முதலியன உள்ளன. சுகபேதிக்கு செந்தூரம் முதலியன உள்ளன.

இதன்பின் 3 ஏடுகளில் நயன விதி, கிரந்திக்கி எண்ணை, தபசி முருங்கை எண்ணை, பிரமியங்களுக்கு எண்ணை, வாதருட்சதன் குளிகை முதலியன உள்ளன.

---

வரிசை எண். 776 சுவடி எண். 382 (i)

## தன்வந்திரியார் பாடல் - சகல வியாதிகளுக்கும்

ஏடுகள் : 2+3. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 26×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 50 ஆசிரியர் : தனவந்தரி முழுமை : முற்றற்றது.

தொடக்கம்

ஆரும் அரிந்திடார்கள் யிம்முறை ஆனந்த மாகவே
சீரும் அரிந்து சரக்கு வகை ருசன் கொண்டுயிட
பூறமுடன் செந்தூறம் கூட்டி சோதியும் யிருவகையாய்
நன்றாய் சொல்லிய பொன் ...

முடிவு

| | | |
|---|---|---|
| வீரம் பூரம் | ரகசிந்தூரம் | வகைக்கி |
| வகைக்கி வீ-1 | பொன்நிமிலே | பலம் 1½ |
| | சீனக்காறம் | |

குறிப்பு

இதில் வாதம் 80; பித்தம், குன்மம், பாண்டு முதலானதற்கு மருந்துகள் சொல்லப்பட்டன.

இதற்குப்பின் 3 ஏடுகளில் வாதக்குடைச்சல் வலிகளுக்கு, வெள்ளெடுப்புக்குப் பிள்ளைகளுக்கு, நஞ்சு தின்ற பேர்களுக்கு முதலான மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 777. சுவடி எண் : 382 (j)

## அகத்தியர் பாடல், சிவகுளிகை-8

ஏடுகள் : 1½. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 26 × 4 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 50. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றிற்று.

தொடக்கம் :

பாரப்பா சித்தரெல்லாஞ் சொன்ன மார்க்கம்
பாங்கான வயித்தியரே யின்னூல் பாகு
வாரப்பா மாந்தமது பிணிகள்க் கெல்லாம்
வகையான தோஷமொடு கணைகள்க் கெல்லாஞ்
சேரப்பா பதினெட்டுப் பேருங்கூடி
திரமாக ஒரு கோர்வை பாடினார்கள்
ஆரப்பா அதைக்குரிக்கி ஒருகுளிகைக் குள்ளே
அப்பனே சிவகளையாய்ப் பாடி னேனே.

முடிவு

கேழப்பா யேங்கலொடு கணைகள்க் கெல்லாங்
கிருபையாய் நொச்சியிலைச் சாற்றிலோடும்
வாளப்பா சளியோடு யிரும லுக்கும்
மைந்தனே வேலியுட சாத்தில்ப் போகும்
வாரப்பா சுரப்பானுக் கெல்லாந் தானும்
விதமான அழுக்குலாம் யிலைபில்ப் போகும்

ஆளப்பா குழந்தைக்கி வந்த னேய்கள்
அப்பனே சிவகுளிகையி லடக்க மானதே.

முற்றும்.
அகஷ்த்தியற் சிவகுளிகை முற்றும்.

**குறிப்பு :**

இதில் சிவகுளிகை செய்யும் முறையும், பின் அதற்கு அனுபான முறைகளும் தீரும் வியாதிகளும் சொல்லப்பட்டுள்ளன.

* * *

வரிசை எண். 778. சுவடி எண். 382 (k)

## கொங்கணர் பாடல், கருக்குளிகை - 8.

ஏடுகள் : 1½. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 10. வரிகள். அளவு : 26×4. செ. மீ. எழுத்து : தமிழ். இரந்தங்களின் எண்ணிக்கை : 50. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**தொடக்கம்**

பாடுகிறேன் பார்வைக்கி ஐங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருட பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
தேடுகிறே னெனைப் போலே நூல்கள் தோருந் ரு
செப்பார்கள் பார்வைக்கு சித்த ரப்பா
சூடுகிறேன் பார்வைக்கி னூல்கள் தோருந்
சுருக்கியே சொல்லுகிறேன் கேளு கேளே. க

**முடிவு**

பாரடா திட்சை நீ நினைக்கா விட்டால்ப்
பாங்கான கருக்குளிகை பொய்யாய் போகும்
ஆரடா யிப்படி நீ அறிந்து கொண்டு
அப்பனே குடுத்தாக்கால்ச் சித்தி யாகும்
சேரடா கருக்குளிகை சித்தற் தானுந்
திரமாக னூல்களிலே சொல்ல வில்லை
வாரடா யெட்டுக்குள் கருக்குளிகையாகத் தானும்
மைந்தனே அட்டமது ஆச்சு முற்றும். 8

கொங்கணர் பாடல் யெட்டே முற்றும்.

**குறிப்பு**

*இதில், கருக்குளிகை செய்யும் முறை, அதனால் தீரும் நோய்கள் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன.*

*\~\~\~*\~\~\~*

வரிசை எண் : 779 சுவடி எண். 382(b)

## மச்சமுனியார் பாடல் 8

ஏடுகள் : 1½. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 26 × 4 செ. மீ. எழுத்து : தமிழ். செய்யுட்களின் எண்ணிக்கை : 50 ஆசிரியர் : மச்சமுனி. முழுமை: முற்றும்.

**தொடக்கம் :**

பூரணமா யாண்டபரா சத்தி பாதம்
    போற்றி செய்தேன் தாயேயுன் பாதங் காப்பு
காரணமாய் மானிடர்கள் பிழைக்க வேண்டிச்
    சதாசிவனை மனுக்கேட்டு மருந்து சொன்னோம்
காணமாய் ஞதாக்கள் பதினெண் பேருங்
    கட்டிவைத்தா ரதின்பிரகு னூல்களெல்லாம்
வாரிணமாய் யென்தாயாள் உபதே சித்த
    யெட்டிலே பாடினேன் பாரே க

**முடிவு :**

கேழப்பா பதினெண்டே ரெண்டுத் தானுங்
    கிறுமையா யுன்கிட்ட யிருந்து தென்றால்
நாளப்பா நோயறிந்து செய்தி யென்றால்
    நலமாக உனைப்போலே வயித்தியரில்லை பாரு
மாளப்பா மானிடரே சுறுக்கமாய் சொன்னேன்
    மைந்தனே சிறுனூலைப் பூணிப் பாரு
வாளப்பா மானிடரே சுறுக்காய்ச் சொன்னேன்
    வகைதுகையா பச்சமுனி பாடல் முற்றே 8

*மச்சமுனிப் பாடல் முற்றும்.*

**குறிப்பு**

*இதில், காய்ச்சல், சன்னி 13 முதலிய சகலபிணிகளுக்கும் கசாயம், மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன.*

வரிசை எண் : 780 சுவடி எண் : 382 (mv)

## திருமூலர் பாடல் 8

ஏடுகள் : 1½. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு: 26×4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 50. ஆசிரியர் : திருமூலர் : முழுமை : முற்றும்.

**தொடக்கம்**

(தா) தாவேநந்தி தயவா யுரைத்தமொளி
மாதாவே யென்தாயே மனோன்மணியே
ஆதார மான அறுமுகத்தோன் பாதம்
வேதாந்த பூரணமும் மெய்ப்பொருளுங் காப்பாமே. க

**முடிவு :**

வீணான வீணருக்குக் குடாதெ யென்றும்
விருதாவாய்ப் போகுமென்று யென்குருதான் சொன்னார்
தானான மேகத்தில்ப் பிரந்த ரோகஞ்
சதாகுருவின் யெண்ணையிலே தீரு முற்றே. 8

திருமூலர் எட்டு முற்றும்.

**குறிப்பு :**

இதில், கிரந்தி, குட்டம், சூலை, புண்கள், வெட்டை, அரையாப்பு முதலானது தீர எண்ணெய் செய்முறை கூறப்பட்டுளது.

* * * * * * * * * *

வரிசை எண். 781. சுவடி எண். 382 (m)

## நந்தி பாடல் 8

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 26×4. செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 60. ஆசிரியர் : நந்தீசர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

சீர்பெருகு மனோன்மணியென் மாதா வென்றுஞ்
சிவன்தானும் பிதாவென்றுஞ் அவருடகீச னென்றுங்
கார்பெருகுந் திருமூலர் பிள்ளை யென்றுங்
கையிலாச போகர்தான் தமைய னென்றும்

பேற்பெருகும் சின்மயத்தின் கருணை யாலே
பேசிவைத்தாள் சரஷ்பதியும் யென்னுவில் தானும்
பேற்பெருகும் மெஞ்ஞான மெய்ப்பொருளே நந்தி
யெடுத்துரைக்குங் கணபதியுங் காப்புத் தானே. க

முடிவு :

ஆச்சப்பா பரங்கி சிவகிரி தானு
அப்பனே அகிலியது மூணுங் கூட்டி
மூச்சப்பா கருங்கஞத்துக் குருவி தன்னை
மூன்ருக வேகிளித்து மருந்து போடு
வாச்சப்பா நெய்யிலே வறுத்து தானு
மைந்தனே குளிகைளது செய்து கொண்டு
நாச்சப்பா கந்தம் பனந்தாள் கட்டு
நலமாக நந்தியுட பாடல் முற்றும். 8

*நந்தி பாடல் யெட்டு – அ - முற்றும்.*

**குறிப்பு :**

*இதில், விஷக்கடிகளுக்கும், பிள்ளைகளின் பிணிக்கும் குளிகை செய்யும் முறையும் அனுபானமும் மற்றும் கூறப்பட்டுள்ளன.*

*இதன் பின்னர் 13 ஏடுகளில், மாதேவிக்கு எண்ணெய் கண்ணில் படலம், மண்டைக் கரப்பான், கீரிப்புழு, கன்னகிரந்தி, பிள்ளை பிணிக்குக் குளிகை மருந்து, வல்லாரை நெய், சுரங்களுக்குக் கசாயம், மூக்கில் நீராளிவுக்கு நெய் நஸியம், வாந்திக்குக் கஷாயம் முதலியன உள்ளன.*

வரிசை எண் : 782. சுவடி எண் : 383.

## அகத்தியர் வைத்திய பூரணம் 400

ஏடுகள் : 85. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 5 வரிகள். அளவு : 40 × 3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**குறிப்பு**

*இது, எமது சுவடி எண் 375 (b) போன்றது. இதில் 395 பாடல்கள் உள்ளன.*

வரிசை எண்: 783 சுவடி எண்: 384

## ரோமஷி 500

ஏடுகள்: 82. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 39×3½ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 3500. ஆசிரியர்: ரோமஷிரி. முழுமை: முற்றும்.

### குறிப்பு

*இது, எமது 371 (a) போன்றது.*

வரிசை எண். 784 சுவடி எண். 385 (a)

## அகஸ்தியர் வைத்தியம் 150

ஏடுகள்: 20. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 25×3½. செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 60. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

சீரணி கொன்றை சூடுஞ்
    சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
    வணங்கிநூற் றன்ப துக்கும்
பூரண வாசல் ஞான
    சரஷ்பதி பாதம் போற்றிக்
காரண மான செஞ்சொல்க்
    கற்ம்ம சூஷ்த்திரங் காப்பதாமே. க

### முடிவு

பாச்சியே பங்கு செய்து
    பகர்ந்திடும் மருந்து கேளு
ஒச்சப்பா வெள்வெங் காயம்
    கடுகுதான் மிளகு சுக்கு
வாச்சதிப் பலியும் ஓமம்

### குறிப்பு

*இதில் 136 பாடல்கள் உள்ளன. 137-ம் பாடல் முற்றற்றதாயுள்ளது. வீர, பூர, வெள்ளைகளின் சுத்திகள், தொட்டிப் [illegible]*

கல், நாகம், காரியம், அப்பிரேகம், சுத்தி கிரமங்கள், வெளளை செந்தூரம், தானிக்காய் லேகியம் முதலியன உள்ளன.

***********

வரிசை எண். 785 சுவடி எண். 385 (b)

## அகத்தியர் பூரண சூத்திரம் 48

ஏடுகள் : 12. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். அளவு : 25×3½ செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 250. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

தொடக்கம் :

நாடியதோர் பூரணமாம் நாதாந் தத்தில்
நடனதிரு சூத்திரத்தைப் பாடு .........
ஆடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிஷிகள் காப்பு
கூடியதோர் ஞானபா வாலை யாலே
கூறுகிறேன் காப்புகட்டி சிறீங்கா ரத்தாற்ப
பாடியதோர் பலநூல்கள் பொய்யாய்ப் போகப்
பாலாகு மெந்தனுட நூல் தானே. க

முடிவு

தானென்ற லிங்கசெந் தூரஞ் சொல்வேன்
தாம்பிரப்பொடி பெண்கருவா லரைத்துப் பூசி
மானென்ற தேன்வாங்கி முலைப்பால் மேலே
மடைத்துத்த மெருக்கம்பாலதற்கு மேலே
நானென்ற சாம்பிராணி கூடன் றண்டு
நாலுசீலை மண்செய்து காடை மூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோய்க் காகும்
விளம்பினேம் நற்பத்தெட்டுச் சூத்திர முற்றே 48

குரு பாதாரவிந்தமே கெதி.

குறிப்பு :

இதில், அரிதாரக்கட்டு, பாஷாணக்கட்டு, நாகக்கட்டு, செம்பு சுத்தி, துரிசுக்கட்டு, மனோசிலை சுத்தி, அயசெம்பு, தரம்பிற பற்பம், லிங்க செந்தூரம் முதலானவை உள்ளன.

வரிசை எண். 786 சுவடி எண்: 385(c)

## (அகத்தியர்) சாலநிகண்டு 4-ம் காண்டம்

ஏடுகள்: 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். அளவு: 25×3½ செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 400. ஆசிரியர்: (அகத்தியர்), முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்:**

ஏத் ........ கண்டிரு நூத்தையும்
சாத்த மூல ரகத்திய னும்மே
பூத்த தாரணி பூபதி கந்தியை
காதவேள் கணபதி காப்பதே

முடிவு

தளக்கவே வாடை ........ மாரியேக
துளக்கவே சல்லியம் புகுந்துண்டு வாங்கி
இளக்கவே பூரம் ........ தூதுவளை
தளக்கவே மூன்றுகனி வளியாம் நெய்யே 164

குறிப்பு

இதில், ஸ்ரீ வசியம், கண்ணுக்கு மாரணம், தண்டு சுருங்க, யோனியடைக்க முதலான குறிப்புக்கள் உள்ளன.

வரிசை எண்: 787. சுவடி எண்: 385 (d)

## தட்சிணாமூர்த்தியான அகத்தியர் பூசாபதியான சூத்திரம்-ருசிவிபரம்

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 24×3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 250. முழுமை: முற்றும்.

**தொடக்கம்**

வானைத் தாவிய பொதிகை மகத்தான ரிஷியுடைய வாக்கினுரை
பானைத் தாவிய பூசை பரிவான சிவயோகப் பண்பே கேளு
மீனைத் தாவிய ராசி விளங்குகின்ட கன்னிமுதல் வெல்லு மேஷம்
சோனைத் தாவிய துலாத்தின் சென்ம ருசிக் கருவைச் செப்பிறேன். க

முடிவு

ஆமப்பா களங்கெடுத்து நூத்துக் கொண்டு
அப்பனே வை ......... தன்னீற்
......... திருணியில்லை யென்ன சொல்வேன்
தேகசித்திக் கெடுத்த கற்பம்
நாமப்பா களங்குகளை செந்தூரித்து
நலமாக நிறடுமொரு குண்டி யுண்ணு
தாமப்பா சரீரத்துப் பிணியில்லை
சாதகமா யாதிகற்பம் பாடினேனே 58

குருவே துணை.

குறிப்பு

இதில் காயசித்தி, வாதசித்தி பெறவும் மருந்துண்ணும் காலம் ராசி, முதலானதும் காந்த சத்து என்ற குறிப்புக்களும் உள்ளன.

வரிசை எண்: 788 சுவடி எண்: 386 (a)

குணவாகடம்

ஏடுகள்: 8. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 9 - 11 வரிகள். அளவு: 27×3½ செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 375. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

யெண்பது வாதந் தன்னி
லிருவகை வகுத்துக் காணில்
நண்பனே யரைக்குங் கீளே
ஞற்பது வாத மாகும்
பண்புரே நரைக்குங் கீழே
பயித்துனுங் காகும் வாதம்
வண்புசேர் குழலி னுளே
வாகடத் தியல்பு தானே க

முடிவு

அதில் நில்லாமல் போனால் தண்ணீர் துரைமணல் படிஉ. நண்ணுய் வருத்து நொச்சியிலே துவைத்து சாறுபடி 1. மணலில்விட்டு கொதிக்கிற

போது யிருத்து திப்பிலி விட 1 பொடி செய்து தூவி குடுக்கவும். இந்தபடி மூணு நாளைக்குக் குடுக்க முரைகாச்சல் நிற்கும். பத்தியம் கைப்பு, புளிப்பு, தவிரவும்.

## குறிப்பு

*இதில் வாதத்துக்கு எண்ணெய், பித்த பாண்டின் குணம், வாதக்காப்பான் குணம், பித்த காசத்தின் குணம், வௌவால் லேகியம், சிலேஷ்ம சுரத்தின் குணம் முரைக்காய்ச்சலுக்கு கஷாயம் முதலியன உள்ளன.*

oooooooooooooooo

வரிசை எண். 789 சுவடி எண் 386 (b)

## வைத்தியக் கும்மி

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 27×3½ செ.மீ எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 50 ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை . முற்றற்றது.

### தொடக்கம்

மானே கும்மிய டியுங்கடி — மட
மாதே கும்மிய டியுங்கடி
தேனே கும்மிய டியுங்கடி — தேசஞ்
செழிக்கக் கும்மிய டியுங்கடி க
அச்சு நடையன் பெருச்சாளி — அய்ய
னதுமேலே யெழுந்தருளி
யிச்சி யடியின் விநாயகன் — முன்னே
யிதமாய்க் கும்மிய டியுங்கடி — வெகு
பதமாய்க் கும்மிய டியுங்கடி

### முடிவு

தேங்காய்ப் பாலுஞ் சிரு குரிஞ்சா
தினந்தின மூன்று ஞள் குடிக்கில்
வகையாக மேகமெல்லாம்
நிசமாயிப்ப வாங்குமென்றே 16

கும்மியடி

## குறிப்பு

*இதில் சுரம், மேகம், பரங்கிச் சூலை, கிரந்தி, குட்டம், பித்தம், வீக்கம், வயிற்றுவலி இவைகள் தீர கசாயங்கள் செய்முறைகள் உள்ளன.*

வரிசை எண். 790 சுவடி எண். 386 (c)

## (வைத்திய) அந்தாதி

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 27×3½ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை :150 ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

ஆரியமரம் வாகடத்தி னுட்பொருளை யாராய்ந்து
சீரியதாய்ச் செந்தமிழால்ச் செப்புகிறேன் — கூரியதா
யுள்ளமீ துற்றுவித்தை யோதும் விநாயகனே
வள்ளலே யென்மனத்துள் வா.

**முடிவு :**

கேளுங்கய் யாந்தகரைச் சாரு கிளர்கடுக்காய்
ஆளுமிந்த நல்லெண்ணை யாய்வடித்து — ஞளுமெண்ணித்
திண்ணீர் பதினைந்து சேற்றுமத்தில் வந்தபிணி
சொன்னேன்போம் நில்லாது தூது 32

**குறிப்பு**

இதில் செய்யுட்கள் அந்தாதியாக உள்ளன. சேற்றுமத்தில் வந்த கிரந்தி பிணிசம், நீரேற்றம் தீரமருந்து, அசீரணத்திற்கு மிளகு கசாயம், அண்டவாதம், விக்கம், பிலிகை, விக்கல், அக்கினிமந்தம் தீர இரண்டு பிரயோகம், அட்ட குன்மத்துக்குக் கசாயம், காசம் சுவாசகாசத்துக்கு மருந்து முதலான தலைப்புக்கள் உள்ளன.

* * * * * * * * * *

வரிசை எண் : 791 சுவடி எண் : 386 (d)

## அகத்தியர் ரத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 52. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8 - 9 வரிகள். அளவு : 27 × 3½ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**குறிப்பு :**

இது, 249, 382 (a) போன்றது. இதில் 261 செய்யுட்களே உள்ளன. இது அச்சிடப்பட்டுளது.

வரிசை எண். 792. சுவடு எண். 386 (e)

## திருமூலர் கெர்ப்ப வாகடம்

ஏடுகள். 15. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள், அளவு: 27×3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 350. ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்:**

அய்ந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து மிளம்பிரை போலு மியத்தனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போத்துகின் றேனே.
உன்னிய கெற்பக் குளியாம் வெளியிலே
பன்னிய ளுதம் பகற்ந்த பிறிதிவாம்
வன்னியும் வயுவு மாயுருந் சக்கில்
மன்னிச் சமளுய் வளற்க்கு முதகமே க

**முடிவு**

தின்றிட னேயெல்லாம் திசைகெட்டு வோடிடும்
பன்றிய வாயுவு பக்கத்தில் சேருது
தண்டிய லோற்க்குச் செய்முறை
மண்டிய சித்தாக மகாவியாதி போகுமே 112

முற்றும்

**குறிப்பு:**

இதில் நாடிபார்க்கும் முறைகளும், அதனல் வியாதியைக் கணிக்கும் முறைகளும், கண்ணுக்கு மாத்திரை, தங்கச்செம்பு, முதலான மருத்துவங்களும் சொல்லபபட்டுள்ளன.

வரிசை எண். 793. சுவடி எண். 386 (f)

## குருநாடி

ஏடுகள்: 27. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 27×3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 700. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை முற்றற்றது.

**தொடக்கம்**

ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செயிகை
உத்துணர்ந்து சூஷ்த்திரமா வுதித்த வாறும்
ஆங்காரங் கொண்டெழுந்த மனத்தைப் பேற்ந்து
அருவுரு சுரூபமெனு மந்த னேற்மை
பாங்கான நாடிநறம் பான வாறும்
பளமுறைதா னுரய்ந்து பாடி வைத்தேன்
நீங்கான கணபதியுங் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்ப தாமே. க

**முடிவு :**

பண்புனல் வாயுவு வெல்லாம் (போகினு) மனலும் போகா.
......சேற்ந்தலோற் போல நின்று வீக்கங் காட்டி
மென்போ லுடம்பு வெந்தால் வென்றலை விட்டுப் போமே. 130,

**குறிப்பு**

இதில் நாடி பார்க்கும் விதம், குருநாடி இருப்பிடம்,அதுபற்றிய விவரங்கள் உள்ளன.

* *

**வரிசை எண்.** 794 **சுவடி எண்.** 386 (g)

## மந்திர சாத்திரம்

ஏடுகள் : 14. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு: 27×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கட்டு மந்திரம்

ஓம்மன்றித் திரந்து மனங்கருதி மாணிக்கக்கற்கொடுத்து வாராய் நன்றே கோவு நமக்காகக்குடியும் நமக்காக ஊரும் நமக்காக வுலகு நமக்காக நகரியும் நமக்காக னுடு கட்டினேன் நகரிகட்டினேன்.

**முடிவு**

முலையுண்ணுத பிள்ளைக்குச் சக்கரம் (இருக்கிறது) தோஷத்துக்குச் சக்கரம் (இருக்கிறது).

**குறிப்பு**

இதில் கட்டுமந்திரம் வசியம் வாலை, காமம் அதிகரிக்க லேபன மருந்து, மந்திரம், எந்திரம், இமேருந்து முதலியன உள்ளன.

***********

வரிசை எண் : 795 சுவடி எண் : 387 (a)

## கொங்கணர் கடைக்காண்டம்

ஏடுகள் : 127. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. (ஒடிந்தும் உள்ளன). பக்கத்திற்கு : 8 - 9 வரிகள். அளவு : 21½ × 3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2500. முழுமை : முற்றுமுளது.

**காலம்**

விரோதகிறுது வருடம் ஆவணி மீ ...... சுக்கிலபட்ச பிறதமையும் உத்திராட நட்சத்திர ... ... ... ... கூடின சுபதினத்தில் திருக்கண்ண மங்கையிலிருக்கும் பழனியப்பன் எழுதி முகிந்தது முற்றும்.

சற்குருவே துணை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 263 (a) போன்றது.

*\~\~\~*\~\~\~*

வரிசை எண். 796 சுவடி எண். 387 (b)

## அகத்தியர் தத்துவம் 308

ஏடுகள் : 84. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7-9 வரிகள். அளவு : 21½ × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

மணிகொண்ட யானையெட்டுந் திசையெட்டும்
மதியீ ரெட்டும்
கணிகொண்ட வியாகிறிதி யேழு .........
... ... ... ... ... ... ... ...
பணிகொண்ட கலைகளஞ்சு பூரஞ்சுத ...
மஞ்சுபதிகளஞ்சு
மணிகொண்ட மறைஞன்கும் புவன மெல்லாம்
படைத்தவனை யடிகள் காப்பாம். க

## முடிவு

உண்ணப்பா பலபுவனந் துருவ மெல்லாம்
ஒடுங்காத பிறப்பினிலே யொன்றும் நில்லா
தெண்ணப்பா யிவனருவத் தாசை மாத்தி
யெங்குமற் றைந்தெனதுனக்கு மழிவில்லாத
கண்ணப்பா சகலத்துக்கு மனந்தான் பாதங்
கரைகாணப் பேரொளியாம் ரூபத்தைப் பாரு
தண்ணப்பா பலகெந்த தாசை

## குறிப்பு

இதில் 368 பாடல்கள் முழுதுமிருக்கின்றன. இதில் ஞானப்பெருமை, சுந்தரானந்தர், மச்சமுனி, கமலமுனி சுருக்கிடை தூத்திரமும், சங்கபீசம் செம்புசுத்தி, கண்ணிச்சித்தர் பூவழலை, சிவபுண்ணிய அனுக்கிரகம், வேதாந்த தத்துவம் முதலிய குறிப்புக்களும் உள்ளன.

---

வரிசை எண். 797. சுவடி எண். 388 (a)

## பதஞ்சலி வகார சூத்திரம் 20

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 21×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 150. ஆசிரியர் : பதஞ்சலியார். முழுமை : முற்றும்.

## தொடக்கம்

பூமலியுங் கண்ணுள்தன் பாதம் போற்றி
புகலுவேன் வாதத்தின் றிறவு கோலை
நாமுரைப்போ மைநான்கு பாட்டுக் குள்ளே
நலமான வாதவித்தை ஞான மார்க்கஞ்
சோமனுற்ற வேணியனு ருபதேசத் தாலே
துறையறியும் பதஞ்சலிதன் சூத்தி ரத்துள்
ளேமவித்தைக் காதியென்ன வஸ்த்து உப்பு
விதையறிய மாட்டாமல் யேங்கி னரே. க

## முடிவு :

வாளவே நடுவெழுத்துக் காதா ரத்தை
வாட்டிவிக்கத் தலையெழுத்துப் பிரகா சிக்கும்
மீளவே கடையெழுத்தோ டாக வய்யா
விட்டெழுத்துந் தொட்டெழுத்து மேற்கீ ளாச்சு

தாளமே வேண்டாங்கா ணன்பத் தொன்றுந்
தலையெழுத்துக் குள்ளாக்கிச் சார்ந்து போச்சு
கோளுமே வாராது பறனீ யாவீர்
கூறியவாதத் திறவுகோற் றான முற்றே. 21

முற்றும் குருவே துணை

## குறிப்பு

இதில் வஸ்து உப்பு என்பது அக்கினி பூவுள்ள (அக்கினிபீசம்) உற்றவிடமே வஸ்து உப்பு இருக்குமிடம் என்ற குறிப்பும், அதன் தீட்சை, பஞ்சபூதம் அமைப்பு முதலியனவும் உள்ளன.

வரிசை எண். 798 சுவடி எண். 388 (b)

# ராமதேவர் சுருக்கம் 50

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 21×3செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை :300. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : குறைபாடுடையது.

## குறிப்பு

இது எமது சுவடி எண் 316 (b) போன்றது. 316 (b) இராமதேவர் பட்சணி 50 என்றுளது. 50 பாடல்கள் உள்ளன.

இச்சுவடியில் 11வது ஏடு இல்லை. 51 பாடல்கள் இருக்கின்றன.

***********

வரிசை எண். 799 சுவடி எண். 388 (c)

# ரோமரிசி வகார சூத்திரம் – 50

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 21×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 160. ஆசிரியர் : ரோமரிசி முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம் :**

பூரண மானதோர் பொன்னடி மூலங்
காரண மான கருவிந்து நாதம்
வாரண மான குக்குடத் தண்டம்
பேரணி வித்தையிற் பேசுங் கிளஞ்சியே.

கன்னிகை யென்றே கயந்தார்புரி யஷ்ட்டம்
மன்னிய பூரணம் வளந்துது கேட்குது
உன்னிய தீச்சை ஒகந்துரை வாளு
ளன்ஞன பூரணம் பூண்டிடு முத்தியே. 53
முற்றும் குருகிடாட்சம்

**குறிப்பு**

இதில் சிவவிந்து, வீரம் (சீனம், வெடியுப்பு, கல்லுப்பு, பெரிகாரம், அட்டுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, கற்பூரம், சாரம்) லவணங்களை மூலமாகக் கொண்டு மெழுகு முடித்து குக்குடத்தின் அண்ட ஓட்டில் பூசி நீற்றிச் சுண்ணமாக்கி, வாதஞ்செய்முறை, போக்கு முதலியன உள்ளன.

வரிசை எண். 800. சுவடி எண். 388 (d)

## போகரிசி சூத்திரம் வகாரம் 100

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள் அளவு : 21×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை 600. ஆசிரியர் : போதரிசி. முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு :**

22 பாடல்களைக் கொண்ட எமது சுவடிஎண் 376 (c) போன்றது இது. இதில் 101 பாடல்கள் உள்ளன.

வரிசை எண். 801 சுவடி எண். 388 (c)

## ராமதேவர் சிவயோகம் 200

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 11-13 வரிகள். அளவு : 21½×3½செமீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

மூலமெனும் முதற்பொருளாய் மூர்த்திநடு வணையில்
முதண்ட மானதொரு பிறம்மமதற் கப்பால்
ஞாலமெனும் தவமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெறுவெளியில் நடுவெளியின் கிழே

நீலமிகு நெறுப்பாறு மயிற்ப்பாலத் தப்பால்
நிரைந்தபரி பூரணமாய் நிரக்கணம தாகிச்
சீலமிகுந் தவமுடையோர் யிறுதயமே தானாய்
சேர்ந்துநின்ற பரம(கு)ரு சிர்பாதந் துணையே. (க)

## முடிவு

முத்தான சிவயோக மிறனார் தன்னை
முனையான சறுக்குறு வென்றெ டுத்துப் பாத்து
சித்தான சித்துவிளை யாடும் மைந்தா
சிவயோக மார்கமடா திறந்தான் மெத்த
பத்தாசை கொண்டுமன மவுன மாகப்
பதிவாக சியோக மிருநா ரப்பா
வித்தான பிறவியது யத்துப் போகும்
மேலான சிவயோகம் விளங்க முற்றே. 201

பரிபூரண ஆனந்தர் துணை.
குருவே துணை.

## குறிப்பு

இதில் அகோர திட்சை, காயசித்தி, பூசைவிதி, சக்கரம், சுத்தி விபரம், லிங்க குரு, கடுக்காய் கற்பம், திலதமை, நந்தியுப்பு, காரச்சிப்பி முதலியன கூறப்பட்டுள்ளன.

oooooooooooooo

வரிசை எண். 802 சுவடி எண். 388 (g)

## அகத்தியர் மாயா ஊஞ்சல்

ஏடுகள் : 40 ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : $21\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

## தொடக்கம்

வகுந்து யிந்த ஊஞ்சலுட மகிமை கேளு
மகத்தான பூரணமாய் மாமதிய கொம்பில்
பகுந்து நல் சரிதை முதல் ஞான மட்டும்
பாங்கான சங்கிலியை யதிலே பூட்டி
மகிழ்ந்து தெய்வ சதாசிவனே பலகை யாக
மகத்தான நால்வறுங் காலுக்காயி பூட்டி
தொகுந்த தின மெல்லுன்மன தாயிருந்த யூஞ்சல்
சுத்துகுருள் சிககாலஞ் சுத்து ருளே. க

**முடிவு**

அய்யரென்று சொன்னமொழி கேட்டு யோங்கி
அடியத்த மரம்போலே விழுந்தே யாறும்
அய்யரென்று கொங்கணரே அய்யா வென்று
அடியனைப்போல் வாமென்று எடுத்தா(ர்) அய்யற்
அய்யனன்று சொன்னதென்ன மூல மாதி
அதுகண்டு பிராணனைத்தான் அரிய வேணும்
அய்யற்னன்று யிருப்பதால்கே மேருவுக்குத் தெற்கே
அவருடைய ஆட்டெல்லாம் துரிகி யாட்டே
ஆடுறது மதிக்கிரது படைக்கிரதும் செயிதார்
ஆசையற்ற சிவயோகம் ஆமை யாலே
மூட்டுரது மமிக்கிரதும் படைக்கிரதும் பணம்
மூதண்ட விமினாயுட துரிசி வெள்ளை.
குருபாதமே கெதி 10

**குறிப்பு :**

இதில், பஞ்சபூதத்தியல்பு, தெய்வ இலக்கணம், மூடர்களின் செயல், குருவிலக்கணம் முதலானவற்றையும் சிவயோகத்தையும் தத்துவமாகக் கூறப் பட்டுள்ளன.

**வரிசை எண்.** 803. சுவடி எண். 388(h)

## அகத்தீசர் வாசி 10

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு : 10 வரிகள். அளவு : 21½ × 3½செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**தொடக்கம்**

மோஷசத்துக் செயிதுவழி மனத்தைக் கண்டால்
முன்னுரைத்தோம் நூல்களிலே வாசி பார்க்க
பாச்சொத்த மனத்திலொன்றில்ப் பாயா மல்த்தான்
பக்குவமே செயிது நன்றாய் பாறு மூக்கில்
கூச்சத்தால் லொளிகாணும் குறியைச் சேருக்
குருச் சொல்லக் காணுமல்லால் மத்தோர் காணுர்
நீச்சதை வுருஞதத்தில் நின்று பார்நீ
நேர்மையுள்ள குறுமுகமாய் யிருந்த நூலே. -க.

**முடிவு**

தானென்று மலைவதினல் வறுவ தேது
சமுசாரி ஞானிக்கே மோஷ்ச மெயிது

கூறென்றுங் குருடென்றும் முடவ னென்றும்
குலையீனன்ஞ் செகுடூமை யாகா தென்றுமங்
கோதென்ற தத்துவங்கள் குறையில் லாமல்க்
குடிகெடுத்த விஷாதியினால் கிடந்தி டாமல்ப்
பாதென்ற சந்திரன்போல் திரேகமுண் டானல்
பரமேரஷ்சம் பூரணத்தைப் பத்தி முத்தே. -11.

குருதெஷ்சணமூர்த்தி துணையாக வேணும்.
சரஷ்பதியம்மன் துணையாக வேணும்.

குறிப்பு

இது வாசியோகத்தைப் பற்றிக் கூறுவது.

வரிசை எண். 804 சுவடி எண். 388 (1)

## கொங்கணர் ஞானம்

ஏடுகள் : 2 ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 21½ × 3½ செ. மீ எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை 50. ஆசிரியர் : கொங்கணர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்

சொல்லுகிறேன் சூஷ்சத்தின் மகிமை கேளு
சுருதிவெளிக் கெட்டாத சூஷ்ச மப்பா
வெல்லுவையோ சொல்லுவதற்குப் புள்ளாய் புள்ளாய்
வேதாந்தஞ் சித்தாந்தம் பறையனறக் குள்ளே
அல்லுபக லத்தமகா மேறுமலை யுச்சி
ஆதித்தன் சந்திரனுமுதித்த பரவெளிக் குள்ளே
நெல்லூகம் மயிற்பாலம் நெறுப்பாத் துக்கு
நேராக அகாரநடு கொம்பு தானே. க

முடிவு

நிதானித்தா னஞ்சுசுளி முனையைக் கட்டி நின்றால்
நேருக துவாரத்தில்ப் பளிச்சென் றப்போல
மிக்குறட்டால் மெரிச்சுத்தம் தங்கம் போலே
மெளும்புமப்பா பளிச்சென்றே பிரகாசிக்கும்
துலைக்குளிய திலைக்குவந்து அமுந்த முண்ணும்
சோதியாம் மருபறத்தின்ஞ் செயலையெண்ணில்
அளுந்திவிட்டேன் ஆதியந்த மில்லா விடத்தை
அறிந்துநீ கட்டிநின்ற யிடந்தான்ங் காணே. 6

**குறிப்பு**

ஆறு ஆதாரங்களின் தத்துவங்களைக் கூறுவது இந்நூல்.

வரிசை எண். 805. சுவடி எண். 389.

## நோய் நிதானம்

ஏடுகள் : 65. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு: 35×3½செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை 2600. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

யோகத் தோற்கும் மங்கையொடு வெகு
போக மாற்கத் தோற்கும் வெகற்கும்
நீரிழிவு மிகுதி யோற்கு மிகையாகும் .........
கணந்தான் விதியாகாதே. -208

**முடிவு**

ஆமென்ற அங்க மழன்றெ யெரிக்கும்
அசதிவரும் அடிக்கடிக்கி யிரும லுண்டாம்
தாமென்ற தண்ணீர்தான் ...........

**குறிப்பு**

ஏடுகள் 49-114 வரை உள்ளன. இதில் சூன்ம நிதானம், மேகம் 21, குஷ்ட்டம் 18-க்கும் பேர், பாண்டு வியாதி உற்பத்தி காமாலையின் பேர் நிதானம் ஆகியவை உள்ளன.

வரிசை எண். 806 சுவடி எண் 390

## அகத்தியர் பெருநூல் (2 காண்டங்கள்)

ஏடுகள் : 90. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு: 33×4செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 4000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

பாயிரம்

ஆயிரத் திருநூறு முன்னூ லாய்ந்து முதற்காண்ட சூத்திரம்

பாயிரத் தொகுதி யென்று பாடிய வயிற்றிய பாகமோ
ராயிரக் கவிமுன் னூறு முமைக்கர னுரைக்க வீனற
தாயெனக் குரைப்பக் க(ாரிய)ஞ் சாத்திய (விதி) நூல் தானே. க.

நூல்

பூரணமே யேக நிர்மயமே ஞானப் போதகமே
பரப்பிரம்ம வெளியே யாதி
காரணமே சித்தறிவால் மூலவட்டக் கணபதியே
உள்மனத்தின் கருவே சோதி

## முடிவு

காப்பெனு வாதங் கடந்தகுரை பாடத்
தாப் ........... ற்றைச் சாற்றவே - மாப்பெறு
வாதநூல் முன்னூறும் வகாரத் துரைசரிதான்
வேதமே சொல்லி விளம்பு.

தெஷ்சணு மூர்த்தியுடைய பெருநூல் சாலத் திரட்டில் வகாரங்
கொண்டது முற்று.

## குறிப்பு

இதில், நாவிக்குளிகை, தோஷகுணம், குழந்தையுண்டாக, குரை நோய்க்கு மருந்துகள், சயத்துக்கு, காமாலை சோகைக்கு, தாளக செந்தூரம், கெந்தக உருண்டை, பலகரை கர்பம், தங்க பற்பம், குளம்பு வகை, வங்கரச செந்தூரம், சிவலோக லேகியம், அப்பிரேக காந்த பற்பங்கள், உப்புக்கட்டு, சாதிலிங்க மெழுகு, பாசானச் செந்தூரம், கெந்தி செம்பு முதலியன காணப்படுகின்றன.

இதில் 1 முதல் 48 ஏடுகள் முதற்காண்டம்; 49-90 வரையிலான ஏடுகள் இரண்டாங்காண்டம். முதற்காண்டத்தில் வைத்தியமும், இரண்டாங் காண்டத்தில் வாத முறைகளும் உள்ளன. எமது சுவடி எண் 288-(b) ன் அகத்தியர் பெருநூல் இரண்டாங் காண்டம் முன்னூறு" என்றதே இதன் முதற் காண்டம்.

வரிசை எண். 807 சுவடி எண். 391

## சுந்தரானந்தர் சூத்திரம்

ஏடுகள் : 11 ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். அளவு : 26×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை 160. ஆசிரியர் : சுந்தரானந்தர். முழுமை : முற்றும்.

## குறிப்பு :

இது, "சுந்தரானந்தர் தண்டகம்" என்ற பெயரால் உள்ள சுவடி எண் 235 C போன்றது. இதில் 33 செய்யுட்கள் இருக்கின்றன.

வரிசை எண். 808 சுவடி எண். 392-(a)

## வைத்திய மலை அகராதி

ஏடுகள் : 66. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது. பக்கத்திற்கு : 5-6 வரிகள். அளவு : 39×2½ செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1700. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றும்.

### தொடக்கம்

அகதி — வேல்
அகத்தி சாறகு — சிற்றருகப்புல்
அகமறம் — வெள்வேல்
அகரு — அகில்
அகல் — வெள்வேல்
அகவு — அமுக்கிரு
அகிமறல் — வெள்வேல்
அகிற் கூட்டு — ஏலம், சந்தனம்
அகுடம் — கடுகு ரோகிணி
அகும்பை — கவிழ் தும்பை.

### முடிவு

வைகுண்டம் — தும்பை
வைசயந்தி — வாதமடக்கி
வைதகி — திப்பிலி
வைத்தியமாதா — ஆடாதோடை

மலையகராதி முற்றிற்று.
சிவமயம்.

### குறிப்பு

வைத்திய நூல்களில் கையாண்ட சொற்களுக்குப் பொருள்கள் இதில் கூறப்பட்டுள்ளன. அச்சான நூல்போல் காணப்படுகிறது.

வரிசை எண். 809 சுவடி எண். 392 (b)

## (வைத்திய மலை அகராதி) சரக்கு வகை

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 5-6. வரிகள். அளவு : 39×2½செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300 ஆசிரியர் : அறியக்கூடரில்லை. முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

| | |
|---|---|
| அஃகரம் | — வெள்ளெருக்கு |
| அக்கம் | — உருத்திராட்சம் |
| அக்கிருகரம் | — செம்பு |
| அக்கினிசேகரம் | — மஞ்சள் |
| அக்கினிமுகம் | — சேங்கொட்டை |

**முடிவு**

| | |
|---|---|
| வீரை | — வாழை |
| வெண்குளறி | — அதிமதுரம் |
| வெல்லி | — சிற்றேலம் |
| வைச்சிரவணுலயம் | — ஆல் |

சிவமயம். முற்றிற்று.

**குறிப்பு :**

இதில் செரக்கு வகை என்று எழுதப்பட்டிருப்பினும் கடைசியில், "இந்த புஷ்த்தகம் மலையகருதி யெனக் கொள்ளப்படும் யென்றவாறு" என்று எழுதப் பட்டது. இதுவும் முன் பிரதி போன்றது. ஆயினும், இதில் சொற்கள் குறைவு.

---

வரிசை எண். 810 சுவடி எண். 393

## யாகோபு 300

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 10-11 வரிகள். அளவு: 28×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 1500. ஆசிரியர் : யாகோபு. முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்**

மயில்தனிலே ஏறுகின்ற முருகன் பாதம்
மகத்தான கணபதியின் பாதம போற்றி
அகிலமெல்லாம் நிறைந்துயிருந்த அம்மை பாதம்
அடுத்துநின்ற பரமசிவன் பாதந் தன்னை
ஒயிலாகத் துதிசெய்து மனத்துள் வைத்து
ஒழுங்காக யெளுநூத்தைச் சுருக்கி யானும்
குயில்போலப் பாடினேன் முன்னூற் தன்னில்
கொட்டினேன் வாதவயித் தியமுந் தானே. க.

முடிவு

யிந்தநூல் முன்னூறில் பண்டி தங்கள்
  யிதமான வாதமொடு புத்தி ம(ா ற்க)ம்
சுந்தரம்போல்ச் சொல்லிவிட்டேன் தோய்ந்து பாற்கச்
  சுத்திரச வாதியைப்போல் யிருக்க ல(ாகு)ம்
யெந்தவிதம் நசலெல்லாம் திற்பா னப்பா
  யேறினே னென் கள்தான் பிணைக்க வேண்டி
முட......... ......சொன்னேன் ரெண்டும் பாத்து
  முதிவாகச் சோதிச்சுச் செய்தி ட(ாயே). 291.

முன்னூறு முற்றிற்று.

குறிப்பு

இதில் சுக்கான் கல் கட்டு, சவுக்காரச்சுன்னம், ஈயம் எடுக்க, எலி கடி, மந்தார காசத்துக்கு மருந்து, சவ்வீர வைப்பு, அயச்சேம்பு, உளி செந்தூரம் முதலியன உள்ளன. 41வது ஏடு இல்லை. 42வது ஏடு பாதியாய் முறிந்துள்ளது. இதன் பின் 13 ஏடுகளில், திப்பிலி லேகியம், பித்தபேதிக்கு கியாழம், கண்வலிக்கு பத்து, நாகவங்க செந்தூரம், வீரபதங்கம் முதலியன காணப் படுகின்றன. 186வது ஏடு முதல் உள்ளது.

வரிசை எண். 811. சுவடி எண். 394.

## அகத்தியர் ஆயுர்வேதம்

ஏடுகள் : 183. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 40×4 செ. மீ. எழுத்து தமிழ். கி. எண்ணிக்கை : 7000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

தொடக்கம்

ஆதியாங் கிணேசன் காப்பு வாயுறு வயித்தி யந்தான்
சோதியை யாகப் பாடத் துலங்குவாய் முன்னே தானும்
நீதிசேர் குருவின் பாதம் நெகிழாம லுள்க்கொண் டேற்றி
யாதியாம் வயித்தியற்கு வாகட நூலி தாமே. (க)

முடிவு

கன்னிச் சாறு தனுழி கறுத்த பகப்ப விருநாழி
யுண்ணு மாஞ்சி மஞ்சட்டி யுதவ முத்தம் நன்னுறி
வன்னக் கடுகு ரோகணியும் மாதற் கோலஞ் சாதிக்காய்
தன்னே கண்டி வெண்ணெயுடன் தான்றி நெல்லி யதாவரிசி. 1301

**குறிப்பு**

*இதில் செற்ப உற்பத்தி விபரம், மரண குறி, சிரசு வியாதி வரும் விபரம், மரண நாடி, பித்த குன்மத்தின் குணம், ஆமைதலை குணம், நீர்பார்ட்டின் குணம், செர்ப்பம் உண்டாக கியாழம், பிரமேகத்தின் குணம், கபாலகுத்தின் குணம், மண்டை வாட்சிக் குணம், நஸியம், மூல முளைகளாந்து போக மருந்து, கபால கரப்பான் குணம், இதுக்கு எண்ணெ சொரி குட்டத்தின் குணம், சன்னிகளுக்கு சிகிச்சை, சன்னிகளுக்குத் தயிலம், 18 குட்டத்தின் குணமும் மருந்தும், நீரிழிவுக் குணம், காகங்களின் குணம், கலியாண கிருதம், இந்திரரணித் தயிலம் சந்தனுரித் தயிலம், கையாந்தகரை எண்ணெ, இளநீர் எண்ணெ முதலியன உள்ளன.*

* * *

வரிசை எண். 812 சுவடி எண். 395

## பதார்த்த சிந்தாமணி

ஏடுகள் : 256. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு: 28×3½செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 6000. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

**விநாயகர் துதி, காப்பு**

ஆதி யுமைக்கருளு மற்புதசிங் தாமணியை
யாதி யுமையருளா லம்புவியுட் - கோதறுநற்
செந்தமிழாற் கூறுதற்குச் செம்பவள வேலமுகன்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு. க.

**முடிவு**

திரவியஆழ் தில்லுணர்ந்தே தின்றனுப விப்பாரி
பரவிய நோய்காணு ராய்ப்பால் - திரவியைதேர்
மெய்யங் களித்திடுவோன் மிக்காயும் பெற்றிரேழ்
வைய்யங் களித்திட வாள்வார். 7.

**குறிப்பு**

*தொடக்கத்தில் கயிலாசம் பிள்ளை புஸ்தகம் என்றுளது. முதலில் இச் சுவடியில் அடங்கியுள்ள தலைப்புக்களின் பட்டியல் உளது. இதில் கடவுள் வணக்கம், பதார்த்த உற்பத்தி, பஞ்சபூத வகையிவை, பதார்த்த ருசிகள் வற்க்கம், உதகப் பிரகரண வற்கம், பால் பிரகரண வர்க்கம், தயிர்ப் பிரகரண வர்க்கம், மோர்ப் பிரகண வற்கம், வெண்ணெய்ப் பிரகரண வற்கம், நெய்ப் பிரகரண வற்கம்,*

*வெண்ணெய் வற்கம், பாகு வற்கம், வெல்ல வற்கம், கீரை வற்கம், கள்ளி, புல், பூ, கிழங்கு, பிஞ்சு, காய், பழம், வித்து, தானியம் முதலானவைகளின் வற்கங்கள் உள்ளன. மேலும் கடைசியில் 62-வது ஏட்டில் நோயணுகாவிதி உள்ளது. இது சுவடி எண் 5,363 முதலான சுவடிகளின் வேறுபட்டது.*

வரிசை எண். 813 சுவடி எண். 396 (a)

## ராமதேவர் வைத்தியம் 81

ஏடுகள் : 22. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 450. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

### குறிப்பு

*இது எமது மகால் சுவடி எண் 125 (b) போன்றது. இதில் உப்பு சுத்தி, அண்ட சுண்ணம், காராசார வேதை, நாககுரு, வீர மெழுகு, தாம்பூர பற்பம் பூரண லேகியம், செப்பு சுத்தி, அஷ்ட்ட சித்துமை, ஐஸ்கோல மெழுகு ஆகியவை உள்ளன.*

வரிசை எண். 814 சுவடி எண். 306 (b)

## ராமதேவர் சிவயோகம் 201

ஏடுகள் : 55 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றும்.

### தொடக்கம்

மூலமெனும் முதல்பொருளா முத்திநடு வணையில்
 மூதண்ட மானதொரு பிறமத்துக் கப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்திபதி மேலே
 ஞுதாந்தப் பெருவெளியின் நடுவொளியின் கீளே
நீலமிகு நெருப்பாறு மயிப்பாலத் தப்பால்
 நிறைந்தபரி பூரணமாய் நிற்களம தாகி
சீலமிகு தவமுடைய நிருதயமே தானும்
 சிறந்துநின்ற பரமகுரு சீர்பாதந் துணையே. க.

### முடிவு

முத்தான சிவயோக மிருநூர் தன்னை
 முரையாக கருக்குருவென் றெடுத்துப் பார்த்தால்

சித்துவிளை யாடுமைந்தா சிவயோக(மல்ல)
  தாக்கமடா தூரந்தான் மெத்த
பித்தாசை கொண்டுமன மவுன மாக
  பதிவாகச் சிவயோக மிருநூ ரும்பார்
வித்தான பிறவியது அத்தும் போகும்
  மேலான சிவயோகம் விளங்கும் முற்றே.

## குறிப்பு

இதில் உகார மகாரதீட்சை, வாலை பூசை, புவனை பூசை, மந்திரம் நிஷ்டைகள், அமுர்த லேகியம், தாளகநீறு, அயக்களங்கு, தீலதமை, சத்திசிவம் முதலான குறிப்புக்கள் உள்ளன.

* * *

வரிசை எண். 815 சுவடி எண் 396(c).

## ராமதேவர் தண்டகம் 110

ஏடுகள் : 29. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

## தொடக்கம்

மூலமுத லாதாரம் விஞ்சைதனை யோதி
  முனையான சுழிமுனையின் மேலாக நின்று
பாலமெனு மயிற்பால தந்தமதில் தாவி
  பத்திகொண்டு நெருப்பாரில் பதிவாகச் சென்று
சீலமுட னப்பதியில் காலை நாட்டி
  சின்மயமாஞ் சற்குருவைச் சிந்தைதனில் நினைத்து
தூலமுடன் சூட்சமமாயி காரணமாயி நின்றதோர்
  திவயத் தயங்கரனை துணையெனக் கொண்டேனே. க.

## முடிவு

போத்தமடா பத்துவகை சூத்திர மொன்றுக
  புத்தியிட கோர்வைதனை பூரணமாயி பாத்தால்
நித்திரையும் வெல்வதற்குக் கருமானந் தோணும்
  நாலான காரியமும் வகையுடனே காணும்
பாதவநீ மகிழாமல் கேவலமா நின்றால்
  பறமான் கயிலாச வாசலது தோணுங்
காத்துநீ கயிலாச வாசலைக் கண்டால்
  கண்ணுனை நடுமனையில் கமலமது முற்றே. 111.

குருவே துணை. ராமதேவர் தண்டகம்.

**காலம்**

பிருமாதிட்சா வருஷம் தை மாதம் 19 தேதி திங்கள் கிளமை தினத்தில் எழுதி முகிந்தது. உல(க)ளுத சாமி துணையாக வேணும்.

**குறிப்பு**

*இதில் அஞ்சனமை, ரசமணி, கமலரசமணி, முப்புவின் விபரம், செந்தும்பை விபரம், தங்க குளிச மை, சிதம்பர சக்கரம், அஷ்ட சித்திக்கும் பூசை, மாதுருதிகுரு, விஷ வசியம் முதலியன உள்ளன.*

வரிசை எண். 816 சுவடி எண். 396 (d)

## ராமதேவர் 50

ஏடுகள் : 9 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : இராமதேவர் முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு :**

*இது எமது சுவடி எண் 228 (f) போன்றது. இதில் ஒரு பாடல் அதிகமாக இருக்கிறது. இதில் உப்பு சுத்தி, முப்புச்சுன்னம், சாதிலிங்கக் கட்டு, நாகக் கட்டு, தாளகச் சுன்னம், கெந்தக மெழுகு, அயச்செம்பு, ரசமணி, முதலானவை உள்ளன.*

வரிசை எண். 817 சுவடி எண். 396 (e)

## ராமதேவர் அட்டாங்கபட்சணி 51

ஏடுகள் : 15. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி.எண்ணிக்கை : 300. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு :**

*இது எமது மகால் சுவடி எண் 328 (e) போன்றது. இதில் அஷ்டகர்ம மூலிகை, திரிகோணம் அஷ்டகர்ம குளிகை, செயநீர் விபரம், துருசு பற்ப மதில் செயநீர் முதலிய குறிப்புக்கள் உள்ளன.*

வரிசை எண். 818 சுவடி எண். 396 (f)

## ராமதேவர் சோஷியம்

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3செ. மீ. எழுத்து : தமிழ். க. எண்ணிக்கை : 65. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியிலே வேதியன்மு னன்பாயி சொன்ன
அருமறையின் பொருளான சோஷி யத்தை
சாதியிலே முதலான ராமரீ வாக்கியம்
தவறுமல் சற்குருவின் பாதம் போத்தி
சோதியிலே செகசோதி சோதியான
சோஷியமாம் நவக்கிரக ருசியப்பா
நீதியிலே நீடுலகில் நன்மை திண்மை
நேர்நிகைகள் சொல்வதற்கு நன்னூல் யாரே. க.

**முடிவு**

அரசனுய்ச் சனிபகந்த்த பந்து நிற்க்க
ஆன செவ்வாயி மேடத்தில் லமாது நிற்க்க.
சாரமான ... ... ... ... ... ... ... ... ... ... ...
நரகங்கால் ரண்டு ஒன்ற ... ... ... யாம்
நடுவான கிரகநிலே ... ... ... ... ... ... ...

ருமதேவர் சோஷியம் பத்து யெழுதி குருசாமி கிருபையாலே
முகிந்துது.

**குறிப்பு**

இதில் நவக்கிரகங்களின் கிரக நிலே சொல்லப்பட்டுள்ளது.

0000000000000

வரிசை எண். 819 சுவடி எண். 396 (g)

## ராம தேவர் பரிபாஷை

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ.மீ. எழுத்து : தமிழ். க. எண்ணிக்கை : 80. ஆசிரியர் : இராம தேவர். முழுமை : முற்றற்றது.

### தொடக்கம்

அன்ன சத்த மூலம் அதுவேபூ சாவிதியாம்
பின்னி யமைத்த வாள்க்கை பேருன கல்ப்பமதாம்
பண்ணிய பாஷை பதினெட் டாயி தந்திவிந்து
சின்மய சிற்பறை தெயிவக் கணபதி யேகாப்பு க.

### முடிவு

காச்சியதோர் முள்உப்பு பலமே போடு
கட்டாகத்தான் முடித்தவெடி யுப்புசெய நீருப்பு
பூச்சியே வீரமொடு பூறம்நாவி
புள்ளிவண்டு உறங்களஞ்சி பொடித்துப் போடு
தாச்சியில்லா ............

### குறிப்பு

இதில் சாரணை தெரிய விவரம், உப்பு தீட்சை முதலான குறிப்புக்கள் உள்ளன.

********

வரிசை எண். 820 சுவடி எண். 397 (a)

## ரோமரிஷி 500

ஏடுகள் : 165. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7–8 வரிகள். அளவு: 23×3செ.மீ. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை: 3000. ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : குறைபாடுடையது.

### தொடக்கம்

மூல முத லாதார முடிவாய் நின்ற
மூற்த்தியெனுங் கிணேசனுட பாதங் காப்பு
சாலமெல்லாங் கடந்து நின்ற தாயின் பாதம்
சனகாதி மூலருட பாதம் போற்றி
காலமெனும் பிறப்பிறப்புங் கடந்து நின்ற
கருத்துகந்த நந்தீசர் பாதங் காப்பு
வாலமுண்ட சண்டருட பாதம் போற்றி
அறுநூற்றை நானுறாக்க வம்பரத்தாள் காப்பே. க

### முடிவு

வீரப்பா றோம னென்று நாட்டி ... ... ... ... ... ... ...
விஞ்சையெல்லாம் சொல்லிவைத்தே னிந்த நூலில்
லாரப்பா வவனியிலே கேள்க்கப் போரார்

அப்பனே புசுண்டருட பாதம் போற்றே. 155
குருசாமி துணையாக வேண்டியது
குருகிடாட்சம்

குறிப்பு

இதில் 1 முதல் 124 ஏடுகளில் 355 பாடல்களும் அதன்பின் 1 முதல் 52 ஏடுகளில் 4 முதல் 155 பாடல்களும் உள்ளன.

இதில் முப்புச் சுண்ணம், நவச்சார மெழுகு, வீர சுண்ணம், லிங்க செந்தூரம், வயிரவ சக்கரம், ரசமணி, கெந்தக மெழுகு, தாளகத் தயிலம், குடோரி, சூடன் வைப்பு, சிந்தில் கற்பங்கள், பூரணதிலேகியம் முதலியவைகளும், 4 முதல் 155 பாடல்களில் வசிய தயிலம், வயிரவ மந்திரம், தம்பன மூலிகை, மறைப்புமை, மோகினி மந்திரம முதலானவை உள்ளன.

* *

வரிசை எண். 821 சுவடி எண். 397 (b)

## ரோமரிஷி பாடல்

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 23×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150 ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : குறைபாடுடையது.

### தொடக்கம்

ஓமூல தந்திமுகவ சரணந் தொழுது
ஆமூல நந்தீசர் சரணந் தொழுது
ஊமூல பராபரை சரசுவதி யெந்தன் வாக்கினில் நின்று
யேமூலத் தாத்திரங் காப்புத் தொழுதிரஞ்சு வோர்க்கே. க.

### முடிவு

புயனெ சுருபான ... ... ... தாசடாசித் ... ... ...
வஞ்ச மாத்திரயாதே ... ... ... குருவை ... ... ... போவாய்
தஞ்சமென வந் ... ... தயவு செய்வார் சூஷ்த்திரந்தான் முத்தே 27

### குறிப்பு :

இதில், கறியுப்புக்கட்டும், அதை கொண்டு வாதஞ் செய்முறை செம்பு சுத்தியும், வாதமுறைகளும், வழலைப் போக்கு முதலானவைகளும் உள்ளன.

* *

வரிசை எண். 822 சுவடி எண். 397 (c)

## அகத்தியர் கௌமதி நூல்

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு: 23×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்**

*சிவகிருபை பாதமது போத்தி ஞானுந்*
*தெரிந்தெடுத்து பதினெண்பேர் மறைத்தல் யாதுந்*
*தவம் பெறவே கௌமதிநூல் பாடல் நூறில்*
*சாத்திரேம் வைத்தியங்கள் யோக ஞானம்.*

**முடிவு**

*பின்னுங் கேளிது கிருபை ..........*

**குறிப்பு**

*இதில், மகோதரம், ரத்தசயம், குறை நோய், குட்டம், கிரந்தீ, அரையாப்பு, தடிப்பு, புத்து தீர, ஆடுதீண்டாப்பாளை, காசத்துக்கு, நேத்திர வியாதிக்கு மருந்துகள் முதலியன உள்ளன.*

வரிசை எண். 823 சுவடி எண். 398.

## தேரையர் வைத்தியம் 500

ஏடுகள்: 150. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு : 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2200. ஆசிரியர் : தேரையர். முழுமை : முற்றற்றது.

**குறிப்பு**

*இது எமது சுவடி எண் 251 (a) போன்றது. இதில் 441 பாடல்கள் இருப்பினும் இடையிடையே பாடல்கள் இல்லை.*

*இதில் துருசு செந்தூரம், வெள்ளிவித்தை, நீர்க்காமாலைக்கு மருந்து மஞ்சள்காமாலைக்கு மருந்து முதலியன உள்ளன.*

வரிசை எண். 824 சுவடி எண். 399

## அகத்தியர் வல்லாதி 600

ஏடுகள்: 34. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். அளவு: 35×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 900. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது

### காலம்

மன்னார்குடி மூர்க்க விநாயகர் ... ... ... ...
சதாசிவ அப்புப்பிள்ளை குமாரன் கண்ணுசாமி பிள்ளையால் எழுதி முடிந்தது. 1878-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் தேதி புரையாத்தில் முன்சீப்பு கோர்ட்டு ... ... த்தில் இருக்கும் போது எழுதி முடிக்கப்பட்டது. அமாவாசை வியாழக்கிழமை தினம்.

### குறிப்பு

இது எமது மகால் சுவடி எண் 288 (c) போன்றது. இதில் 129 முதல் 162 வரையிலான ஏடுகளே உள்ளன. பாடல்கள் 489 முதல் 621 வரையிலான கடைசிப்பகுதி உள்ளது.

வரிசை எண். 825 சுவடி எண். 400

## வைத்தியம் சில்லரைக் கோர்வை

ஏடுகள்: 40. ஏட்டின் நிலைமை: படிப்பதற்கே பயனற்ற நிலை. அளவு: 19 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

### குறிப்பு

பயனற்ற சுவடி மிகவும் ஒடிந்துள்ளது.

வரிசை எண். 826 சுவடி எண். 401

## சருவகோடா குளிகை

ஏடுகள்: 4. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு; 8 வரிகள். அளவு: 19×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை; 70 ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

சகல வியாதிக்கும், சகல பாம்புக்கும், கண்ணுரோகத்துக்கும் சறுவகோடா சுளிகையிரம் பச்சை நாவி, கெந்தகம் அரிதாரம் மனுேசிலை, சாதிலிங்கம், மஞ்சல், மறமஞ்சல், திப்பிலி மூலம், துதம் யிருவேலி, சாதிபத்திரி, வெண்காறம், அக்கிறுகாரம், வாய்விளங்கம் இவை ஒரொண்டு வராகனிடை 2.

**முடிவு**

தலைவலிக்கி நாறத்தங்காய்ச் சாத்தில் நசியம் விடவும். ……… த்துக்கு சங்கம் வேர், புங்கம் வேர். கோசலம் கியாழம் வைத்து கிஷாயத்தில் குடுக்கவும். கண் ………………………

**குறிப்பு**

இதில் கோடாசுளிகை மருந்து செய்முறையும், அதனைக் கொண்டு அனுபானத்தில் நோய்தீர்க்கும் முறைகள் முதலியனவும் சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண். 827 சுவடி எண். 402.

## காலாங்கி வைத்தியம்

ஏடுகள் : 95. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது பட்டுள்ளது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு : 27 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 3000. ஆசிரியர் : காலாங்கிநாதர். முழுமை : குறைபாடுடையது.

**தொடக்கம்**

ஆதியென்ற வாலைகுரு பாதம் போற்றி
அருளருளு மீசனுட பாதம் போற்றி
நீதியென்ற காலாங்கி நாயன் பாதம்
நிலைபெறவே வணங்கிநன்றாய், செப்பக் கேளு
சோதியென்ற நதிமூலம் ரிஷிகள் மூலம்
சொல்லரிதாய் நின்றதொரு சித்தர் மூலம்
(ஓதி)நின்ற கணபதியின் வல்லமையின் மூல
முத்துநின்ற மூலமெல்லா முரைக்கின் றேனே. க.

**முடிவு**

யென்றுமே தண்டபாணி வசிவா வென்று
யென்மனதில் நினைந்துதினஞ் செவித் தாக்கால்
அன்றுமே தெரிசனந்தா னுனக்கு மாகும்

அந்நாற்றி ருபத்தி ரெண்டு யாதே
நின்றுமே யறிவாகப் பன்னிரெண்டு காத்தால்
நிலையறிந்து மென்னூலை யவருக் கிய்வாய்
நன்றுமே யாகுமடா வுனக்கின் னூல்தான்
நல்லஅருநாற் றிருபத்து ரெண்டுமுற்றே. 522.

*கஸ்தூரி ரெங்காச்சாரியார் பாதார விந்தமே முன்னிற்க வேணும். அடியேனை லெட்சித்தருளிய ஸ்ரீ போக வல்லவ நாயகர் காத்த சிறையை கடைதலை காற்கக் கடன் பாத தாமரைக்கேபாம்.*

## குறிப்பு

*இதில் கற்பம், தீட்சை, செகசாலவித்தை, பிண்ட உற்பத்தி, கைலாசம் விட்டுத் தில்லை வந்து சேர்ந்தது. (11) திருக்கூத்தாடியது (18). நந்தி ராட்சசனாய் பிறக்க ஆகாது என்ற கூறுதல் (21) துரியோதனனை 18-ம் நாள் போரில் கிருஷ்ணனுடன் கூட இருந்து சொல்லுதல் (22) முதலான செய்திகள் உள்ளன.*

---

வரிசை எண். 828 சுவடி எண். 403 (a)

## ரோமரிஷி சூத்திரம் 16

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். இ. எண்ணிக்கை : 100 ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றும்.

## குறிப்பு

*இது எமது சுவடி எண் 145 போன்றது. இதில் வழலையுப்பு, முப்புமுடித்தல் முதலான செய்திகள் கூறப்பட்டிருப்பினும், பரிபாஷையாக உளது.*

---

வரிசை எண். 829 சுவடி எண். 403 (b)

## ரோமரிஷி (2-வது) சூத்திரம் 16

ஏடுகள் : 8. ஏட்டின் நிலைமை. மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். இ. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : ரோமரிஷி. முழுமை : முற்றுமுளது.

## காலம்

**ஆனந்தவருஷம் யெழுதினது.**
**வையாசிமாதம் 19 தேதிச்கு படித்து யெழுதியது. சா ... ... ...**

**குறிப்பு**

*இது எமது மகால் சுவடி எண் 258 (c) போன்றது. வாதிகளுக்கேற்ற சுவடி. பிரமவிந்து, அக்கினியுப்பு முதலியன உள்ளன.*

வரிசை எண். 830 சுவடி எண். 403 (c)

## சுந்தரானந்தர் சூத்திரம் 25

ஏடுகள் : 7 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

**காலம்**

ஆனந்த வருஷம் மாசி 21 தேதி சனிவாரம் பௌர்ணமி 8¾ நாழிகைக்கு முற்றுப்பெற்றது.

**குறிப்பு :**

*இதில் கல்லுப்பு, பூமிநாதம், முப்பு முடிக்கும் விதம், கம்பியப்பு, சுண்ணச் செயநீர் முதலியன காணப்படுகின்றன.*

*இதன் பின்னர் 3 ஏடுகளில் விந்து, நாதம், சத்திசிவ உப்பு விபரம் முதலியன உள்ளன.*

வரிசை எண். 831 சுவடி எண். 403 (d)

## சதாசிவம் அருளிச் செய்த வாதசூத்திரம் திறவுகோல் (ஆனந்தக்களிப்பு)

ஏடுகள்: 40 ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு : 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : சதாசிவம். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியாம் பூனீர் வழலை — ஆதி
அந்தமான வெடிகம்பாயும் தேராய்
சோதி யழுத்த னுணுக்கி — அயச்
சுத்தர சம்பறறில் திப்பட னூட்டி

பூதியாம் போகம் நினைக்க — யெந்த
    பொக்கிழமு வெட்டயெண்ணை கழட்ட

### முடிவு

திற்க்கமாய்க் குருவையுங் காற்த்து — சிவ
    சித்தியெனுந் திஷ்ஷை திறமாக விண்டேன்
தார்க்க யென்னாளும் வாசிக் — கருவைக்
    கண்டாலு மெப்போதும் வாழ்ந்திடலாமே. 100
பிவையினால் சிவகெங்கை சுத்தி — யெல்லா
    ............... மிதுனாலே சுத்தி
நவபாஷா ணங்களுஞ் சுத்தி — நவ
    கோடி சாஸ்த் திரங்களின் கருவியு முத்தே 103

*சிவசிவ சங்கர சம்போ — சிவ*
*சாம்ப சதாசிவ சங்கர சம்போ*
*சிவசிவ சங்கர சம்போ முற்றிற்று முற்றும்.*

### காலம்

ஆனந்த வருஷம் பங்குனி மாதம் 19 சனிக்கிழமை திறயோதசி பூரம் னாழிகை 39½ யிந்த சுபதினத்தில் யெழுதி நிறைவேறினது. ஆறுமுகாசாரி யெழுதினது.

### குறிப்பு

*இதில் துருசு சுன்னம், கெந்தீ தயிலம், கருவங்க வெட்டை யழிதல், வெள்வங்கம் நீர்வாங்கல், வெள்ளை பாஷாணக் கட்டு, சூதக்கட்டு, ஏவியுப்பு, மதியுப்பு, நாகக்கிண்ணி, முதலியன உள்ளன.*

வரிசை எண். 832 சுவடி எண். 403 (e)

## திருமூலர் வாத சூத்திரம் 201

ஏடுகள் : 55. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு: 20×3செ.மீ. எழுத்து: தமிழ். வ. எண்ணிக்கை : 700. ஆசிரியர் : திருமூலர். முழுமை : முற்றுமுளது.

### காலம்

ஆனந்த வருஷம், பங்குனி மாதம் 25 வெள்ளிக்கிழமை திரயோதேசி தினத்தில் யெழுதி நிறவேறினது. முற்றிற்று. தொழுவூரு கணக்கு சதாசிவ வெங்கடாசல பிள்ளை யெழுதினது.

குறிப்பு

இது எமது மகால் சுவடி எண் 40 (c) போன்றது. இச்சுவடியின் பெயர் அதில் 'திருமூலர் எண்ணூயிரத்தில் இருநூறு வகாரத்திரயம்' என்றுளது.

இதில் வழலையுப்பு, பிண்டமென்பது சத்தியுப்பு, சுரோணிதத்தின் பெயர், வல்லாரைக் கற்பம் முதலியன உள்ளன.

வரிசை எண். 833 சுவடி எண். 403 (f)

## அவ்வையார் இரத்தினச் சுருக்கம் 18

ஏடுகள்: 10. ஏட்டின் நிலைமை: மிசமிகப்பழுது. பக்கத்திற்கு: 4-8 வரிகள். அளவு: 20×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 120. ஆசிரியர்: ஔவையார். முழுமை: முற்றும்.

தொடக்கம்

ஏகமாகி யிருந்த பரா பரத்தின் ... ...
தேகசிவ சைதன்னிய சிகார ... ...
யோகமாக நினைக்கு மனவயு ... ...
தோகையாள் சொல்லி ரத்தின சுருக்கமே.

முடிவு

ஆதியின் விலாசமிலை யானசெகமி யாவும்
பேதகம தாயறிஞர் பேசுவது முண்டோ
சாதிபலவா வானவுயிர் சேகாமி தென்றே
நீதிமொழி யானபதி னெட்டுமிவை முற்றே.
குரு சகாய முண்டாகவும்

காலம்

இராக்ஷச வருஷம் சித்திரைமாதம்

குறிப்பு

இச்சுவடி, மிகவும் பூச்சியரித்த நிலையிலுள்ளதால் அறிக் கூட வில்லை.

* * * * * * * * * * * *

வரிசை எண். 834 சுவடி எண். 403 (g)

## சுருபானந்தர் 500-ல் கடைசி பாடல்

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 20×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 30. ஆசிரியர் : சுருபானந்தர். முழுமை : முற்றுமுளது.

### தொடக்கம்

வாரிசூழ் சாகரமது ஞாலும்
வளருதீ சம்புவி ... ... ... ... ...
மயமாகிய காரியன சலமேலும் ... ... ...
துரையுதைத்து மேல் சேருடி ... ... ...

### முடிவு

அழுக்கை வெழுத்தான் விதமாறறிவி ரம்புவியில்
பழுக்கும் பளிங்கா மமுரி பாகம்-வழக்கமென
கல்லுப்பே கண்டறியுங் கண்டமதிலு மமுரி
அல்லும் பகலு முன்றவ தாரோ.

### குறிப்பு

இதில் கல்லுப்பு கண்டறியும் விபரம் பாடலாயுள்ளது.

வரிசை எண். 835 சுவடி எண். 403 (h)

## சவுரியானந்தர் குழம்பு அறிதல்

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 20×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : சவுரியானந்தர். முழுமை : முற்றுமுளது.

### தொடக்கம்

சிவனே வல்லவன் ; அவனே நல்லவன்
ஆறுமுக முதலியார் எழுதிக் குடுத்த
சவுரியானந்தர் குழம்பு அறிதல்.
சறுவேஸ்பரனுர் சகலமும் ... ... ... ...
அருமறை மொழியால் யாவரும் ... ... ...
குருபரன் சீஷர்க் குழம்பு ... ... ...
திருவரு ளென்று தெரிசித்த ... ... ...

**முடிவு**

காரி துரிசு கட்டியொரு விழுகனிடை
பூரிதஞ்சு மித்திரத்தைப் பூட்டிவிடு — பூரி
நஞ்சிட்டால் காணும்நஞ் சில்லாவிட்டால் காணுது
பஞ்சமில்லை யிக்குருவைப் பார்.

*வயித்தியர் ஆறுமுக முதலியார் ஆறுமுக ஆசாரிக்கு எழுதிக் கொடுத்த அகவல் முற்றும்.*

**காலம்**

ருட்சதா வருஷம் சித்திரை மீ 29-ம் தேதி வியாழக்கிழமை யிந்த சுப மங்களம் பொருந்தியனுளிர் முத்தும்.

**குறிப்பு**

*இதில் ஷை குழம்பு செய்முறையும், அதற்கு அனுபானமும் தீரும் நோய்களும் உள்ளன.*

---

வரிசை எண். 835 சுவடி எண். 403 (1)

## ரோமரிஷி வைத்திய சூத்திரம் 100

ஏடுகள் : 35 ஏட்டின் நிலைமை ; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு ; 7 வரிகள். அளவு ; 20×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை ; 600. ஆசிரியர் ; ரோமரிஷி. முழுமை ; முற்றுமுளது.

**காலம்**

ருட்சதவருஷம் ஆனிமீ மூஉ புதவாரம் ரோகணி நட்சத்திரத்தில் ரோமரிஷி நாயனுர் அருளிச் செய்த வாதம் வைத்திய சூத்திரம் 100-ம் எழுதி முடிந்தது முத்தித்து.

**குறிப்பு**

*இது எமது சுவடி எண் 272 போன்றது. இதில் சுத்த கங்கையறிதல் :- சூதபற்பம் முதலான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.*

*இதன்பின்புற ஏட்டில் சத்தி சிவப்பு அறிய, சுத்த சிவகங்கை முதலியன உள்ளன.*

வரிசை எண். 837 சுவடி எண். 404

## திருமூலர் வாகட ரத்தினச் சுருக்கம்

ஏடுகள்: 21 ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 23×2½ செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 300 ஆசிரியர்: திருமூலர். முழுமை: முற்றற்றது.

### குறிப்பு

இது திருமூலர் வாகடம் என்ற பெயரால் உள்ள சுவடி எண் 253 (b) போன்றது. தோஷ நாடிகளின் நடைகள், குணங்கள், மேகம் பறக்கும் விதம் முதலியன உள்ளன.

வரிசை எண். 838 சுவடி எண். 405

## செந்தூரங் கட்டுமுறை

ஏடுகள்: 65. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். அளவு: 23×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

செம்பு சுத்தி

சல்லியை நன்ருய் விளக்கிய சல்லி வராகனிடை க. ஒரு குகையில் அடியில் சல்லியைப் போட்டு, அதின்மேல் கிருஷ்ண அப்புற கம. பலம் ½. ரச்சை பேரண்டம் பலம் ¼. ரெண்டையும் வேறே வேறே பொடி செய்து .........

### முடிவு

காந்த ஈடு.

கருவூமத்தை விறைத் தண்ணிஇல் மிதக்குறதாய்ப் பார்த்து வராகனிடை $\frac{8}{1}$. புனுகு வராகனிடை 1. கோரோசனை விராகனிடை 1. வெள்ளைப் பாஷாணம் பணவிடை $\frac{1}{8}$. தேத்தாங்கொட்டை 5. க் கருப்பாய் வருத்துக் கொள்ளுகிறது. காந்தம் விராகனிடை 1. பச்சை ஒந்தி பித்து1. வுப்பு வராகனிடை 2. இந்த சரக்கை எல்லாம் சேர்த்துக் காரும் பசுவின் நெய்யில் அறைத்து டப்பிஇல் வைத்துக் கொண்டு அரிசிப் பிரமாணம் இரண்டு வேளை இட அசைய மாட்டார்கள்.

**காலம்**

ஜெகன்னாத சுப்பதார் மகன் குப்புசாமி பிள்ளை.

விஷு வருஷம் பங்குனி மீ 25உ மகமாயி அம்மாள் துணையாக வந்த சம்பத்து.

**குறிப்பு**

இதில் செம்பு சுத்தி, மெழுகு செயநீர், வெள்வங்க சுண்ணம், நாகக்கட்டு, அயவுருக்கு விபரம், கருவங்க வெட்டை, ரசவெள்ளி, பஞ்சசூத சுண்ணம், பீனிசத்துக்கு எண்ணெய், முதலியனவும், வாதம், வைத்தியம், வசியம் இதற்கான மருந்துகளும் காணப்படுகின்றன.

---

வரிசை எண். 839 சுவடி எண். 406 (a)

## சட்டை முனியார் நிகண்டு முதலிய வைத்திய அட்டவணை

ஏடுகள் : 5 ஏட்டின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 31×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : சட்டைமுனி முதலியோர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

சோதியெனுந் துரிய வெளி குருவே அய்யா,
சொற்பெரிய கயிலாச மயமே ஞானத்
தாதியெனு ஞானத்துக் கேறு மாறகந்
தானல்லே வென்றுனாத்தா லார்தான் காண்பார்.

**குறிப்பு**

முதல் ஏட்டில் 'சட்டை முனியார் நிகண்டிற் செஷ்ச சூத்திரம் அன்பத்தி மூணு' என்றுளது. இதனைச் சேர்ந்த ஏடுகள் மற்ற மூன்று. ஒரு ஏடு வேறு.

---

வரிசை எண். 840 சுவடி எண். 406 (b)

## பிரம்மமுனி 385

ஏடுகள் : 75 ஏட்டின் நிலைமை : மிகப் பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 31×3 செ. மீ. எழுத்து : தமிழ் கி. எண்ணிக்கை : 1500. ஆசிரியர் : பிரம்ம முனியார் முழுமை : குறைபாடுடையது.

**குறிப்பு**

*இதில் 6வது செய்யுள் முதல் 385 வரை இருப்பினும் இடையிடையே ஏடுகள் இல்லை. பக்க எண் இல்லை.*

*இது எமது மகால் சுவடி எண், 36(a), 162(a), 317(f), 322(c) போன்றது.*

---

வரிசை எண். 841 சுவடி எண். 407

## அகத்தியர் ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 50. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 34×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**காலம்**

1848-ம் வருஷம் ஜுன் மீ 6 தீ எழுதப்பட்டது. அமுருதம் பிள்ளை எழுதி திஷ்ட்டின பிள்ளைக்கு கொடுத்தது. குரு வாழ்க குருவே துணை அகஸ்தியற் ரெத்தினச் சுருக்கம் ஞடி பாட்டு. (இது நாடி சாத்திரமாகிய முதற் பகுதி முடிவில் உள்ளது).

**குறிப்பு**

*இது எமது மகால் 249, 296 (j) போன்றது. நாடிசாத்திரத்தில் தொடக்கம் 5 பாடல்கள் இல்லை. பிற்பகுதியில் 228 பாடல்கள் உள்ளன.*

---

வரிசை எண். 842 சுவடி எண். 408

## வைத்திய அட்டவணை

ஏடுகள் : 40. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 18 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர் : பலர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

**துவரெண்ணை பாகம் புண்களாற**

**தேன் துடம் 1. நல்லெண்ணை துடம் — — புங்கம் வேற்சாற் துடம் 2, மூன்றும் ஒன்ருக்கி அதை காச்சி**

முடிவு

முடங்கின வாதத்துக்கு தயிலம்

தேங்காயெண்ணை ஆளாக்கு, பசுவின் நெய் ஆளாக்கு, சதிரகள்ளி பாலாளாக்கு, குரத்திரக்கம் பலம் 2, கஸ்தூரி மஞ்சள் பலம் 2, இது வெல்லாம் கூடக்கச்சி நோயுள்ள யிடங்களில் பூசவும் முடங்கின வாதந் தீரும்.

குறிப்பு

*இதில் அரையாப்புக்கு மருந்து, கண்வலிக்கு மருந்து, சகல வாயுவுக்கு கள்ளி சூரணம், லோகம், தாம்பூரம், பினிசத்துக்குத் தீரி வாத சுரக்கியாழம் கணத்துக்கு வெண்ணை, ரச மெழுகு, கண்ணில் படலம், சதைக்கு மருந்து முடங்கின வாதத்து தயிலம் முதலியன உள்ளன.*

வரிசை எண். 843 சுவடி எண். 409

## அகத்தியர் வைத்தியம் 630 (முற்பகுதி)

ஏடுகள் : 70. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு, 5-6 வரிகள். அளவு 32×3 செ.மீ. எழுத்து : தமிழ் : கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

குறிப்பு

*இது எமது மகால் சுவடி எண் 4 'அகத்தியர் அறுநூறு' போன்றது. இதில் 1-107 ஏடுகள் உள்ளன. செய்யுட்கள் 1-332 வரை உள்ளன. இதன் தொடர்ச்சி, அடுத்த சுவடியில் உள்ளது.*

வரிசை எண். 844 சுவடி எண். 410

## அகத்தியர் வைத்தியம் 630 (பிற்பகுதி)

ஏடுகள் : 99. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது : பக்கத்திற்கு : 5-6 வரிகள். அளவு: 23×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

காலம்

**இசபர வருஷம் சித்திரை மாதம் 29 தேதி.**
**அகஸ்தியர் வயித்தியம் 630 முடிந்தது.**

## குறிப்பு

முன் சுவடியின் தொடர்ச்சி இது. இது எமது மகால் சுவடி எண் 4 'அகத்தியர் அறுநூறு' போன்றது. இதன் ஏடுகள் 108 முதல் 193 வரையிலும், பின்னர் 1-13 வரையிலும் உள்ளன. செய்யுட்கள் 333 முதல் தொடங்கி 630 வரை உள்ளன.

---

வரிசை எண். 845 சுவடி எண். 411 (a)

# அகத்தியர் வைத்தியம்

ஏடுகள் : 125. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 7-10 வரிகள். அளவு: 29×3செ.மி. எழுத்து: தமிழ். கி.எண்ணிக்கை 4500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : குறைபாடுடையது.

## தொடக்கம்

வெடிமதி கூர்மை சார விதமன பேதி நீலி
படிகி ... ா ... பலபொரி காரமி
தொடது திறி உபயமேக அய்யரைக்கால
தொர்கால பதவரை காலமு வெகமன
பொடிபடுவதாக அ ... கடமரையதாக மதில்

## முடிவு

பாதிடுமா செய கெந்தக சுத்தி கேள்
தாத்தமீரெணம் பலம் நற்கரிசாலே
யெழுத்தாணிப் பூடு வெண்ஞெச்சிரியே
வரைத்துமேல் வண்டுகட்டி மருந்திட்டுச்
சட்டியார் மூடி ...............

## குறிப்பு

இதில் ரசகுளிகை, கொம்மட்டிக்காய் மெழுகு, பஞ்சலவண காளகண்ட ரசம், சித்திரவல்லாதி, அரிதாரக்கட்டுகள், பஞ்சலவண மெழுகு, அரிதார தயிலம், கெந்தி தயிலம், ரசகுளிகை வகை, கருங்கோளி சூரணம், துருசு சுன்னம், அப்பிரேக செந்தூரம், தங்கச் செந்தூரம், பூரணாதி லேகியம், குழந்தைகளுக்கு சுடர் தயிலம், விஷங்களுக்கு குளம்பு, ஏலாதி மாத்திரை, ரசபற்பம், குண்டலாதி லேகியம் முதலியன உள்ளன. ஏடுகள் தொடர்ச்சியின்றியும், வெவ்வேறு ஏடுகள் கலந்தும் உள்ளன. இதன்பின் ஒரு ஏடு அட்டவணை என்ற தலைப்புடன் காணப்படுகிறது.

வரிசை எண். 846 சுவடி எண். 411 (b)

## அகத்தியர் பல திரட்டு வாகடம்

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு: 29×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 200. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

சீந்திலுக்கு மேகம்போம் சிலேட்டுமம் போம்
—— ரறியில் மாந்த கணத்துக்கு மாவிலங்கை
வெங்கெளே வன த்து நி... ...ளை வெறு குல்பமதுக்சா மென்று

**முடிவு**

சுன்னமுடன் சலம்——றுதினம் நீறை நீற்ற
வன்னமென்ற சவுக்காரம் யிலும்பு போல
மைந்தனெக்குங் காரநீரில்த் தொயித்.........னமென்ற
ரவியில் வைத்துப் பஷ்சந் தானும் சடுவழலே அஞ்சு சுன்னக்
குகையில் வையே.

**குறிப்பு**

இதில், நஞ்சுக்கு முரிவு, ரசகுளிகை, மேகவெங்குருக்கு மருந்து, சிவரசப் பற்பம், சிந்தாதீயெண்ணை முதலியன உள்ளன,

வரிசை எண். 847 சுவடி எண். 412

## வைத்திய அட்டவணை ராமதேவர் வைத்தியம் 10

ஏடுகள்: 95 ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 28×3 செ மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: குறைபாடுடையது & முற்றும்.

**தொடக்கம்**

வெள்ளி கிளிட்

சீனக்காரம் வராகனிடை 2. கறியுப்பு வராகனிடை 2, வளையலுப்பு வராகனிடை 2. இந்துப்பு வராகனிடை 2. வெள்ளி அறைப்பொடி வராகனிடை 2. பழச்சாறு விட்டு 4 சாமம் அரைக்கிறது. வில்லை தட்டிக் காயவைத்து யெரிமுட்டை 2 பொடம் போடுகிறது.

முடிவு

அத்தரை கொஞ்ச கொஞ்சமாயி விட்டு அரைத்து, அத்தற் ஆனவுடனே யெடுத்து டப்பாவில் வைத்துக் கொள்கிறது. யெந்த கீர்த்தியுள்ள மகாராசா பூசி கொள்ளுகிறதோ, யிது சி அயினீ செவாளு-மகாரசா முறை.

காலம்

குரோதன வருஷம் ஆவணி மாதம் 25 தேதி ஆதிவாரநாள் காளாஷரி அவலதார் அய்யா செவடி முகந்தது. முடித்தும் பரிபூறுணமா. காலாஷரி அய்யா அவல்தார் மகன் யெனக் குடுத்த செவடி. அதையி வாங்கி, கோட்டைககுள் நாணயக்கார செட்டித் தெருவில், நெட்டி வேலை செய்யும் அப்பாசாமி பிள்ளை மகன் பழனிய பிள்ளை வாங்கியெழு துனது. யென்னமோ யெண்டு மயங்காதே.

குறிப்பு

இதில் வெள்ளி கில்ட் செய்யும் முறை ஆவாரம்பூ லேகியம் செகப்பு வரித்தி கல்லுக்கு சேக்கிறது முதலியன 98-ம் ஏடுவரை உள்ளன. 99-ம் ஏடு முதல 102-ம் ஏடுவரை ''ராமதேவர் வைத்தியம் 10'' உள்ளது. அதைத் தொடர்ந்து வெடியுப்புச் செயநீர், லிங்கக்கட்டு, பெருங்காயவைப்பு, தலைவலிக்கு ஒத்தடம், ரசபற்பம், உள்மாந்தைக்கு மருந்து, பவளவைப்பு செய்ற பாகம், அரகசா பண்ணும் முறைகள் முதலியன உள்ளன.

வரிசை எண். 848 சுவடி எண். 413 (a)

## அகத்தியர் கன்ம சூத்திரம் 300

ஏடுகள் : 85 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். அளவு $26 \times 2\frac{1}{2}$ செ.மீ. எழுத்து: தமிழ். ஓ. எண்ணிக்கை: 1500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

காலம்

யீஷ்வரு வருஷம் சித்திரை மீ 22 வ குருவாறனுள். அகஸ்தியற் தற்ம சூஷ்த்திரம் யெழுதி முடிந்தது முற்றும். ருமசந்திரருவு சிந்தே யெழுதி குடுத்தான்.

குறிப்பு

இது எமது மகால் சுவடி எண் 8 போன்றது. பாடபேதங்கள் மிகுதியாக உள்ளன.

வரிசை எண். 849 சுவடி எண். 413 (b)

## அகத்தியர் கர்ம காண்டம் 500

ஏடுகள் 85. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 26×2½ செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**குறிப்பு**

*இது எமது மகால் சுவடி எண் 9 போன்றது. 268 பாடல்களே இருப்பினும் ஏடுகள் ஒடிந்தும் முறிந்தும் உள்ளன.*

வரிசை எண் : 850 சுவடி எண். 414 (a)

## அகத்தியர் ரத்தினச் சுருக்கம் 360

ஏடுகள் : 85. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. (பயனற்றது) பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை முற்றுமுளது.

**காலம்**

பிங்கள வருஷம் கார்த்திகை மீ 18 – ரெத்தினச் சுருக்க சாஷ்த்திரம் யெழுதி முடிந்தது. ரூமுடு கையெழுத்து

குருவே துணை.

**குறிப்பு**

*இது எமது மகால் சுவடி எண் 249 போன்றது. அச்சிடப்பட்டுள்ளது. இச் சுவடி ஒப்புமைக்குப் பயன்படும்.*

வரிசை எண் : 851 சுவடி எண் : 414 (b)

## அகத்தியர் வைத்தியம் 205

ஏடுகள் : 55. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். முழுமை : முற்றுமுளது.

**காலம்**

தெட்சணாமூர்த்தி சகாயம். சித்தார்த்தி வருஷம் ஆனி மீ 20 உ குருவாரஜெட்டி பொஷ்த்தகம் யெழுதி முடிந்தது முற்றும்.

**குறிப்பு :**

*இது எமது மகால் சுவடி எண் 124 (d), 249 (h), 311 (e), 317 (k), 323 (a) போன்றது.*

வரிசை எண். 852 சுவடி எண். 414 (c)

## நவலோக மாரணச் சுருக்கம்-16

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 150. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம்**

கேளப்பா நவலோக மார ணந்தான்
கெடியான் வயித்தியமா மிருநூத் தஞ்சும்
தேளப்பா கொட்டுதல்போ லிந்தச் சூஸ்த்திரம்
திரஞ்சொல்வேன் யிரும்புக்குத் தாரம் தெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத்துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளை சீனம்
சூளப்பா செம்புக்கு கெந்தி வங்கம்
சூதமொடு துருசு வெள்ளை சாரம் (மெ)ன்றே. க.

**முடிவு**

காச்சடா யிலுப்பவலத் தயிலத் துக்கு
கரிமஞ்சள் கஷ்தூரி மஞ்சள் ரெண்டும்
மாச்சப்பா வகைக்கிப்பல வீதங் கூட்டி
மறவாமல்த் தயிலத்தை வையுமப்பா
பூச்சடா தயில முதல் பற்பத்துக்கும்
புரிவாக உள்தருவும் னூலில்ச் சொன்னேன்
ஆச்சுடா யிருநூத்தஞ் சுக்குச் சூஷ்திரம்
ஆகுமப்பா பதினரு மதீத முற்றே. 16

**குறிப்பு**

*இது முன் சொன்ன அகத்தியர் 205 க்குச் சுருக்கம் எனத் தெரிகின்றது. இதில் லோக மாரண முறைகள் பேசப்படுகின்றன.*

வரிசை எண். 853 சுவடி எண். 414 (d)

## அகத்தியர் வைத்தியம் 150

ஏடுகள் 23. ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு :**

இது எமது சுவடி எண் 269 (b), 324 (b) போன்றது.

வரிசை எண். 854 சுவடி எண். 414 (e)

## அகத்தியர் பின்னூல் 80

ஏடுகள்: 19. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**காலம்**

பிங்கள வருஷம் அற்பிசி மீ 16 உ ஞயத்துக்கிழமை அகஷ்த்தியர் பின்னூல் யெண்பது யெழுதி முடிந்தது முற்றும்.

**குறிப்பு**

இது எமது மகால் சுவடி எண் 262 (b) போன்றது. இதில் 83 செய்யுட்கள் இருக்கின்றன.

வரிசை எண். 855 சுவடி எண். 414 (f)

## அகத்தியர் வயித்திய பரிபூரணம் 400

ஏடுகள்: 85. ஏட்டின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 7 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2500 : ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**காலம்**

பிங்கள வருஷம் பங்குனி மீ 10 உ வெள்ளிக்கிழமை பகல் நாழிகை இருபத்தஞ்சி துவாதேசி திதி மக நட்சத்திரம். இந்த சுபதினத்தில்

வயித்திய பரிபூரணம் ரூமாஜெட்டி கையால் யெழுதி னிரவேரினது.

முற்றும். பரமகுரு தேசிகன் துணை

குறிப்பு

இது எமது மசுரால் எண் 375 (b), 383 போன்றது இதில் முழுதும் இருக்கிறது.

வரிசை எண். 856 சுவடி எண். 415 (a)

## திருவள்ளுவர் ஞானவெட்டி 1500 - க்குச் சூத்திரம் நவரத்தின சிந்தாமணி 800

ஏடுகள் : 114. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு 7-8 வரிகள். அளவு : 39×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 4500. ஆசிரியர் : திருவள்ளுவர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்

பாயிரம் வெண்பா.

சுழியின் முனையிடை பின்துரியா தீத்தில்
பொழியு மதிரவியைப் போற்றி வாழ — சுழியின்முனை
அகர மதிலிலகு மன்பத்தெர ரஷரத்தில்
புகழுமூலக் கணபதியைப் போற்றுதவாம். 1

முடிவு

இன்னூல் சாத்திரம் வைத்து யிருந்தவ
ரெண்ணூர் வாழியியல் பறிந்தோரீ கள்தான்
சொன்ன வாதஞ் சுருக்கம் வயித்தியஞ்
சுக்கம வயித்தியஞ் சொல்லொண் ணாதுமே
யின்னூல் சூததிர மொழி பண்ணு மாமறை
மூவஞ்சு நூறினில் பாடி னேமிது சொச்ச மிருந்தால்
அன்னை யமபிகை யாண்டே யருள்ப்பதம்
நன்னூ லெண்ணூர் நவரத்தின முற்றுமே. 876

திருச்சிற்றம்பலம்

காலம்

பிரமோதூத வருஷம் மார்கழி மீ 10 உ ஏகலிங்க வாத்தியார் வாசிக்கும் ஞானவெட்டி 1500 க்கு சூத்தியம் வயித்தியம் நவரத்தின சிந்தாமணி 800 எழுதி முடிந்தது.

குருமுனி துணையுண்டாகவும். தேவிசகாயம்.

## குறிப்பு

இதில் பூனீர்போறிய, நாது நாடியறிய, ராமபாணக்குளம்பு, வான்குமரி கிருதம், சாதிலிங்கபற்பம், கெந்தக பற்பத்தனுபானம், செயரசம் துருசுச் சுன்னம், ரசகுளிகை, லிங்கக் கட்டு, காந்த செந்தூரம், மகாமேக லேகியம் ஆனந்த பயிரவி மாத்திரை முதலியன உள்ளன.

1. வெண்பா சரியில்லை.

வரிசை எண். 857 சுவடி எண். 415 (b)

## எல்லசிங்கன் செட்டியார் பாடல் கல்பம் 50

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை : நல்ல நிலை. பக்கத்திற்கு 7: வரிகள். அளவு : 39×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : எல்லசிங்கன் செட்டியார். முழுமை : முற்றற்றது.

### தொடக்கம்

ஆடியதோர் நடனதிரு மூலதி தாலே
    ஆட்டான சிதம்பரத்தின் ஆட்டமெல்லாம்
கூடியதோர் பெரியோர்கள் பதினெண் பேரை
    குலாவியே தெண்டநிட்டு பாதம் போத்தி
நீடியதோர் திருவள்ளுவர் பாதங் காத்து
    நினைத்தபடி பாடுகிறேன் முத்தித் தானும்
தேடியதோர் தேட்டெல்லாம் மிதனுக் குள்ளே
    திறமான அன்பத்தோர் அஷ்சரங் காப்பே. க.

### முடிவு

பூசுவது பூரணமே வுண்ட சாரம்
    பூமிதன்னி லிருக்குமட்டும் துவளை போடு
வீசுவது புளியோடே நீறுஞ் சேர்த்து
    விரவியொன்றுய் துவளையிட்டு உருட்டிப் போடு
பூசுவது வாசமென்று யெண்ணி ஞக்கால்
    முழுமோச மாகிவிடும் ஞத்த மேஜு
ஏசுவது புவியுள்ளே மெத்த வுண்டு
    யிறங்கி விடும் ..............................

## குறிப்பு

இதில் வாலை பூசையும், கல்பம் உண்ணும் முறையும், அதனுல் உடலில் ஏற்படும் மாற்றமும், பிறவும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 858 சுவடி எண். 416

## அனுபவ வைத்தியம்

ஏடுகள் ; 340. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 4-5 வரிகள். அளவு : 39×3 செ. மீ. எழுத்து : தமிழ். இ. எண்ணிக்கை : 3. ஆசிரியர் : பலர். முழுமை ; முற்றற்றது.

**தொடக்கம்**

க. ஏடு. அக்கினி மாந்தத்துக்கு இலேகியம்
உ. அக்கினி மாந்தத்துக்குச் சூரணம்
ங. அக்கினி மாந்தத்துக்கு தாளிச இலேகியம்
ச. அக்கினி வாதத்துக்கு உள்ளுக்கு எண்ணை.

அக்கினி மாந்தத்துக்கு இலேகியம் தாளிச பத்திரி, திரிகடுகு, திரிபலை, மல்லி, சீரகம், ஓமம், குரோசாணி, பற்படாகம், அரத்தை, அக்கிராக்காரம் மதுரம் கொட்டம், சிறுதெக்கு. செவ்வியம், சித்திர மூலம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு பலம் ¼ இவை சூரணித்து நாட்டுச் சர்க்கரை பலம் 12.

**முடிவு**

வெள்ளெழுத்துக்கு மருந்து :
காதுக்குறும்பி வாங்கி தெனிற் குழைத்துக்
கண்ணிலிட மாறும் கை கண்டது.

**குறிப்பு**

இதில் 1 முதல் 17 ஏடுகளில் மருந்துகளின் அட்டவணைக் குறிப்புக்கள் உள்ளன. இதில் லேகியம் சூணம், எண்ணெய் முதலான வகைகள் உள்ளன. எளிமையான வைத்தியம் கூறப்பட்டுள்ளது. இது பதிப்பானுல் பயன் தரும்.

வரிசை எண். 859 சுவடி எண். 417(a)

## அகத்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் செகசாலம்

ஏடுகள்: 45. ஏட்டின் நிலைமை: நல்லநிலை. பக்கததிற்கு: 8-9 வரிகள். அளவு: 34×3 செ.மீ. எழுத்து: தமிழ். இ. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

காரணமே மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற டஞ்சகத்தர கணங்கள் காப்பு.

**முடிவு**

நவகோடி சித்தர்களும் அறிய மாட்டார்
நாதவிந்து விள்ளவெளி திறந்து சொன்னேன்
அவயோகிக் கீயாதே வெளியில் போட்டு
அலையாதே வயித்திய காண்ட முற்றே 298.

ரெண்டு பாட்டு குறை. முகிந்தது முற்றும். குருபாதம் துணை
காதுமியா சாயபு. பாப்புபொய்தீன்கான்.

**குறிப்பு :**

இதன் முதல் ஏட்டின் தொடக்கத்தில் அகத்தியர் சககாலம்,யிந்திரகாலம், மகேந்திரகாலம், வயித்தியம் வாத விந்திரசாலம் ......... ந்திரீதம், ஆயிரத்தி ரனூரும், வயித்திய முதற்காண்டம் என்றுளது. இதில் வாத, பித்த, சிலேத்தும தோஷங்களால் ஏற்படும் வியாதிகள் பற்றியும், சன்னி, மேகம், பாண்டுவாதம், கியாணி, மகோதரம், துலைபிளவை தீர மருந்துகளும் குளிகைகளும் கூறப்பட் டுள்ளன.மற்றும் பல மருந்துகளும்,பெருநோவுக்கு மருந்தும் கூறப்பட்டுள்ளன.

**வரிசை எண்.** 860. **சுவடி எண்** 417 (b)

## அகத்தியர் காலத் திரட்டு - இரண்டாங்காண்டம் வாதத்துரை

ஏடுகள்: 45 ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு : 34×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**தொடக்கம்**

கானமுத்தி வயித்தியகாண் டத்தி லுள்ள
சகலமருந் தானதெல்லாந் தகுதி யாக
வானமுத்தி பெத்தபெரி யோர்க்கா மப்பா
மகத்தான வாதவித்தை யினிமேல்ச் சொல்வோம்.

**முடிவு**

போவானே யிருதயத்தில் பத்தி முத்திப்
 பூவானே புகமாட்டான் பொன்னு மென்னூல்
பாலான முன்னூறு ரெண்டாங் காண்டம்
 பதனமடா ரசவாத மாநந்த முற்றே. 597

இந்திரசாலத்திரட்டில் வாததுரை ரெண்டாங்காண்டம் முன்னூறு முற்றும். அகத்தீசர் மகாமுனி லெட்சிக்கவேண்டியது. குரு கிடாச்ச முன்னிற்க வேண்டியது.

**காலம்**

1860-ம் வருஷம் ஜெனவரி மீ 20 தேதிக்குச் சரியான காலயுத்தி வருஷம தை மீ 8ம்-தேதி வெள்ளிக்கிளமை உயரு (25) நாளிகைக்குள் யெழுதினே. மொய்தீன் கான் ஷடி பரபாப்புயேடு.

**குறிப்பு**

இதில் வெண்கொளஞ்சி, சிறு கிண்ணி, தில்லை, பொன்னுங்காணி, பேய்த் துமைபை, சோதிவிருட்சம், யெவ்வணமுலி, செந்தகரை, கருந்துளஸி, ஆடையொட்டி, இவைகளின் வடிவம், இருக்குமிடம் கூறி, அதைக்கொண்டுவாதம் செய்முறை போக்கு முதலியன உள்ளன.

வரிசை எண். 861 சுவடி எண். 417 (c)

## அகத்தியர் சாலத்திரட்டு-மூன்றுங்காண்டம் இந்திரசாலவித்தை

ஏடுகள்: 49. ஏட்டின் நிலைமை: சிறிது பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 34×3 செ. மீ. எழுத்து. தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மானொருகை மருவொருகை தரித்த நாதன்
 வாதமது வளியுரைத்தா ராதி யந்தம்
நானொருகை யிந்திரமாஞ் சால விற்றை
 நவிலுகிறே தந்திகுரு நாதாக்கள் நாதாக்கள் காண

**முடிவு**

வாதடா வந்தாக்கால் மூன்றுங் காண்டம்
 வடையான மாறாணந்செய் சிணத்தில் சாவான்

பாதகமே செய்யாதே ஆயிரத் திரனூறு
பாடினதின் வெவ்வேறே காண்ட முற்றே, 897

குருவே துணை செய்ய வேண்டியது. பாப்பு

**குறிப்பு**

இதில் மையிக்குரு, அஞ்சனப்பொடி, களவு பிடிக்க கண்கட்டு இந்திரசால வித்தை, குளிமீண்டான் மை, தெய்வ உச்சாடிணம், கூடுவிட்டுக்கூடுபாய, யீசுர மூலவித்தை, வெள்ளெருக்கு வித்தை, நிலவாகை மை, வாடைத்தூள் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 862 சுவடி எண். 417 (d)

## அகத்தியர் சாலத்திரட்டு நாலாங் காண்டம் மாந்திரீகத்துறை

ஏடுகள் : 48. ஏட்டின் நிலைமை : சிறிது பழுது. பக்கத்திற்கு 8-9 வரிகள். அளவு : 34×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**தொடக்கம்**

வெருதுரை யரியாத சித்தர்க் கெல்லாம்
மெய்யான யிந்திரமாஞ் சால மாட
கூறுகிறேன் மாந்தரீக வரலா றெல்லாம்
குமரகுரு பறகுமற முருகற்சரணம் போற்றி

**முடிவு**

முத்திபெருந் தவயோகி யானு லந்த
மொளிதப்பா துலகினிலே நடந்தா யானுல்
சற்றியருள் சகலசித்துக் கைக்குள் ளாகும்
சத்தியந்தா னிந்தனூல்க் காண்ட முற்றே. 1200

அகஷ்த்தீசற் மகாமுனி யருளிச் செய்த வயித்திய காண்டம் 300, வாதகாண்டம் 300, சாலகாண்டம் 300, மாந்திரக்காண்டம் 300 ஆக வகை 4க்கு, காண்டம் 4 க்கு பாட்டுதுகை 1200 - ம் சறி

**காலம்**

சித்திருவுத்தி வருஷம் மாரிகளி மீ 10 உ யெழுதி முடிந்தது முற்றும் மொய்தீன்கான் பாப்பு யேடு.

### குறிப்பு

*இதில் மூதேவி மாரணம், வக்கணாதி வித்தை, கரும்பூனைக்கல், கண்கட்டு மந்திரம், மிருகங் கண்கட்ட, நாவடக்கல், சத்துரு நாவடக்கம், சேனை மாறணம், அய்ங்கோண சக்கரம், அனுமாற் மந்திரம், நவக்கிரக விஞ்சை, குட்டிசாத்திப் பிடிக்க தந்திரம், பிரமதேவர் பூசாவிதிக்கிரிகை, பத்திரகாளியம்பாள் மந்திரம் முதலியன உள்ளன.*

---

வரிசை எண். 863 சுவடி எண். 418 (a)

## அகத்தியார் வாத சூத்திரம் 100.

ஏடுகள்: 16. ஏட்டின் நிலைமை: சிறிது பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். அளவு: 28 × 3½ செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

### காலம்

1863-ம் வருஷம் டிசம்பர் மீ 19. அகஸ்தியர் சூத்திரம் நூறு எழுதி முற்றுப் பெற்றது. பு. ஆ. அப்பாசாமி பிள்ளை.

### குறிப்பு

*இது எமது மகால் எண் 258 (a) 264(a) போன்றது. அவைகள் அகத்தியர் சூத்திரம் 100 என்ற தலைப்பில் உள்ளன.*

---

வரிசை எண். 864 சுவடி எண். 418 (b)

## அகத்தியர் வாத காவியம் – 3 காண்டங்கள்

ஏடுகள் : 68. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 28×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 3000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை : முற்றும்.

### தொடக்கம்

ஆதியெனும் பராபரமே சின்மயமே போத்தி
அண்டரண்டம் நிறைந்தநிற் குணமே போத்தி
சோதியெனு மாய்நிறைந்த சுடரொளியே போத்தி
சூட்சசடா தாரபீடத் துருவே போத்தி

வேதியெனுஞ் சுழிமுனையின் பொருளே பேத்தி
வேதாந்த மாயிரத்தின் விழிநால் போத்தி
நீதியெனு மாதிசற் வாணி யப்பாள்
நிறைஞ்சனமாய் நின்றகணை பதியே போத்தி.

**முடிவு**

தானாதி புவனமெல்லாஞ் சோதி யாகி
சராசரங்க ளண்டமெல்லாங் கோண மாகி
ஞானாதி அகமாகி அண்ட மாகி
நவசரா சரங்களெல்லாம் பிண்ட மாகி
மானாதி தீபமொளிக் கப்பால் நின்ற
மகத்தான கேசரியின் குருவைக் காணே
தேனாதி காவியத்தின் காண்ட மூன்று
தெளிந்தவுரை நூற்றியெட்டு திருவா முத்தே 416

காவியம் மூன்றுங் காண்டம் முற்றுப் பெற்றது.

**காலம்**

1864 வருஷம் அக்டோபர் மீ 23உ, பு. அப்பாசாமி பிள்ளை.

**குறிப்பு**

இதில் 3 காண்டங்களும் முழுமையாக உள்ளன. ஏட்டின் முகப்பில் 'அனாதிமஸ்து', இரண்டாங் காண்ட முடிவில் தேவதாய் சகாய முண்டாகவும். என்றும், மூன்றுங் காண்டத் தொடக்கத்தில் அனாதிரமஸ்து என்றும் எழுதப் பட்டுள்ளது.

இதில் மத்திரநிலை, சிவயோகம், சிவன் சொன்ன அப்பியாசம், பஞ்சாட்சர அஞ்சு வித்தை, அக்கினிஸ்தம்பம், முதலியனவும், 2-ம் காண்டத்தில் பருவ உற்பத்தி, பஞ்சபூதக் கூறறியவும், வாயுக்களின் கூறு வாதபித்த சிலேட்டு மத்தின் குணம், காமம் முதலானவற்றின் குணம், முதலியனவும், 3-ம் காண்டத்தில் சந்திரயோகம் பிடகலை, சூரியகலை, பஞ்ச அண்டம், சுப்பிரமணியர் தியானம், திரிபுரை எண்கோணம் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 865 சுவடி எண் 418 (C)

## தேரையார் வைத்தியம் 1000

ஏடுகள் : 16. ஏட்டின் நிலைமை : சற்றே பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 28×3 செ. மீ. எழுத்து : தமிழ் கிரந்தங் களில் எண்ணிக்கை : 600 ஆசிரியர் : தேரையர். முழுமை : முற்றற்றது.

குறிப்பு

தொடக்கத்தில் 'அடைக்கலத்தாயார் துணை' என்றுளது. இது எமது மகால் சுவடி எண் 381 போன்றது. இதில் 195 பாடல்களே உள்ளன. அதில் 540 பாடல்கள் உள்ளன.

oooooooooooooo

வரிசை எண். 866. சுவடி எண். 418 (d)

## அகத்தியர் – 16

ஏடுகள் : 5. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு : 9-10 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 150. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

குறிப்பு

இது எமது மகால் சுவடி எண் 254 (b) போன்றது. இது அகத்தியர் திரட்டு 16 என்ற தலைபபில் இருக்கிறது. இறுதியில் பு. ஆ. அப்பாசாமி பிள்ளை என்று எழுதப்பட்டிருக்கிறது.

oooooooooooooo

வரிசை எண். 867 சுவடி எண். 418 (e)

## போகர் சூத்திரம் 68

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 300. ஆசிரியர் : போகர். முழுமை : முற்றுமுளது

தொடக்கம்

சீர்மிகுத்த பேரனெங்கள் நந்தீச ரப்பா
வாரமுட னெனைவளர்த்த மூலனே தந்தை
பாரில்வளர் கருவூரன் கொங்கணரென் பிள்ளை
காரமுடன் சாரவிதங் கையறிவா மெய்யே. க

முடிவு

உரைத்தேன் கருக்கள் குருக்க ளெளியாமல்
நிரைத்தேன் சிவனுமையாள் நிதிமுறை யஷண
பரைக்கேநீ பூசை பண்பாகச் செய்தாக்கால்
குருக்காணும் பார்கக் கூர்ந்துப்பார் முத்தியே. 68

போகநாயனுர் சூத்திரம் 68 முற்றுப்பெற்றது.
பு. ஆ. அப்பாசாமி பிள்ளை.

குறிப்பு

இதில் 64 சரக்கிற்கும் மித்துரு, இரத்தினவகை பஞ்சபூதம் பிரிதிவிசரக்கு, அப்பு, தேயு, வாயு, ஆகாயசரக்கு, முப்பு சுண்ணம், செயநீர், பூரம், துருசு சுன்னங்கள், தாரகட்டு, அறுவகை செயநீர் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 868 சுவடி எண். 418 (f)

# இராமதேவர் பெருநூல் ஆயிரத்தில் சொல்லியது

ஏடுகள் : 7. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 28 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை : 200. ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முற்றற்றது.

தொடக்கம்

தானென்ற மச்சமுனி யெண்ணூற் பாரு
சகலகுரு மானமெல்லாந் தானே தோற்றும்
ஊனென்ற கருமானம் பஞ்ச பூதம்
உண்மையுட னதின்வகுப்பை யுரைக்கக் கேளு.

முடிவு

கானென்ற தேளிலே குழப்பி நித்தம்
கடுகியொரு மண்டலமே கொண்டா யானல்
ஓமெனவே தாதுவெல்லா மிறுகிக் கட்டு
மொழுங்காக தேகமது கல்த்தூ ணமே. 178

குறிப்பு

இதில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய வகுப்புகளும் துருசு சாரம், கல்லுப்பு சீனம், தங்கம், சூதம், இரும்புக்கு சத்துரு மித்துருக்களும், கரும்பசளை கொண்டு வாத போக்கும் காணப்படுகின்றன.

வரிசை எண். 869 சுவடி எண். 418 (g)

## இராமதேவர் சூத்திரம் 300-ல் கருந்துளசி

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 9 வரிகள். அளவு : 28×3 செ. மீ. எழுத்து : தமிழ். இ. எண்ணிக்கை : 50 ஆசிரியர் : இராமதேவர். முழுமை : முழுமை.

**தொடக்கம்**

தானான பொடியிலே மிளகு காந்தம்
 கூட்டியே விஷந்தீண்டி வருவோர்க் கெல்லாம்
மானான சிறுநீரில் குழப்பிக் கொள்ள
 மடிப்பிக்கும் விஷங்களெல்லா மடிந்து போகும்

**முடிவு**

மணியான மூலிகையை சமூலம் வாங்கி
 அதட்டியே சூரணமாய்ச் செய்து கொண்டு
தணியாகும் சர்க்கரையிற் சேர்த்துக் கொள்ள
 சாதிக்குங் காயசித்தி சாதித் தேறே. 219

**குறிப்பு**

இதில், கருந்துளசிகொண்டு தாம்பர சுண்ணம், ரச சுண்ணம் தங்க குரு முதலியனவும், கருவூமத்தையும், வாதபோக்கு முதலியனவும் பேசப்படுகின்றன.

வரிசை எண். 870 சுவடி எண். 418 (h)

## அகத்தியர் சுருக்கம் 12

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 28×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**குறிப்பு**

இது எமது மகால் சுவடிஎண் 321 (c) "அகத்தியர் வாதகச்சுருக்கம் 12" போன்றது இறுதியில் பு. ஆ. அப்பாசாமிபிள்ளை என்று எழுதியுள்ளது.

வரிசை எண். 871 சுவடி எண். 419-(a)

## அகத்தியர் பெருநூல் – 5-ங் காண்டம்
## சாலத்திரட்டு – மாந்திரீகம்

ஏடுகள் : 55 (156–210). ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 1000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

**தொடக்கம்**

முன்னுரைத்த காண்டவழி முத்தமற்கு மாந்த்ரிக
மென்னுரைத்த நீசள்மூட்டும் வேணியாய் - பண்ணுரைத்த
குஞ்சரமே மூலக் குடியாம் விநாயகனுர்
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு. க.

**முடிவு**

ஆளுவர் வாயிரத் திருநூறு வித்தை
மீளுவர் நானே விடாதே வெளிதனிற்
சூளுவார் சாபந் துடருமே யுன்னைக்
சேளுநீ பூரணி கேட்பது முத்தே. 298.

**குறிப்பு**

இதற்கு முன் 154, 155 ஆகிய 2 ஏடுகள், அகத்தியர் பெருநூல் இரண்டாங் காண்டத்தின் இறுதிப்பகுதி, சுவடி எண் 390-ல் உள்ளதுபோல் காணப்படுகின்றது.

இதில், ஜாலம், மாந்திரீகம், பூசை முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன அந்தாதிப் பாடல்களாக உள்ளன.

178 ம் ஏடு இல்லை. அதில் இருக்கவேண்டிய செய்யுட்கள் 2. இல்லை ஆனால் 209-ம் ஏட்டின் பிறகு 178-ம் எண்ணிட்ட ஏடு உள்ளது, இது 209-ம் ஏட்டின் தொடர்ச்சியாகவும். இதன் தொடர்ச்சி 210-ம் ஏட்டிலும் உள்ளன.

வரிசை எண். 872 சுவடி எண். 419 (b)

## அகத்தியர் பெருநூல்-4ங்காண்டம்ஞானம்,சாலம்

ஏடுகள் ; 48. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6 வரிகள். அளவு : 28×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 1000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றற்றது.

**தொடக்கம்**

காரணமே ஞானவெளி கடந்து நின்ற
கற்பகமே விற்பனமே கருணை மேவும்
பூரணமே பஞ்சகர்த்தா ரூபி யான
புண்ணியமே நிர்ணயமே பொருளே வேத
வாரணமே நிறைந்த பிரணவமே செல்வ
மயில்க்குகனே மாகுரு பரனே ஆதி
காரணனே நான்முகனே முகமைந் தான
நாதபர விந்துவுமே காப்ப தாமே.

**முடிவு**

திண்டாமல் சிவிகையுட சீர்பா தத்தைச்
சிவந்துமது சீர்பாதந் தாங்குமே பாரு
ஆண்டவனே கர்த்தாவோ யென்பா ருன்னை
யவனைந்தம பூசையுறு வேற வேணு
மண்டலங்க பூதமெல்லாஞ் சூழும பாரு
வானதுந் துமிழுமங்கும பசாசு கோடி
கொண்டுவரு முருப்போலு முங்கள் குலம் போலு
மிருந்தவற்குக் கூடுஞ் ..................

**குறிப்பு**

இது முன் சுவடியின் தொடர்ச்சி. இதில், ஆந்தை, கோட்டான் ஆடு இவைகளின் முழி வித்தை; வயிரவன் ரசகுளிகை, காடை, கொக்கு, கருடன். பருந்து, குயில், ஆந்தை இவைகளின் கூலிவித்தை; முட்டைக்கு வேர் பூச, கண்டாங்கி வேர், முதலியன காணப்படுகின்றன. இதற்குப்பின் 5 வெற்றேடுகள் உள்ளன.

*** ***

வரிசை எண். 873. சுவடி எண். 420

## புலத்தியர் சம்பாதசிதாக்கியம் 18 காண்டங்கள்

ஏடுகள் : 77. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 10–12 வரிகள். அளவு : 29×4 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 2000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை:முற்றும்

**தொடக்கம்**

அருள்பெருகுஞ் சிவனுமையாள் பாதம் போற்றி
அகமகிழ்ந்து நவமிரு ...... ழுக்கே போற்றி
யருளறவே வெளியுரைத்தேன் சமபா தத்தால
(யதற்) கிணையா யெவருரைத்தா(ர்) தனித்த னூலில்

திருவருளால் சிவகிருபை பாதம் போற்ற
திரிகுணச லனுபோக மசையா வஸ்து
பொருளற்ற ... ... ... வெளியாய்ச் சொன்னேம்
புலத்திய சம்பாத சிதாக்கிங் காப்பே.

## முடிவு

ஆமென்ற கயிலைமுனி நான்ந்தான் சொன்னதா
மிதில்மாரணத்தெளியொட் டியஞ்செய் வித்தை
தாமென்ற திதுவல்ல பூசுச்செப் பும்பந்துந்
தானுட மாத்திரைக் கொளிதுதா னுச்சு
போமென்ற தற்குவாய் வருத்த மார்பு
போக்குவரி தாக்கிடு தாம்பூ பூமியம்
நோமென்ற பிறசபையா நிலையுற் றோற்கு
நோக்கிடுமாத் திரையதில்த்தான் நோக்கினேமே. 10

18–காண்டம் முற்றும்.

## குறிப்பு

*இதிலுள்ள காண்டங்களின் பெயர்கள் : காப்பு; நவமிருவர் விவகாரம் 1. மதியிருள், அருள்வெளி, சுளிமாய்கை யாறுதலறியும்படி. 2. அப்புப்பு முப்பு அறியும்படி. 3. ஆதீயுப்புயறியும்படி;சேர்கின்ற கோரோசினை. 4. கரு நெல்லி, வெண்சாரைக் கருத்தறியுமபடி. 5. நீலகண்டம், அக்கினி லைபநீர் நேர்மை, நிலைரக்கயுற்பன விவேகமறியும்படி 6. படைவெட்டுடைப்பட்டு. 7.ஆதியுப்பால்த் தேகம சோதிமயமாக்குதல்,ஆகமமறியும்படி. 8.அட்டமாசித்து செகசாலவித்தைதொட்டாட்டம யெட்டெட் டரியும்படி.9.வன்பது செய்யும் மை யென்பசா-க்கள்க் கெழுதிய நீறு, முன் ... 10. சித்தாடக் கழுமணி பெத்தாட் கிறுபை ......... 11. விதிமதிமய ......... யறியும்படி 12. சன்னி நோய் சென்னியில் சண்டமாருத வளியன்னில் சறுவ சங்கராக் குளம்பதில் முன்னிலைப் பயன் விதிமுறையறியும்படி. 13. வொருவகு பஞ்சமா நாடி விதிமுறை தருவிருக்கே, உருக்கு மெளுகு. 14. மதிநால் விரிசடையோன் விட்டகற்மம், அதனுலதிவிடையோனட்ட குற்மம் யெதினுல் தெரிபடுமிர்த மூவகை காசஞ் சுத்தினுல் சரவன் நீர்ச் சுருக்கு அறியும்படி. 15. பதிநஞ்சா வளிவோன் விடு கொடுவிடம் விதியஞ்சவி செய்திடுமுன் சடம்பதி மிஞ்சிடு முகமுசம்பிரியுர தடம்மதி துஞ்சிடும் புடமாத்து மாத்திரையே. 16. யிதிவளி மெழுக்கினுல்ப் பளித்தொளில் யெதுனுலருளி பழுதுகு நாகரீகம். 17......... நைடுவாலின் வரண்ட புதி கிநேசமாமணிந்திடு சிருசாடை யெதில் நேசமாங் கொள்ளையெடும் பெடைச்சீ ......... தியுமே. 18. நெட்டுச் செய்திடு சிவசித்தியதில் நெட்டுச் செய்திடு சலசித்தி .........வெத்தியில்நெட்டுருக்கும்பிடு மாமே. ஆகியவை அடங்கியுள்ளன.*

வரிசை எண். 874 சுவடி எண். 421 (a)

## பிரம்மமுனி வைத்திய சூத்திரம் 390

ஏடுகள் : 112. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6 - 7 வரிகள். அளவு : 31 × 3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை ; 2600. ஆசிரியர் : பிரம்மமுனி. முழுமை : முற்றுமுளது.

**காலம்**

சவுமிய வருடம் ஆவணி மீ 26 உ ரோகணி நட்சத்திரம் ஆதிவாரம் முத்துசாமிபிள்ளை பிரம்ம முனியாரவர்கள் பாதார விந்தமே கெதியாக எழுதி நிறைந்தது. சம்பூரணம்.

**குறிப்பு**

இது எமது சுவடி எண். 36 - A போன்றது. இதில் பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதில் 6 வது ஏடு இல்லை.

---

வரிசை எண். 875. சுவடி எண். 421 (b)

## மூலிகை மட்சரம்

ஏடுகள் : (113-133) 21. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 31 × 3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 500. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை ; முற்றுமுளது.

**தொடக்கம்**

காணவே வசியமுடன் மாரண மோரெட்டும்
கலந்துநின்ற மூலிகைதான் கருவைச் சொல்வேன்
பூணவே ஒவ்வொன்றுக் கெட்டு மூலி
பொதுப்பேரை வெவ்வேறே பிரித்துக் கேளு
தோணவே சீதேவி செங்கழநீர் வாங்கச்
சொல்லுகிறேன் மந்திரத்தைச் சொல்லு றேனே.

**முடிவு**

அமப்பா அட்சரங்க ளஞ்சு பின்னே
அன்பத்தோ ரட்சரமாய் விரிந்து நிற்கும்

ஓமப்பா வொவ்வொன்றாய் வளுத்த வென்றால்
யுரையேது கரையேது யுரைப்பார்
அறிந்தமட்டுஞ் சொல்லவுங்கேள்
நாதாக்கள் தவறாமல் பாத்திட்டாரே.

முற்றும். குருவாழ்து. ஓம் நமசிவாய. குருவே துணை.

## குறிப்பு

இதில் ஒவ்வொரு மூலிகைக்கும் காப்புக்கட்டி தீபதூபங்காட்டி, அதனதற்குரிய மந்திரங்களைச் செபித்து, வேருடன் பிடுங்கி வசியப்போக்கிற்குப் பயன்படுத்தும் முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

134 வது ஏடு வேறுபாடல்கள் உடையதாயிருக்கிறது.

* * * * * * * * * * * * *

வரிசை எண். 876. சுவடி எண். 421 (c)

## (வை)வசூரி சாத்திரம்

ஏடுகள் : (135-158) 24. ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 31×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 550. ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றும்.

## குறிப்பு

இது எமது சுவடி எண் 213 போன்றது.

வரிசை எண். 877 சுவடி எண். 421 (d)

## தேரையார் வைத்தியம் 500

ஏடுகள் : 133 (159-295) ஏட்டின் நிலைமை : பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 31×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 2800. ஆசிரியர் : தேரையர். முழுமை : முற்றற்றது.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 251 - (a)போன்றது அதில் 303 செய்யுட்களிருப்பினும் இதில் 341 செய்யுட்கள் உள்ளன. இடையிடையே ஏடுகளும், செய்யுட்களும் இல்லை.

வரிசை எண். 878 சுவடி எண். 422 (a)

## அகத்தியர் பெருநூல் 2-ங் காண்டம் 300

ஏடுகள்: 80. ஏட்டின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7வரிகள். அளவு: 28×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2000. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

குறிப்பு

இது எமது சுவடி எண் 288 (B) போன்றது.

வரிசை எண். 879 சுவடி எண். 422 (b)

## தெட்சிணாமூர்த்தி வகாரம் 2ங் காண்டம்

ஏடுகள்: (82-153) 72. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 28×3 செ.மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

காண்டமென்ன நாகரசஞ் சொல்லக் கேளு
சடியகோ டகசாலை கொடுப்பை வீழி
யாண்டகொடு வேலிவுஞ் சாரணையுஞ் சாறு
மப்பனே செருப்படிச்சா ருறுங் கூட்டி
மீண்டசட் டியில்வார்த்து நாகம் வாங்கி
விளர்பியசா றுடனகலந்து யெரிப்பாய் சாம
மாண்டுவிடும் வலியுமடா கட்டிப் போச்சு
வாதமென்ன விம்மருந்தை மாட்டு மாறி. 1

முடிவு

ஒவ்வாத விரும்பினிலே கோச பீச
சத்தியாற் செம்பாச்சு யிருயபு செம்பை
சவ்வாது பூசிப்பித தனையிற் போடு
தங்கமல்லோ விதற்கு பேர் சாத்த லாகு
மிவ்வாறு தங்கத்தில் வெள்ளி சேரு
வியல்பான பத்தரைமாத் தப்பா தங்கம்
வெவ்வேறு வேதையிடு சரக்கிற் போடு
வேணபடி யளவறந்த வித்தை யாச்சே. 295

குறிப்பு

இதில் முதல் 18 ஏடுகளில் வகாரம் பாடலாயுள்ளது. அதன்பின், லிங்க மெழுகு, அரிதாரக்கட்டு, அறுவங்க மெழுகு, பாஷாணக்கட்டு, பச்சைக்கற்பூர வைப்பு, கறியுப்புக்கட்டுதுரிசுக்கு ஆகியன உள்ளன.

வரிசை எண். 880 சுவடி எண். 423 (a)

## அஷ்டகர்ம சூத்திரம் 105

ஏடுகள்: 17. ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 35×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 500. ஆசிரியர்: (அகத்தியர்). முழுமை: குறைபாடுடையது.

தொடக்கம்

... ... ... த்தைச் சொல்கிறேன் கேளு
பரிவான சக்கரத்தை யெழுதுவாய் தகட்டில்
வாரு காரீயம் வெள்ளீயம் நாகம்
... ... ... மொன்ருய் ... ... ... து போலத் தட்டி
சேரெழுதி ......... கரத்தை.

முடிவு

பாருஅஷ்ட கிரமமெல்லாம் பாடிப்போட்டேன் கேளு
பரிவாக சாத்திரனூல் பாத்துநித் தியமறிந்தால்
சேருசிவ ......... ......... மந்திரத்தை நித்தியம்
செயமாகப் பாத்தவர்க்கே சித்தி யாகும்
காருநித்தியங் குருபதத்தை வணங்கிப் பாருதொழிலே
கைகண்ட வித்தையிது அஷ்டகர்மத் தொழில்தான்
ஊரிலுள்ள பேர்களுக்கும் கொடுக்கலாம் நூலே
உத்தசண் டாளருண்டு ஞானசூத்திரந்தான். 105.

அஷ்(ட கர்ம) சூத்திரம் நூத்தி அஞ்சும் யெழுதி நிறைவேறியது.

குறிப்பு

எட்டு கருமங்களைப் பற்றிக் கூறுவது இந்நூல்.

வரிசை எண். 881. சுவடி எண். 423(b)

## மச்சமுனி பாடல் 800

ஏடுகள்: 55 ஏட்டின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். அளவு: 35×3 செ. மீ. எழுத்து: தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: மச்சமுனியார். முழுமை: முற்றும்

**காலம்**

இவை ராஷசத வருடம் அற்பிசி மீ நாயத்துக்கிழமை பனிரெண்டு மணிக்கு நிறவேறினது முற்றும் குருபாதந்துணை.

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 31-B (b), 325 போன்றது.

oooooooooooooo

வரிசை எண். 882 சுவடி எண். 424 (a)

## அகத்தியர் சால நிகண்டு 200

ஏடுகள் : 17 ஏட்டின் நிலைமை : மிக மிகப் பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 33×3செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 600. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

ஏத்த சால நிகண்டிரு நூறையுஞ்
சாத்த மூல ரகத்திய ஞமே
பூத்த தாரணி பூமனிஐ நந்தியைக்
காத்த வேளக் கணபதி காப்பதே.

**முடிவு**

பாரினி லிந்த முறைப்படி பாற்றுத்
தேறுநீ ......... செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாறு அறுபத்து நாலும்
நேரிரு நூறும் நிகண்டது முற்றே. 200.

சால நிகண்டு முற்றும்
மனோன்மணி முன்னிற்க வேண்டியது
வையிகுண்ட மூர்த்தி துணை
சவுந்தர நாயகி துணை

**காலம்**

பிலவங்கா வருடம் மார்கழி மீ 14ட புதன் வாரஞள் உதையத்தில் சால நிகண்டு 200-ம் முகிந்தது முற்றும்.

**குறிப்பு**

இதில் வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

oooooooooooo

வரிசை எண். 883 சுவடி எண். 424 (b)

## அகத்தியர் இந்திரசால வெண்பா

ஏடுகள் : 11. ஏட்டின் நிலைமை : மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள் அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 250. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது

**தொடக்கம்**

கருவகையில் மூலிகைச் சித்திரச்
சுருக்கமொரு விபரம் வெண்பா வுளரக்கவே
திருவளருங் கந்தனுக்கு முன்னுதித்த
காரானை ஐந்துகரத் தந்திமுகத்தோனே சரவக்காப்பு. 1

**முடிவு**

குறிவெண்பா விந்திரகண்டி கோகறணம் நூறு
மறிவுண்டாஞ் சால மவையடக்கம் — பிறிவுதரும்
தெட்சணியை யாரு செசச்சால மாட்டிவைக்க
வட்சணி நூறுமுற் றும். 100

மவுனம் 100. அகத்திய சுவாமியருளிப்பாடு முற்றும். குருபாதமே கெதி. சவுந்தரியம்மன் துணை. வைகுண்டமூர்த்தி துணை

**காலம்**

பிலவங்க வருடம், மார்கழி மீ 19 உ சனிவாற்றுள் முகிந்தது முற்றும் லெஷ்சிக்க வேண்டியது.

**குறிப்பு**

இதில் மருந்து செய்முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 884 சுவடி எண். 425

## அகத்தியர் பிரகரண நூல்

ஏடுகள் : 293. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 5-8 வரிகள். அளவு : 30×3 செ. மீ. எழுத்து : தமிழ். கிரந்தங்களின் எண்ணிக்கை : 8000. ஆசிரியர் : அகத்தியர். முழுமை: முற்றும்.

**தொடக்கம்**

செந்தூரப் பிரகரணம்

காளகண்டமே நாராயண செந்தூரம் :- கரியுப்பு, வெடியுப்பு, சீனம், காந்தம், கெந்தகம், பொரிகாரம், கடல்துரை, வகைக்கி சேர்-க.

குறிப்பு

முதல் 2 ஏடுகள் இதில் அடங்கியுள்ள மருந்துகளின் பட்டியல். இதில் செந்தூரப் பிரகரணம் முதல் 45-வது இங்கிலிசு மருந்துகளும் குணமும் வரை உள்ளன. 42-வது சாலப்பிரகரணம், 43 மாந்திரீகப் பிரகரணம், 44 அகத்தியர் நிகண்டுப் பெயர் பிரகரணம், 45 இங்கிலீசு மருந்துப் பிரகரணம் ஆகியவை உள்ளன.

வரிசை எண். 885 சுவடி எண். 426 (a)

## அகத்தியர் திராவகம் 800

ஏடுகள் : 175 ஏட்டின் நிலைமை : மிகமிகப்பழுது. பக்கத்திற்கு : 8-9 வரிகள். அளவு: 33×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 7000 ஆசிரியர் : அகஸ்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்

வானைத்தாவிய பொதிகை மக்த்தான ரிசியுடைய
வாக்கு நேர்மை.
பானைத்தாவிய பூசைப் பரிவான சிவயோகப்
பண்போரீ கேளீர்

முடிவு

பந்தியடா யென்னூலை யிய்ந்தேன் மேலைப்
பரமகுரு போல் நினைந்தால் பலிக்கு மெல்லாம்
அந்தியடா மச்சேந்திரு வுனக்காய்ச் சொன்னேன் 811
அிந்துபார் சூஸ்த்திரத்தின் அருள்தான் முற்றே
அகஷ்ததியர் அருளிச் செய்த திராவகம் எண்ணூறு
எழுதி நிரைந்தது முத்தும். சரவணபவா.

காலம்

சாதாரண வருஷம் கார்த்திகை மீ 15 உ விழாளக் கிளமை நாளிகை 7½ க்கி திராவகம் எழுதி நிரைந்துது மூத்தும்.

தஞ்சாவூரு முத்துக்குமற செட்டி மகன் காட்டு பாவா செட்டி
யெழுதினது முத்து.

குறிப்பு

சுவடியின் ஆரம்பத்தில் 'தாளக மெழுகு' என்று ஒரு ஏட்டில் குறிப்பு, காணப்படுகிறது. இது ஏழுராசிக்கு விபரம், பிராணுயாமப்பலன், மவுன

திட்சை, காந்த சத்து, அயசத்து, அப்பிரேகத்தில் ரசமெடுக்க, கர்ப்பத்துக்கு: பத்திய கரி, நாகபற்பம், நாற்பத்து முக்கோண பூசை, செயரச செந்தூரம், தங்கக்கட்டு, பவளப்புத்துச் சத்து, கட்டின ரசம்உருக்க, சீனச் சுன்னம், ஏமரசக் கட்டு, நாகச்சுன்ன செயநீர், சூத செயநீர்,வீர மெழுகு, பொற்குரு, வெள்ளி குரு முதலியன உள்ளன.

* *

வரிசை எண். 886 சுவடி எண். 426 (b)

## அகத்தியர் கேசரி வித்தை 100

ஏடுகள்: 22. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். அளவு: 33×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 700. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றும்.

### தொடக்கம்

திருவள ருத்திதைக் கொம்பன்
 சீரடி போற்றி னுளும்
சுருவுரு வான மே (க) ன்
 காகுத்தன் மதியே சித்தி
சறுவமு மறுவாய்த் தோன்றி
 சாஷ்த்திரம் பிறந்த மூலம்
கிருசன மு (த) லா யெட்டுக்
 கேசரி வித்தை யாமே. 1

### முடிவு

மரைத்திட்டு உரைத்தோமென் றெண்ண வேண்டா
 மணிமந்திர வாளசொன்னோ மாத்துஞ் சொன்னோந்
துரைத்திட்டத் துறைத்தப்பாய்ச் சொல்ல வில்லை
 சொல்லரிவாய் கேசரத்தின் சூஷ்த்திர முற்றே 100

### காலம்

சதாக்குருஞ வருடம் பங்குனி மீ 20 உ அம்மாவாசி ஞளிகை பத்து. யெழுதி முடிந்தது முற்றும்.

### குறிப்பு

இதில் காஞ்சுரைத் திலதம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 887 சுவடி எண். 426 (c)

## அகத்தியர் முப்பு - 16

ஏடுகள் : 4. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 8 வரிகள். அளவு : 33 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 120. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

### குறிப்பு

இது எமது சுவடி எண் 236-c போன்றது.

வரிசை எண். 888 சுவடி எண். 426 (d)

## தெட்சிணாமூர்த்தி தந்தி-8

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-8 வரிகள். அளவு : 33×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை: 75. ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி முழுமை : முற்றும்.

### தொடக்கம்

சோதியெனும் பராபரையாள் தேவி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போத்தி
விதியெனு மெனையாண்ட நந்தி பாதம்
விண்ணகத்தில் வைத்துநாள் தொளுதி றஞ்சி.

### முடிவு

சேரப்பா ஒன்றுமில்லை விடுசி வாத்து மாவாய்
சிறந்துநின்ற தந்தியதே பரமே யாகும்
விரப்பா ஒன்றுமில்லை அமுர்த முண்டால்
மெஞ்ஞான போதகமாந் தந்தி முத்தே. 8

*தெஷ்ஷாண மூர்த்தீ தந்தியெட்டு எளுதி நிரைந்தது முத்து.*

### காலம்

பறித்தாவி வருடம் வையாசி மீ 10 உ வெள்ளிக்கிழமை நாளிகை 17¼ க்கி எழுதி நிறைஞ்சுது முத்து.

*சறஅணபவா சிவமயம் காட்டுபாவா செட்டியாரு*

### குறிப்பு

இதில் வாசி முதலானது பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 889. சுவடி எண். 427 (a)

## அகத்தியர் பூரணகாவியம் – 1000

ஏடுகள்: 125. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-11 வரிகள். அளவு: 34 × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 7000. ஆசிரியர்: அகத்தியர்., முழுமை: முற்றுமுளது.

### காலம்

துன்மதி வருடம் பங்குனி மீ' க உ. புதன்கிழமை உதையாதி 15 நாழிகை அகழ்வில் ஸ்ரீ விசாலாட்சி கிருபையால் அய்யலுவைய்யரெழுதியது.

### குறிப்பு

இது எமது மகால் சுவடி எண் 361 போன்றது. அதில் 998 பாடல்களே உள்ளன. இதில் 1001 பாடல்களும் உள்ளன. பின்னர் இதன் வாழ்த்துப் பாடல் ஒன்றும் இருக்கிறது.

* * * * * *

வரிசை எண். 890. சுவடி எண். 427 (b)

## தட்சிணாமூர்த்தி வைத்தியம் பின்னருநூறு

ஏடுகள் 88. ஏட்டின் நிலைமை: மிகப் பழுது. பக்கத்திற்கு: 8 - 10 வரிகள். அளவு: 34×4 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 4000. ஆசிரியர்: தட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றற்றது

### தொடக்கம்

கறுனைதரு மைங்கரனே காப்பு வாணி
    கலந்திருந்த சூத்திரநான் கருவாய்ப் பாட
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
    தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாட

### முடிவு

வருந்தான வியாதியி தனிலும்
    வளமான யனுபானத் தோடருந்தப்
பொருந்தான வியாதி வருவதில்லைப்
    புகள் செந்தூர மிதுதானே.

குறிப்பு

இதில் 610 செய்யுட்களிலிருந்தும் முற்றும் என்று எழுத வில்லே. அதனால் இது குறைபாடுடைய சுவடியாக இருக்குமோ எனக் கருதப்படுகிறது.

இதில், முப்புகுரு, அப்பிரேகபற்ப செந்தூரம், இஞ்சி லேகியம, சிந்தாமணி மாத்திரை, நிலகண்ட பூரம், மகாசந்தனுதித் தயிலம், சிறுவாக்கிளி பூபதி செந்தூரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண். 891 சுவடி எண். 427-C

## தைல வர்க்க வெண்பா 334

ஏடுகள்: 27. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு: 34 × 4 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1200. ஆசிரியர்: அறியக்கூடவில்லே. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

கூத்தளகு தம்மைகண்டங் கூர்முள்ளிச் செய்புளிச்சை
யேத்திநெரிஞ்சி புங்குகிளா வேரண்டம் — பூத்தவில்வங்
காட்டுமுன்னைச் சாறுவளே கானெரிஞ்சி பேய்க்கரும்பு
நாட்டெருக்குப் பொன்முசுட்டை நாடு.

### முடிவு

மறைந்துசெம் பட்டைமயிர் மாறக் கருப்போடி
செறிந்து வளருந்தாச் சோ — சீரந்
தயிலப்பே ராங்கே சரஞ்சனமாந் தன்னைப்
பயமில்லாதே சாலப் பரிந்து. 334.

ஆக தைல வற்கம் வெண்பா 334 முத்தியது.
ஸ்ரீ குருபரன் துணே. விசாலாட்சி கிருபை.

குறிப்பு

இதில் மகாநாராயணத்தைலம், பிருங்காமலகத்தைலம், விஷமுட்டித்தைலம், விசைய வைரவத்தைலம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண். 892 சுவடி எண். 427 (d)

## எண்ணெய் வர்க்க வெண்பா 70

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு : 34×4 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முழுமை.

**தொடக்கம்**

பசுமஞ்சள் நீர்க்குறிஞ்சாப் பச்சிலை நீர்தானு
மொசியும் விளக்கெண்ணை வகைக்கொன்று - நிசப்படிகள்
வெப்பாலை வாலுளுவை வித்த ... யாது வகைக்கே
ஒப்பாம் பல்மறையா மோது. 1

**முடிவு**

கொள்ப்படியுள் கால்சேற்று கூர்தலில் பால்வடித்தே
யுள்குடித்தே மதிதநா ... வின — கள்பூசப்
பேசுஞ் சிறுவயதாம் பிள்ளையளுக் குத்தசுரம்
யாசையறப் போமே யகன்று. 70

**குறிப்பு**

இதில், பசுமஞ்சள் எண்ணெய், கரப்பானெண்ணெய், கொடுவேலி யெண்ணெய், சகல வாயுவுக்கும் எண்ணெய். மூல ரத்தக் கழிச்சலுக்கு எண்ணெய் முதலியன உள்ளன.

வரிசை எண். 893 சுவடி எண். 428

## கம்பளிச்சட்டை கயிலாச நாதர் நிகண்டு 1212

ஏடுகள் : 110. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 38×3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை 4000. ஆசிரியர் : கம்பளிச்சட்டை கைலாசநாதர். முழுமை : முற்றுமுளது.

**காலம்**

பிப்பற வருடம் ஆவணி மீ 10உ செவ்வாய்க் கிழமை அவுட்ட நஷ்செத்திரத்தில் யெழுதி முடிந்தது முத்தும்.

குருவே துணையாக வேணும்.

**குறிப்பு**

இது, எமது மகால் சுவடிகள் 26 (c), 214 (e), 318 (b) போன்றது. இதில், சௌவீரப்பேர், முதலானவைகள் உள்ளன.

* * * * * * * * * * * * *

வரிசை எண். 894 சுவடி எண். 429

## வைத்திய அட்டவணை (உரைநடை)

ஏடுகள்: 100. ஏட்டின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். அளவு: 30×3 செ. மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 2500. ஆசிரியர்: அறிவிக் கூடவில்லையாயினும் 51 வது ஏட்டின்படி நாராயணசாமி ஞயக்கர் எழுதியது என்றுளது. முழுமை: குறைபாடுடையது.

**தொடக்கம்**

ரசகற்பூர மாத்திரை.

மஞ்ச பலகறணையை காட்டு வெருட்டியில் பொடம் போட்ட புஷ்பம் வராகனெடை 20. மடல்தொத்த புஷ்பம் வராகனெடை 10 வெள்ள காசிக்கட்டி விராகனெடை 5. ரசகற்பூரம் விராகனெடை 1. நல்லெண்ணெய் சேர் $\frac{1}{8}$.

**முடிவு**

கத்தரி பிஞ்சு, முருங்க பிஞ்சு, அறைக்கீரை, வெந்தியகீரை யிவை சேர்க்கவும் தீரும். மேகச்சூலை, வெடிசூலை, ஆரூத மேகரணம், மேகதிதடிப்பு, மேகஊறல், கெறந்தி, புண்ணு வெட்டை யிவையெல்லாந் தீரும். பதிநெட்டு மேகம் தீரும்.

**குறிப்பு**

இதில், 85-வது ஏடு இல்லை. இதில் ரசகற்பூர மாத்திரை, சில்விஷங்களுக்கு மருந்து, புளியாரை கிருதம், பரங்கிப்பட்டை சூரணம், சுவாச காசத்துக்கு கடலைப் பிரயோகம், ரசபதங்கம், நெல்லிக்காய் மொரப்பா முதலியன உள்ளன.

* * * * * * * * * * * * * * *

வரிசை எண். 895 சுவடி எண். 430 (a)

## அகத்தியர் பூரண சூத்திரம் 216

ஏடுகள்: 38. ஏட்டின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். அளவு: 42 × 3 செ.மீ. எழுத்து: தமிழ். கி. எண்ணிக்கை: 1500. ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**குறிப்பு**

*இது எமது சுவடி எண் 324 (f) போன்றது.*

வரிசை எண். 896 சுவடி எண். 430 (b)

## அகத்தியர் பரிபாஷை, (1-5 காண்டங்கள்)

ஏடுகள் : 90. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 42×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 3600. ஆசிரியர் : அகத்தியர் முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு**

*இதன் முதலிரு காண்டங்களும் 270 (a). 270 (b) போன்றன, சுவடி எண் 321 (a) யில் முதல் 71 பாடல்கள் இல்லை. 72-ம் பாடல் முதல் 5-ங் காண்டம் முடிவு வரை இது போன்றதே.*

வரிசை எண். 897 சுவடி எண். 430 (c)

## கும்பமுனி சாமியார் பாடல் 12

ஏடுகள் : 3. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 42 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 100. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு**

*இது எமது சுவடி எண் 120 (a) போன்றது.*

வரிசை எண். 898 சுவடி எண். 430 (d)

## அகத்தியர் முப்பு 50

ஏடுகள் : 10. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது. பக்கத்திற்கு 7-8 வரிகள். அளவு : 42×3செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

**குறிப்பு**

*இது எமது சுவடிஎண் 357 (b) போன்றது.*

வரிசை எண். 899 சுவடி எண். 430 (e)

## அகத்தியர் வைகாரம்-30

ஏடுகள் : 6. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 42×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 200 ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

குறிப்பு

இது எமது சுவடி எண்கள் 121 (i), 321 (b) போன்றது. 321 (b) அகத்தியர் வைபாகம் 30 என்ற பெயரால் உள்ளது. பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண். 900 சுவடி எண். 430 (f)

## தட்சிணாமூர்த்தி - 10

ஏடுகள் : 2. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 42×3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 75 ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி. முழுமை : முற்றும்.

குறிப்பு

இது எமது சுவடி எண் 121 (j) போன்றது. அது அகத்தியர் சூத்திரம் 10 என்ற பெயரால் உள்ளது. சிலவிடங்களில் அகத்தியரும் தெட்சிணாமூர்த்தியும் ஒன்றுபோல் காணப்படுகிறது.

வரிசை எண். 901 சுவடி எண். 430 (g)

## அகத்தியர் உடல்கரு சூத்திரம் 48

ஏடுகள் : 9. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 42×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 300. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

தொடக்கம்

வாதமென்ற நூல்களெல்லா மொடிக்கி நன்றில்
மாட்டவே சினமைந்தன் பதியுங் காப்பு
நாதமென்ற உமையவளுஞ் சிவனுங் காப்பு
ஞுதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு

முடிவு

நாட்டுகின்ற வித்தையெல்லாம் பாப்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு

பூட்டுகிற பூட்டெல்லா மிதுதா னென்று
புகழ்ந்திட்ட உடல்க் கருகூத் திரந்தான் முற்றே. 48

முஸ்தும்

## குறிப்பு

இதில், பிண்டம் பற்றியும், அதனுல் வழிலே முடித்து கருக்கள் கூட்டிதேலும், வாதப் போக்கும், உடல் சல்லு விளக்கம் சூட செயனிர் கட்டு, பொற்குதிரை சுண்ணம் வாதப்போக்கு ஆகியவையும் உள்ளன.

---

வரிசை எண். 902 சுவடி எண். 430 (h)

## அகத்தியர் மூப்பு – 6

ஏடுகள் : 1. ஏட்டின் நிலைமை : மிகப் பழுது பக்கத்திற்கு : 7-8 வரிகள். அளவு : 42×3 செ. மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 80. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றுமுளது.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் 236 (f) போன்றது.

வரிசை எண். 903 சுவடி எண். 430 (i)

## அகத்தியர் கலைஞானச் சுருக்கம் 120

ஏடுகள் : 20. ஏட்டின் நிலைமை : மிகப்பழுது. பக்கத்திற்கு : 6-7 வரிகள். அளவு : 42 × 3 செ.மீ. எழுத்து : தமிழ். கி. எண்ணிக்கை : 700. ஆசிரியர் : அகத்தியர். முழுமை : முற்றும்.

## குறிப்பு

இது எமது சுவடி எண்கள் 235(e), 367(d)போன்றது. பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன.

# வேண்டுகோள்

கருணையுள்ளங் கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**T. R. இராமசாமி, I. A. S.,**

மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,

17—6—86.